கல்கி



KALKI 3.5.1964 30 காசு


MAFATLAL GROUP


ஹார்லிக்ஸ் செய்யும் நன்மைக்கு ஒரு உதாரணம் :
எனக்கு அஷ்டமத்தில் சனி
ஆறாம் இடத்தில் குரு—
என் காரியங்கள் எப்படி உருப்படும்!
“உன் உடம்பு தள்ளாமைக்கு ஜாதகத்தை ஏன் பார்க்க வேண்டும்! என்று உரிமையுடன் கடிந்து கொண்டாள் சம்பு சித்தி.” ஓய்ச்சலும் அசதியுமாய் ஒரு வேலையையும் கவனிக்க முடியாமல் இருப்பதற்கு நீ பார்க்க வேண்டியது டாக்டரைத் தான்.” என்றாள். “டாக்டர் என்ன சாதித்துவிடப் போகிறார்!” என்றேன். ஆனால் சித்தி விடாப் பிடியாக என்னை டாக்டரிடம் போகவைத்தாள்
டாக்டர் சொன்னார்: “உங்கள் உடம்பில் ஏதும் கோளாறு இல்லை; உடலுக்குத் தேவையான போஷாக்குக் கிடைப்பதில்லை என்பதின் அறிகுறிகள் தான் சோர்வும் அசதியும். தினமும் ஹார்லிக்ஸ் பருகுங்கள்.” அன்றிரவு இதைப் பற்றி ஜோஸ்யர் சர்மாவிடம் கேட்டேன். “டாக்டர் சொல்வதைச் செய்யும்,” என்றார் அவர்
சந்தேகத்துடன்தான் அன்று முதல் ஹார்லிக்ஸ் அருந்த ஆரம்பித்தேன்; ஆனால் பலன் உடனுக்குடன் தெரிந்தது! இப்பொழுதெல்லாம் தெம்பும் சுறுசுறுப்புமாய் இருக்கிறேன். சம்பு சித்திக்கு ஒரே ஆச்சரியம்! டாக்டர் என்னை ஹார்லிக்ஸ் பருகும்படி சொன்னது என் ஜாதக விசேஷம் தான்!
HORLICKS
ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!


நல்ல வர்ஜீனியாப்
புகையிலை என்றால்
ஒரு நல்ல சிகரெட்டு
பனமா
ஒரு நல்ல சிகரெட்டு
Panama
20
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
CIGARETTES
GTC


கல்கி பொருளடக்கம்


குரோதி, சித்திரை 21 மே 3

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மூஷிகர்: இந்தக் காலத்தில் வேலை நிறுத்தம் செய்யாதவர்களே இல்லை! பெல்ஜியத்தில் டாக்டர்கள்கூட வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்! இந்தப் 'பாஷ'னைப் பின்பற்றிக் காங்கிரஸ் மந்திரிகள் கொஞ்ச நாளைக்கேனும் வேலை நிறுத்தம் செய்யக் கூடாதோ?


இந்தக் கனமான பெட்டியை எறிந்து விட்டுப் படகைக் காப் பாற்றுவதே மேல் என்று தோன்றுகிறது
காஷ்மீர்
PK


எங்க அப்பாவிற்குப் பிறகு நான் அந்தக் காரை விடுவதாக உத்தேசமில்லை
சோஷலிஸம்
காங்கிரஸ் சர்க்கார்
ஜனநாயகம்



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 40

'கல்கி'க்குத் தோல்வி இல்லை

'அருப்புக்கோட்டைத் தேர்தல் முடிவு 'கல்கி'ப் பத்திரிகையின் தோல்வி. குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற முறையில் விமரிசனம் செய்யாதீர்' என்று ஒரு நேயர் காரசாரமாக எழுதி யிருக்கிறார்.

நமது பத்திரிகை குப்புற விழுந்ததாக நாம் எண்ணவே இல்லை. அப்படி ஏதேனும் நிலை தடுமாறிக் கீழே விழுந்திருக்குமாயின் அது நமது தேர்தல் முறை தான். எனவே தோல்வியும் 'கல்கி'க்கு அல்ல; நாம் அநுசரிக்கும் தேர்தல் முறைக் கேதான். அதிகார பலம், பண பலம், ஜாதி அபிமானம் முதலியவற்றைத் தூண்டி விட்டு வெற்றி பெறுவது சாத்தியமாக யிருக்கும் நிகழ்காலச் சூழ்நிலையை ஜனநாயகத் தேர்தல் முறையின் தோல்விக் காலம் என்றுதான் கூறவேண்டும்.

எந்தக் கட்சியின் கொள்கைகளையுமே எல்லா மக்களும் பூரணமாகப் புரிந்து கொண்டு வாக்களிப்பதாக நாம் சொல்லவில்லை. என்றாலும், வேறெந்தக் கட்சிக்கும் இல்லாத தியாக சரித்திரமும், ஆட்சியிலிருப்பதன் பலனான அதிகாரச் செல்வாக்கும், அதன் மூலம் கிடைக்கும் திரவிய பலமும் காங்கிரஸுக்கு மட்டுமே உரிய பெருந்த வாய்ப்பு என்பது ஆட்சேபிக்க முடியாத விஷயம். வகுப்பு மனப்பான்மைகளைத் தூண்டி விட்டு வோட்டு வேட்டையாடுவதிலும் காங்கிரஸ்தான் முன்னணி வகிக்கிறது என்பதும் யாவரும் கண்ட விஷயம். இத்தனை 'அநுகூல'ங்கள் அதற்கு இருந்தும் நமது சூது வாதறியாத எளிய பாமர மக்கள் காங்கிரஸின் நானாவித வஞ்சனைகளுக்கு ஆளாகாமல் ஓர் எதிர்க்கட்சிக்கு வோட்டளித்தார்கள் என்றால், அந்த வோட்டு ஒவ்வொன்றும் காங்கிரஸ் பெறும் வோட்டைப்போல் பதின்மடங்கு மதிப்புடையது. எதிர்க் கட்சியின் கருத்துக்களை மக்கள் பூரணமாக அறிந்திராவிட்டாலும் கூட, காங்கிரஸ் ஆட்சி வேண்டாம் என்பதைத் திடமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களின் ஒவ்வொரு வோட்டும் நிச்சயமாக நிரூபிக்கிறது.

இவ்வாறு பார்க்கும்போது, அருப்புக்கோட்டையில் சுதந்திரா — பார்வர்ட்பிளாக் அபேட்சகராகிய திரு வேலாயுத நாயர் ஒரு லட்சத்து முப்பதாயிரம் வோட்டுக்களைப் பெற் றிருப்பது சாமானிய விஷயமல்ல. வெற்றி பெற்ற இராமநாதபுரம் இளைய மன்னர் இதைவிட 7000 வோட்டுத்தான் அதிகம் பெற்றுள்ளார். மொத்தம் பதிவான சுமார் மூன்று லட்சம் வோட்டுக்களில் இது இரண்டு சத விகிதமேயாகும்.

தேவர் வகுப்பாரின் ஆதரவைப் பெறுவதற்காக ஒரு தேவரை அபேட்சகராக நிறுத்திய திரு காமராஜ் அவர்கள், தமது அபேட்சகருக்கு எல்லா நாடார்களின் ஆதர வையும் பெற்றுத் தருவதற்காகப் பிரத்தியேகக் கூட்டங்கள் கூடப் போட்டதாகத் தெரி கிறது. மந்திரிமார்கள் தொகுதியில் உட்கார்ந்து தங்களுடைய சகலமான ஆட்சி அதிகாரச் சின்னங்களுடன் நீண்டகால முற்றுகை யிட்டார்கள். பணம் தண்ணீர் பட்ட பாடாகப் புரண்டது. எதிர்க் கட்சி அபேட்சகர் 'மலையாளி நாயர்' என்ற வகுப்புவாதப் பிரசாரமும் நடந்தது. ஆயினும் காங்கிரஸின் வாக்கு எண்ணிக்கைக்குக் கிட்டதட்ட சமமாகவே ஏழைக் கட்சி அபேட்சகர் பெற்றார். இதில் பெருமை அடைகிறோம்.

மக்கள் தர்மத்தையும் சத்தியத்தையும் நேர்மையையும் போற்றுவார்கள் என்று 'கல்கி' நம்பியதால் அருப்புக்கோட்டையில் காங்கிரஸுக்குப் பலத்த அடி கிடைக்குமென

எதிர்பார்த்தது. தர்ம பலத்தை விடப் பௌதிக பலம்தான் நம் தேர்தல் முறையை இன்னமும் ஆட்டி வைக்கிறது என்பதே இப்போது நாம் கண்ட முடிவு. 'இரகசிய வாக்களிப்பு முறைக்குப் பதிலாகப் பகிரங்கமாகவே வாக்களிப்பது என்ற முறையைப் பின்பற்றினுல் இப்போது பணத்துக்காக வோட்டுப் போடுபவர்கள் தங்கள் சகாக்கள் பார்த்துச் சிரிக்க அந்த ஈனத்தைச் செய்ய மாட்டார்கள்; அபேட்சகர்கள் கொடுமை செய்யக் கூடும் என்பதற்காக இரகசிய வாக்கெடுப்புச் செய்வதைவிட, பணம் செய்யும் பெரும் கொடுமையைத் தவிர்ப்பதற்காகப் பகிரங்க வாக்கெடுப்பு செய்வது சிலாக்கியமாயிருக்கும்' என்று ராஜாஜி எழுதுமளவுக்குத் தேர்தல் முறை நம் நாட்டில் தோல்வி அடைந்திருக்கிறது. வேலாயுத நாயரோ கல்கியோ தோல்வி அடையவில்லை.

ஜயப்பிரகாசருக்கு ஜே!

தேச பக்தி என்பது வெறும் உணர்ச்சிக் குழப்பமல்ல என்று சென்ற இதழில் ராஜாஜி கூறியதையே வேறு வார்த்தையில் கூறும் ஸ்ரீ ஜயப்பிரகாசர், காச்மீர மக்களின் கருத்தின் மீதே அந்நாட்டின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற ஷேக் அப்துல்லாவின் கருத்தில் தவறேதுமில்லை என வலியுறுத்தியிருக்கிறார். 'காச்மீர மக்கள் இந்தியாவுடன்தான் இணைய விரும்புகிறார்கள் என்பது உறுதியாகி விட்டது' என்று தில்லி கூறுவது ஒரு பொய் என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார் அவர். தான் எதை விரும்புகிறதோ, அதுவே உண்மை நிலை என்று தில்லி சாதிக்கிறது என்றும் ஸ்ரீ ஜயப்பிரகாசர் கூறியுள்ளார். இந்தியாவில் உருவாகி வரும் மாய தேச பக்தி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல் இவ்வளவு துணிவாகத் தமது கருத்தைக் கூறிய ஜயப்பிரகாசரை மனதார வாழ்த்துகிறோம்.

சமீபத்தில் ஜம்ஷெட்பூரிலும் ரூர்கேலாவிலும் சிறுபான்மை வகுப்பினருக்கு இந்துக்கள் இழைத்த கொடுரங்களையும் ஸ்ரீ ஜயப்பிரகாசநாராயணர் தர்ம உணர்ச்சியுடனும் துணிவுடனும் வெளியிட்டுள்ளார். 'பாகிஸ்தானைவிட நாம் புனிதமானவர்கள்போல் பேசிப் பயனில்லை. இந்தியாவில் நடைபெற்ற இனத் துவேஷக் கொடுமையைப் பற்றி அதிகார பூர்வமான ஒரு குழுவைக் கொண்டு ஆராய வேண்டியது பார்லிமெண்டின் கடமை' என்று அவர் சபாநாயகருக்கு எழுதியுள்ளார். 'ஸ்ரீ ஜயப்பிரகாசரைப்போலச் சிலர் நம்மிடையே இருப்பது நமது நல்லதிருஷ்டம்' என்று ராஜாஜி ஜம்ஷெட்பூர் சம்பவங்களைப் பற்றித் துக்கம் மேலிட்டு எழுதுகிறார்.

இன்றும் இதயகத்தமுள்ள ஒரு சிலர் அரசியலில் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் ஆறுதலும் ஆசுவாசமும் பெறுகிறோம்.

என்ன சேதி?

லஞ்ச ஒழிப்புக்கு இதுவா வழி?

லஞ்ச ஒழிப்புக்கு உதவும் முறையில் 'தாமதமில்லாமல் எளிதில் எடுக்கக் கூடிய' சில முயற்சிகளைத் தில்லி சர்க்கார் மேற்கொண்டிருக்கிறதாம். பெர்மிட் — லைசென்ஸ் வழங்கும் மந்திரி காரியாலயங்களில் இப்போதுள்ள உத்தியோகஸ்தர்கள் போதாதென்று புதிதாக விசாரணை அலுவலகங்கள் அமைப்பது இந்த மகத்தான முயற்சிகளில் ஒன்று! அதாவது ஆபீஸ்களும், அதிகாரிகளும் அதிகமாவார்கள்! லஞ்ச உற்பத்தி ஸ்தானங்களும், லஞ்சப் பங்குதாரர்களும் அதிகமாவார்கள்! பெர்மிட் லைசென்ஸ் பெற விரும்புவோர் முதலில் விசாரணை நிலையப் பூசாரிகளுக்குக் காணிக்கை செலுத்திவிட்டு, பிற்பாடு மூலஸ்தான மந்திரிகளைக் காண வேண்டும். அவ்வளவுதான் வித்தியாசம்.

சுதந்திரக் கட்சி விரும்புவதுபோல் நீதிமன்றத்துக்கும், பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கும் சமமான அந்தஸ்து பெற்ற பெர்மிட் — லைசென்ஸ் போர்டு நிறுவ ஆட்சியாளருக்கு மனமில்லை. தங்களுக்குள்ள செல்வாக்கை ஓர் அணுவும் குறைத்துக் கொள்ள அவர்கள் ஒரு போதும் ஒப்பமாட்டார்கள். லஞ்ச ஊழல் எப்படிக் குறையும்?

கருத்திருமனின் கருத்து

"நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன்; விவசாயத்தில் ஈடுபட்ட

வன். கல்லூரியில் விவசாய பாடத்தை எடுத்துப் படித்துப் பட்டம் பெற்றவன். ஆயினும் என் மக்கள் பிற்காலத்தில் என் நிலங்களைப் பெற்று விவசாயத்தில் ஈடுபடுவதைவிடத் துறைமுகத் தொழிலாளர்களாக வேலை செய்வது மேல் என்று மதிப்பேன்!'' என்று மிகக் கடுமையான பாஷையைப் பிரயோகித்து மக்கள் சபையில் பேசியிருக்கிறார் திரு பி. ஜி. கருத்திருமன் அவர்கள். இவர் கோபிச் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர். காங்கிரஸ் அரசாங்கமானது உச்சவரம்பு என்றும் கூட்டுறவுப் பண்ணை என்றும் சட்டங்கள் செய்து விவசாயத் துறையில் இழைத்துள்ள அநீதிகளை அநுபவிக்கும் ஒவ்வொரு விவசாயியும் வயிறெரிந்து இப்படித்தான் பேசுவார். அது சரி; ஆனால் இவ்வளவு தீவிரமாகக் காங்கிரஸின் நிலக்கொள்கையை எதிர்க்கும் கருத்திருமன் போன்றவர்கள் காங்கிரஸிலேயே இருப்பானேன்?

சுவர்க்க மந்திரி டி. டி. கே!

'விவசாயிக்கு நியாயவிலை கிடைக்க நிதி மந்திரி என்ன செய்திருக்கிறார்? பொதுமக்களின் வரிச் சுமை குறைய அவர் செய்திருப்பது என்ன? பணவீக்கத்தைக் குறைக்க நிதிமந்திரி என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்?' என்றெல்லாம் பல ஆணித்தரமான வினாக்களை மக்கள் சபையின் நிதி மசோதா விவாதத்தின் போது ஆசாரிய ரங்கா அள்ளி வீசினார்.

இவற்றுக்கெல்லாம் பதில் வைத்திராத நிதிமந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், ''ஒரே மூச்சில் ஸ்ரீ ரங்கா கேட்டுள்ள இத்தனை வினாக்களுக்கும் என்னால் விடை சொல்ல இயலாது. அவர் இதை விடுத்து, 'சுதந்திரக் கட்சிக்குச் சுவர்க்கத்தில் இடமுண்டா?' என்று ஒரு கேள்வி போட்டிருந்தால் போதும். 'கிடையாது' என்று பதில் சொல்லி விருப்பேன்'' என்று 'விகடம்' செய்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சி சுவர்க்க போகத்துக்கும், தில்லி சிம்மாசனத்துக்கும் ஒரு போதும் ஆசைப்பட வில்லை. ஏழை மக்களுக்குத் தொண்டு புரியும் பாக்கியத்தைத்தான் அது விரும்புகிறது. என்றாலும் ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் பிரதமர் நேருவின் மந்திரி சபைக்கு மட்டும் பிரதிநிதியாக இராமல், பரந்தாமனின் சுவர்க்க பூமிக்கும் மந்திரியாகி, அங்கும் தமது சலுகை ஆட்சியை நடத்தி இன்னாருக்கு இடமளிக்கலாம், இன்னாருக்கு இடமளிக்கக் கூடாது என்றெல்லாம் முடிவுகட்டுவது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம்: விசுவரூபமெடுத்து வளர்ந்து வரும் ஸ்ரீமான் டி. டி. கே. யும் அவரது சோஷலிஸ சித்தாந்தமும் சுவர்க்கத்தையும் வியாபிக்கக் கூடுமானால், அப்போது அந்த சுவர்க்கத்தை

பாரதிதாசன் அமரரானார்!

பாரதி பரம்பரையின் மூத்த வாரிசாகக் கருதப்படுகிற கவிஞர் பாரதிதாசன் 21-4-64 செவ்வாயன்று காலையில் அமரராகிவிட்டார். உலக மகா கவி ஷேக்ஸ்பியரின் நானூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் தமிழ்நாட்டின் தலைசிறந்த கவிஞர் ஒருவரைப் பறிகொடுத்த துயரத்தை நாம் அடைந்துவிட்டோம். பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, பாரதிதாசன் கவிதைகள் போன்ற காவியங்களின் மூலம் அவர் நம்மிடையே என்றும் அமரராக வாழ்வார் என்று இனி நாம் நம்பலாம். புரட்சிகரமான எண்ணமும் சீர்திருத்தக் கருத்து ஓட்டமும் உள்ள கனக சுப்புரத்தினம் என்னும் இயற்பெயருடைய கவிஞர் பாரதிதாசன் 1891ம் ஆண்டு பாண்டிச்சேரியில் பிறந்தார். நீண்டகாலம் தமிழாசிரியராகவும் பணி புரிந்தார். மகா கவி பாரதியார்மேல் தமக்குள்ள பக்தி காரணமாகத் தம் பெயரையே பாரதிதாசன் என்று வைத்துக் கொண்ட இந்தக் கவிஞரின் முதல் கவிதையான 'எங்கெங்குக் காணினும் சக்தியடா ஏழு கடல் அவன் வண்ணமடா' என்ற பாட்டைப் பாரதியாரே அந்தக் காலத்தில் சுதேச மித்திரன் பத்திரிகைக்கு அனுப்பி வைத்து மகிழ்ந்திருக்கிறார். கவிஞர் பாரதிதாசனுக்கு ஒரு புதல்வரும், மூன்று பெண் மக்களும் உள்ளனர். அவருடைய மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கும், தமிழ்க் கவிதையன்பர்களுக்கும் நமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



திரு பாரதிதாசன்

யும் சுதந்திரக் கட்சி நரகமாகவே கருதி நிராகரித்துவிடும்.

சுதந்திரக் கட்சியானது தன் பாவங்களை மறைக்கப் பெரும் பெயர் சூட்டிக் கொண்டுள்ள ஒரு கட்சி என்றும் திருவாய் மலர்ந்திருக்கிறார் டி. டி. கே. சுதந்திரக் கட்சி என்ற புதிய பெயரில், புதிய கொடியுடனும், புதிய திட்டங்களுடனும் ஒளிவு மறைவின்றிப் பணியாற்றி வருகிற ஒரு கட்சியைப் பற்றி, காங்கிரஸ்—காந்திஜி என்ற பழம் பெயர்களையும் சின்னங்களையும் பயன்படுத்தித் தனது பாவத்தை மறைத்துக்கொண்டே, முற்றிலும் மாறுபட்ட திசையில் செல்லும் ஆளும் கட்சியின் தலைவர் ஒருவர் இப்படிப் பேசியிருப்பது விந்தையிலும் விந்தைதான்!

மூடு விழா!

சென்ற எட்டு ஆண்டுகளாக நடந்து வந்த திருப்பராய்த்துறை தபோவனத்திலுள்ள ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியை வருகிற கல்வி ஆண்டிலிருந்து மூடிவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இது வரை கல்லூரியின் முழு நிர்வாகச் செலவை ஏற்று வந்த சர்க்கார் இனி 75 சதவிகிதம்தான் தர இயலும் என்று கூறிவிட்டனர். மிகுதியுள்ள 25 சதவிகிதத்தைக் கல்லூரி சரிக்கட்டிக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதால் கல்லூரியை மூடிவிடப் போவதாக நிர்வாகிகள் அறிவிக்கின்றனர்.

இன்று நாட்டில் ஊதியம் மிக மிகக் குறைவாகக் கிடைக்கும் தொழில் ஆசிரியர் தொழில். பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வரவே அஞ்சுகின்றனர். இந்நிலையில் ஏதோ ஒரு கல்லூரி பல கஷ்டங்களிடையே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அளித்து வந்தால் அதனைச் சர்க்கார் அனுதாபத்தோடு தான் நோக்க வேண்டும். எட்டு ஆண்டுகளுக்கு முன் ராஷ்டிரபதி தொடங்கி வைத்த கல்லூரியை மூடிவிடச் செய்வது சென்னை சர்க்காருக்கு அழகல்ல. எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய் வீணாகச் செலவு செய்யும் சர்க்கார் இதற்காகச் செலவிடுவதைப் பொது மக்கள் யாரும் குறை சொல்ல மாட்டார்கள்.

அமெரிக்கா செல்லும் இசையறிஞர்

சங்கீத பூஷணம் ஸ்ரீ எஸ். ராமநாதன் அவர்களின் பெருமையை அறியாதவர் இருக்கலாம்; ஆனால் அறிந்தவரோ அறியாதவருக்குமாகச் சேர்த்து அவரைப் போற்றிக் கொண்டாடுவார்கள். அப்படிப்பட்ட நுட்பமான இசை அறிவு பெற்றவர் ஸ்ரீ ராமநாதன் அவர்கள். பொதுமக்கள் அவரைப் பற்றி அதிகம் அறிந்திராததற்கு இந்த நுட்ப அறிவு மட்டும் காரணமல்ல. அவரது அமரிக்கையும் காரணமாகும். இசையறிவும் அமரிக்கையும் பொருந்திய ஸ்ரீ ராமநாதன் அவர்கள் சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்றிருப்பது கலா ரசிகர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டியுள்ளது. சான்றோர் சிலர் அமெரிக்கா போன்ற வெளி நாடுகளில் புகழெடுத்த பின்னரே இந்தியா அவர்களது பெருமையை உணர்ந்ததுண்டு. ஸ்ரீ ராமநாதன் விஷயத்தில் இது மீண்டும் மெய்யாக வேண்டுமென விரும்புகிறோம்.



ஸ்ரீ எஸ். ராமநாதன்

ஸ்ரீமான்கள் சபேசய்யர், பொன்னையா பிள்ளை, டைகர் வரதாச்சாரியார், சாத்தூர் கிருஷ்ண அய்யங்கார் ஆகியோரிடம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சங்கீத அப்பியாசம் செய்த ராமநாதன் காரைக்குடி சாம்பசிவய்யரவர்களிடம் வீணை பயின்றார். வாய்ப்பாட்டில் வீணையின் குழைவையும், வீணையில் வாய்ப்பாட்டின் முறிவற்ற போக்கையும் அளிக்கக் கற்றார். சிலப்பதிகார இசை, தியாகராஜ உத்ஸவ சம்பிரதாயக் கீர்த்தனங்கள், அழகர் குறவஞ்சி, காவடிச்சிந்து முதலியவற்றில் ஆராய்ச்சிகள் புரிந்துள்ள ராமநாதன் 'சங்கீத சம்பிரதாய பிரதர்சினி'யின் தமிழ் மொழிபெயர்ப்பு மூலம் இசைக் கலைக்கு அருந்தொண்டாற்றியுள்ளார்.

கர்நாடக சங்கீத மத்திய கல்லூரியில் விரிவுரையாளராக உள்ள ஸ்ரீ ராமநாதன் அவர்கள் கன்னெக்டிகட்டிலுள்ள வெஸ்லியன் சர்வ கலாசாலையின் அழைப்பை ஏற்று, ஏப்ரல் 12ந் தேதியன்று அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு சுமார் பதினெட்டு மாதங்கள் சுற்றுப் பயணம் செய்து கர்நாடக இசையை வாய்ப்பாட்டிலும் வீணையிலும் கற்றுக் கொடுப்பார். ஸ்ரீ ராமநாதனின் மேல்நாட்டுப் பயணம் பயன் செறிந்ததாவதற்குக் கலைவாணி அருள் புரிவாளாக!

ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்கள் நமது மாநிலத்தின் கவர்னர் பதவியிலிருந்து விலகி, மைசூர் மகாராஜா ஸ்ரீ ஜய சாமராஜ உடையார் அவர்கள் அப்பதவியை ஏற்கிறார்கள். தமிழகத்துக்குப் புதியவராக வந்து, காலக்கிரமத்தில் நமது அன்பையும், மதிப்பையும் குறைவறப் பெற்ற மேதி அவர்களுக்குப் பிரியாவிடை அளிக்கிறோம். முன்பே நம் பேரன்பையும் பெரு மதிப்பையும் பெற்று, அவற்றை மேலும் பெருக்கிக் கொள்ளப் போகிற மைசூர் மன்னருக்கு உளமார்ந்த நல்வரவு கூறுகிறோம். இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கும் புது கவர்னரை மைசூர் மாநிலத்தின் பெருமக்களில் ஒருவரான ஸ்ரீ டி. வி. குண்டப்பா அவர்கள் மூலம் நேயர்களுக்குப் பரிசயம் செய்கிறோம்.

வேந்தருள் ஒரு வேதாந்தி

— டி. வி. குண்டப்பா —

மன்னருள் ஒரு மாமன்னரான மைசூர் மகாராஜா ஸ்ரீ ஜயசாமராஜ உடையாரை கவர்னராகப் பெற்றதற்காக மைசூர் மக்கள் தமிழர்களை மனமாரப் பாராட்டுவார்கள். இந்திய சமூக வாழ்வுக்கும், உலக முழுவதன் பண்பாட்டு வாழ்வுக்கும் மைசூர் அளிக்கக் கூடிய தலைசிறந்த பரிசு ஸ்ரீ ஜயசாமராஜ உடையார் அவர்கள்தான். எண்பதாண்டுகளுக்கு முன் மைசூரை ஒரு பெருமை பொருந்திய பாரத சம்ஸ்தானமாக்குவதற்கு அடித்தளம் அமைத்த ஸ்ரீ ரங்காச்சார்லுவை அந்த ராஜ்யத்தின் முதல் திவானாகவும், அவருக்கு அடுத்த திவானாக ஸர் கே. சேஷாத்ரி ஐயரையும் தமிழகத்திடமிருந்து பெற்றதற்கு இப்போதுதான் தன்னால் பிரதி செய்ய முடிகிறது என்று மைசூர் மகிழ்கிறது.

பிரத்தியேகமான பல சிறப்பியல்புகளும், பாரம்பரியமான தேச பக்தியும், சமூக உணர்வும் ஒன்றாகப் பெற்றவர் ஜயசாமராஜ உடையார். அவரது தந்தை ஸ்ரீ கண்டீரவ நரஸிம்மராஜ உடையார் மைசூரின் இளைய ராஜாவாக இருந்தவர். அவர் மெத்தப் படித்தவர்; பல நாடுகள் கண்டவர்; நாட்டு நடவடிக்கைகளில் முற்போக்கான நோக்க முள்ளவர்; பொதுச் சேவை செய்வதற்குத் தமது ஸ்தானம் அளித்திருந்த வாய்ப்பை நிறைவேற்றுவதில் உற்சாகம் காட்டியவர்.

பேரன்போடு நினைவில் போற்றப்படும் நான்காவது கிருஷ்ண ராஜ உடையார் அவர்கள்தான் கண்டீரவ உடையாரின் மூத்த சகோதரர். அவர் சிறந்த கல்விமான். முன்னணியில் நின்ற ஆட்சி நிபுணருமாவார்.

கல்வியில் சிறந்த ஈடுபாடு காட்டுவதும் மக்களின் லௌகிக சுபிட்சத்தோடு நில்லாமல் அவர்களின் தர்ம வாழ்வில் அக்கறை செலுத்துவதும் மைசூர் ராஜ வம்சத்தின் பல நூற்றாண்டு மரபு.

ஜயசாமராஜ உடையாரின் முன்னோர்களில் பலர் தாமே இலக்கியகர்த்தர்களாக இருந்திருக்கிறார்கள். எல்லோருமே இலக்கியம், இசை, இதர கலைகள் ஆகியவற்றின் பேர் ஆதரவாளரா யிருந்திருக்கின்றனர். மைசூர் அரச பரம்பரையில் பலர் சுயநலக் கலப்பின்றி தர்மத்துக்கும், ஆண்டவன் பணிக்கும் தங்கள் உடைமையை யெல்லாம் அளித்தவர்கள். இவர்களில் ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் ஓர் ஆதர்ச அரசராக விளங்கினார். அவரது செல்வத்தின் ஒவ்வொரு ரூபாயும், அவரது பொழுதின் ஒவ்வொரு நிமிஷமும் உயர்ந்ததொரு தார்மிகப் பணிக்கே உபயோகமாயிற்று. தமது மதத்தின் உன்னத இலட்சியங்களில் இதயத்தைப் பதித்தும், தமது சம்ஸ்தானத்தின் நடைமுறைப் பிரச்னைகளில் அறிவைப் பதித்தும் முனிவராக வாழ்ந்தவரவர். தமது தந்தையான சாமராஜ உடையார் போலவே அவர் ராஜநீதிகளுக்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு ஆட்சியில் தமது பங்கைச் செலுத்தினார். அரசியல் அறிவு நுட்பத்துக்கும், கல்வி, மராமத்து முதலிய துறைகளின் முன்னேற்றத்துக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும், அவரது நாற்பதாண்டு ஆட்சிக் காலம் பெயர் பெற்றது. அவர் வழிகாட்டி உதவியதன் மீதே திவான்கள் மைசூர் ராஜ்யத்தை ஒன்று சேர்த்துப் பலப்படுத்தினார்கள். மந்திரிமார்களின் சுதந்திரச் சிந்தனையிலோ முடிவுகளிலோ அவர் ஒரு முறைகூடத் தலையிட்டதில்லை. இங்கிலாந்து மன்னர் எப்படி ஆட்சி புரிகிறாரோ, அந்த முறைக்குக் காலஞ்சென்ற மைசூர் மன்னரும் தாமாகவே கட்டுப்பட்டு மந்திரிகளுக்கு அவசியமான யோசனையும் எச்சரிக்கையும் மட்டும் அளித்தார். அவர்கள் நிதானமிழக்கக் கூடிய சமயத்தில் அவர்களை நிதானப்படுத்தியும், மாற்றுத் திட்டங்களை எடுத்துக் கூறியும் உதவி புரிந்தார். மந்திரிகளின் திட்டங்களை அங்கீகரிக்கும் போதும், அபூர்வமாக எப்போதேனும் அவர்களின் முடிவைத் தள்ளிப் போடும் போதும் மன்னர் மக்கள் கருத்தை ஒட்டியே செயலாற்றுவார். பிரதிநிதிகள் சபையிலும், சட்டசபையிலும், பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் வெளியாகும் கருத்துக்களின் மீதே தமது முடிவை உருவாக்குவார். மக்களின் மனப் போக்குகளை மிகவும் விழிப்போடு உன்னிப்பாகக் கவனித்து வந்தாரவர்.

அறிவுக் கூர்மையும், உதார குணமும் வாய்ந்த இவர்தான் நமது ஜயசாமராஜ உடையார் அவர்களை வளர்த்துக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர். தமக்குப் பின் மைசூர் ஆட்சியை ஏற்கப் போகிற ஜயசாமராஜர் மகத்தானதொரு பரம்பரையின் தகுதி வாய்ந்த வாரிசாக இருக்க வேண்டுமென்பதில் அவர் மிகுந்த சிரத்தை கொண்டார். தம்பி மகன் தினந்தோறும் காலத்தை எப்படிச் செலவிட வேண்டும்

என்பதற்கு அடிநாளிலேயே திட்டம் வகுத்தாரவர். சம்ஸ்கிருதம், ஆங்கிலம், கன்னடம், சங்கீதம், சரித்திரம், அரசியல் சாஸ்திரம், பொருளாதாரம் ஆகியவற்றைத் தேர்ந்த அறிஞர்கள் மூலம் இளவரசருக்குக் கற்பித்தார். விடியற்காலையிலிருந்து இரவுவரை யுவராஜரின் தினசரி நடவடிக்கைகளைத் திட்டவட்டமாக்கி ஒவ்வொரு மணியையும் ஒரு பணிக்கு அல்லது பயனுள்ள பொழுது போக்குக்கு என ஒழுங்குபடுத்தினார். இளவரசர் ஒரு நிமிடமும் சோம்பியிருந்ததில்லை.

அரச குடும்பத்தினர் என்பதால் ஸ்ரீ ஜய சாமராஜர் பொதுமக்களிடமிருந்து பிரித்து வைக்கப்படவில்லை. மற்ற மாணவர்களைப் போலவேதான் அவரும் பொதுக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். ஈடுபாட்டுடன் கல்வி கற்றார். சக மாணவர்களைத் தமது தோழர்களாகவே கருதினார். ஆசிரியர்களிடமும், சகமாணவர்களிடமும் பெரும் நேசத்தைப் பெற்றார். யுவராஜரின் மென்மையையும், நட்புப் பான்மையையும், எளிமையையும், கடினமான விஷயங்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும் எல்லோரும் போற்றினார்கள். பட்டப் பரீட்சையில் சிறப்பாகத் தேறினார் ஸ்ரீ ஜயசாமராஜர். இதைப் பற்றி ஒருவர் சந்தேகம் எழுப்பினார்: சொந்தத் தகுதியின் மீதேதான் அவருக்குச் சிறப்பிடம் தரப்பட்டதா என்று. சந்தேகத்தைத் தீர்க்க ஏராளமான சான்றுகள் உடனே அளிக்கப்பட்டன. இளவரசரின் ஆசிரியரும், பரீட்சாதிகாரியும் இந்த ராஜவம்ச மாணவனின் தேர்ந்த அறிவுக்குச் சான்றுகூறி, சந்தேகத்தைக் கிளப்பியவர் தாமே இளவரசரின் திறமையைப் பார்த்துக் கருத்துத் தெரிவிக்கலாமெனத் தைரியமாகக் கூறினர். ஐயம் கொண்டவர் பூரண திருப்தி அடைந்து, சந்தேகப்பட்டதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

ராஜப் பிரமுகரானதிலிருந்து ஸ்ரீ ஜயசாமராஜ உடையாரவர்கள் ராஜ்ய விவகாரங்களை மிகவும் கௌரவமான முறையில் கவனித்து வருகிறார். ராஜ்யத் தலைவர் என்ற முறையில் அரசியல் சட்ட விதிகளுக்கு இணங்கி நடந்து வந்திருக்கிறார். மந்திரிகளின் வேலைகளுக்கு அவர் தடையாயிருந்ததில்லை. அவசியமேற்படும்போது, அவர்களை விஷயங்களை மீண்டும் பரிசீலனை செய்து பார்க்க உதவும் விவேகமான யோசனைகளை மட்டுமே கூறுவார். மந்திரிகளின் அதிகாரத்துக்குட்பட்ட விஷயங்களில் அவர்களுக்குப் பூரண சுதந்திரம் அளிப்பதிலும், சிறு விஷயங்களிலும் அவர்களுக்குரிய மரியாதையைக் காட்டுவதிலும் சிறந்து விளங்குபவர் ஸ்ரீ ஜயசாமராஜர். பொது மக்களிடம் அவர் பெற்றுள்ள புகழ் காரணமாக மந்திரிகள் அவரது கருத்துக்களைப் பொது நலனுக்குகந்தவை என்று கருதி, நல்ல முறையிலேயே எடுத்துக்கொள்கிறார்கள் என்று நாம் நிச்சயமாகச் சொல்லலாம். பொதுமக்களிடம் பண்போடு பழகுவதில் ஆதர்ச புருஷராகக் காட்டக் கூடியவர் ஸ்ரீ ஜய சாமராஜ உடையார். மிகவும் எளியோரிடமும் அவர்களுக்கு உரிய — அல்லது, அதற்கும் மேலான — அநுதாபத்தையும் அன்பையும் காட்டுபவர் அவர்.

அவர் உலக நாடுகளிலெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்தவர். அந்நாட்டு சமூக, அரசியல் நிலைமைகளையெல்லாம் கூர்ந்து கவனித்தவர். இவ்வாறு அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளுக்கு அடிக்கடி சென்று அந்த நாகரிகங்களும் சமுதாயமும் எப்படி வளருகின்றன என்பதைக் கவனித்து வருபவராயினும் மைசூர் மன்னரவர்கள் நமது ரிஷிகளின் மகத்தான தத்துவங்களிலும், ஞான ஒளியிலுமே ஜீவாதாரமான பெருமையைக் காண்கிறார் என்பது மிகவும் குறிப்பிடத் தக்கது. அவர் வேதாந்தத்தை மதமாகக்கொண்டவர். வேதாந்தத்தை வாழ்ந்து காட்டும் வேதாந்தி அவர். மதாசாரங்களைச் சிரத்தையுடன் பின்பற்றுபவர். தமது முந்தையரின் அநுஷ்டானங்களைக் கடைப் பிடிப்பவர். அதே சமயம் பொது மக்களின் நம்பிக்கைகளிலும் பங்கு கொள்பவர். தமது சொந்த ராஜ்யத்திடம் பெரும் பற்றுக் கொண்டவர். தாய் மொழியான கன்னடத்தின் அபிவிருத்தியில் ஆழ்ந்த ஈடுபாடு உள்ளவர்.

ஸ்ரீ ஜயசாமராஜ உடையார் அவர்களுடன் ஒரு சில நிமிஷங்கள் தொடர்பு கொண்டாலே போதும், பண்பின் பரிசயத்தைக் கண்டோம் என்று அறிய. என் கருத்தில் — பட்சபாதம் எதுவுமில்லாத கருத்து இது — ஸ்ரீ ஜய சாமராஜ உடையாரவர்கள், இன்று இலட்சியவாதிகள் கனவு காணும் அறிவொளிகூடிய சமூக யுகத்துக்கும், ஆன்மாவை மையமாகக் கொண்ட வாழ்முறைக்கும் ஒரு முன்னோடியாவார்.

அரசியல் அமைப்புக்குப் பூரணமாக இணங்கிய ஒருவரை, அகில பாரதத்தின் உண்மைப் பிரமுகர் ஒருவரைக் கவர்னராகப் பெற ஆசை கொண்ட தமிழ் மக்கள் யாவரும் ஸ்ரீ ஜய சாமராஜ உடையாரிடம் தங்கள் மனோரதத்தின் உருவகத்தைக் காண்பார்கள் என்று மைசூர் மக்கள் இதயபூர்வமாக நம்புகின்றனர். அவர் தமிழகத்தின் கவர்னராக இருக்கும் காலத்தில் இவ்விரு ராஜ்யங்களின் நீண்டகாலக் கொள்வினை — கொடுப்பினை மரபு வலுப் பெறுமாக! இந்திய அரசியல் அமைப்பின் கீழ் இந்நாட்டின் பெருமகன் ஒருவன் பெறக்கூடிய முதல்பெரும் அரசியல் பதவியின் அழைப்பை அவர் பெறுவதற்குச் சென்னை கவர்னர் பதவியானது பூர்வாங்கமாக அமையுமாக!

டாக்டர் ஸ்ரீஹரி அவர்களின் சுற்றுப்பயணம்

5-5-64 சென்னையிலிருந்து டாக்டர் ஸ்ரீஹரி அவர்கள் புறப்பட்டு 6-5-64 ஹைதராபாத் சென்று ஸுல்தானியா பஜார் ரோடிலுள்ள தாஜ்மஹால் ஹோட்டலில் தங்கி, 7-5-64 மாலை புறப்பட்டு 8-5-64 சென்னை வந்து சேருகிறார்.







சிறந்த கலாரசிகரும், வேதவித்பன்னரும், அரசியல் அறிஞருமான மைசூர் மகாராஜா தமிழ் நாட்டின் கவர்னர் ஆகிறார். தமிழர்களுடன் ஆயகலைகள் அறுபத்து நான்கும் அவரை மகிழ்வுடன் வரவேற்கும். 1. பாலப் பருவத்தில் ஸ்ரீ ஜயசாமராஜ உடையார். 2. கல்கி காரியாலய விஜயத்தின் போது, ராஜாஜியுடனும் ஸ்வராஜ்யா ஆசிரியர் காலஞ்சென்ற காஸா சுப்பராவோடும் அளவளாவுகிறார். 3. அச்சகத்தைச் சுற்றி மைசூர் மகாராஜாவைக் கல்கி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் அழைத்துச் செல்கிறார். 4. மைசூர் மன்னரின் இளமைத் தோற்றம். 5. ராஜ உடையில் கம்பீரமாகக் காட்சி தருகிறார். 6, 7 மைசூர் மகாராஜா பவனி வரும் கண்கொள்ளாக் காட்சிகள்.




4


5



6



7





1. அமெரிக்கக் குழந்தைகளுக்கு இந்திய நாட்டின் பரிசாக அளிக்கப்பட்டுள்ள பதினேரு மாத யானைக் குட்டி சாந்தி டெக்ஸாஸிலுள்ள போர்ட்வோர்த் மிருகக் காட்சிச் சாலைக்குச் செல்கிறது. 2. விப்கோ ஸ்தாபனத்தினர் சமீபத்தில் தபால் தந்தி ஊழியருக்கு அளித்த விருந்துபசாரத்தில் திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரி விப்கோவின் தபால் தந்தி, டெலிபோன் சம்பந்தமான நூலை வெளியிட்டு, அதன் பிரதியொன்றை பி. எம். ஜி. யிடம் வழங்குகிறார். 3. ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுதந்திரக் கட்சி காரியதரிசி திரு எஸ். எஸ். மாரிசாமிக்கும், முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமத்துக்கும் சென்னை வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் விருந்துபசாரமளித்துக் கௌரவிக்கப்பட்டது. 4. டான் கோஸாக்ஸ் நடன சங்கீதக் குழுவினரோடு சோவியத் பிரதமர் குருஷேவ். 5. பாகிஸ்தான் உள்நாட்டு இலாகா மந்திரி கான் ஹபிபுல்லா கான் டில்லிக்கு வந்திருந்தபோது பாரத ராஷ்டிரபதியைச் சந்தித்துப் பேசினர். 6. கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகள் ரோங்ணபாக் முகாமில் குடியேறியுள்ளனர்.














பாரெக்ஸ் புகட்டும் பருவம்

உங்கள் குழந்தைக்கு ஏறக்குறைய நான்கு மாதம் என்றால் அதுவே பாரெக்ஸ் புகட்டும் பருவம். பக்குவம் செய்து தயாரான நன்செய் தானிய உணவே பாரெக்ஸ்; வைட்டமின் Dயும் தாதுப் பொருள்களும் செறிந்தது. பற்களையும் எலும்பு களையும் வலுவாக்குவதற்கான எல்லாச் சத்துக் களும் உள்ளடங்கி, திடமான வளர்ச்சிக்கு உதவுவது பாரெக்ஸ். இதன் தயாரிப்பாளர்கள்: 'குழந்தை உணவுப் புகழ்' கிளாக்ஸோ.

பாரெக்ஸ்—ஓர் கிளாக்ஸோ தயாரிப்பு





இலவசம்! 'தி பாரெக்ஸ் கைடு' (ஆங்கிலம்)
குழந்தைகளை ஊட்டி வளர்ப்பதுபற்றிய இந்நூலை வேண்டுவோர், தபால் செலவுக்காக 15 ந. பைசா தபால் வில்லைகளை அனுப்பி, எழுதுக: பாரெக்ஸ், தபால் பெட்டி 202, பம்பாய்—1.

FA. 3-78 TM

படம் பிடிப்புக்குக் காமிராவும், ஒலிப் பதிவும் இன்றியமையாதவை என்பது யாவருக்கும் தெரியும். ஆனால் ஆர்ட் டைரக்ஷன் எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பது பலருக்குத் தெரியாது. திரைக்கதை, வசனம், பாட்டு, பாத்திர அமைப்பு, எல்லாவற்றுக்கும் முதன்மையாக இருந்து படத் தயாரிப்பின் அஸ்திவாரமாயிருப்பது ஆர்ட் டைரக்ஷன்.

ஒரு படத்தின் சமீபக் காட்சிகளையும், தொலைவுக் காட்சிகளையும் நிர்ணயிப்பது, நடிக நடிகையர்கள் நிற்க வேண்டிய கோணங்களைக் குறித்துத் தருவது, மாட மாளிகைகள், கூடகோபுரங்கள் முதலியவற்றை நிர்மாணிப்பது. அவைகளை எந்தெந்தக் கோணங்களில் படமாக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்து அவற்றை வரி வடிவங்களில் தீட்டித் தருவது ஆகியவைகளெல்லாம் ஆர்ட் டைரக்டரின் பொறுப்பு.

ஆர்ட் டைரக்டர் முதலில் கதையைத் தெரிந்து கொள்ள வேண்டும். கதை எந்தெந்த ஊர்களில் நிகழ்கிறது. கதாபாத்திரங்கள் என்னென்ன உடையில் காட்சி தருகிறார்கள், கதை நிகழும் காலம் எது என்பனவற்றை யெல்லாம் கவனமாகப் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஆஸ்பத்திரி, நீதிமன்றம், ரயில்வே ஸ்டேஷன் முதலிய இடங்களில் நிகழ வேண்டிய காட்சிகளெல்லாம் ஸ்டுடியோவுக்குள் 'செட்' போட்டுத் தயாரிக்கும்படி ஆகி விடும். மேற்படி 'செட்டு'களுக்குச் சின்ன அளவில் பென்சிலால் சித்திரம் வரைந்து கொடுக்க வேண்டும். எத்தனை பெரிய அளவில் அவை காட்சிகளாக அமைக்கப்பட வேண்டும் என்பதற்கும் தெளிவான குறிப்புக் கொடுத்துவிட வேண்டும். படப் பிடிப்பில் கலை சம்பந்தப்பட்ட விஷயங்களை யெல்லாம் முன்னதாகத் திட்டமிட்டுச் செய்யவேண்டியவர் ஆர்ட் டைரக்டர்.

இன்று நம்மிடையேயுள்ள ஆர்ட் டைரக்டர்களுள் திரு ஏ. கே. சேகர் மிகவும் அநுபவம் வாய்ந்தவர். முப்பத்து மூன்று ஆண்டுகளாக, சினிமாத் துறையில் இருந்து கொண்டு தொண்டாற்றி வருகிறார். இது வரையில் சுமார் எழுபது படங்களில் பணியாற்றியிருக்கிறார்; சினிமாத் துறையில் நுழைவதற்கு முன்பு பத்திரிகைகளுக்குப் படம் வரைந்து கொடுத்துக் கொண்டிருந்தார். பிரும்மாண்டமான 'செட்டு' அமைப்புக்களுடன் கூடிய தயாரிப்புக்களான ''மர்மயோகி'', ''சந்திரலேகா'', ''வஞ்சிக்கோட்டை வாலிபன்'', ''சித்தூர் ராணி பத்மினி'' போன்ற படங்களில் ஆர்ட் டைரக்டராகப் பணியாற்றிப் பேரும், புகழும் பெற்றவர். இப்பொழுது ஏவி. எம். ஸ்டுடியோவில் ஆர்ட் டைரக்டராயிருந்து வருகிறார்.

அவரோடு பேசப்பேசப் பல அரிய விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். ஆர்ட் டைரக்ஷன் என்றால் இத்தனை இருக்கிறதா என்று வியந்து போனேன். அவர் பல படங்களுக்குப் பென்சிலால் வரைந்திருந்த வரிவடிவங்களை யெல்லாம் பார்த்த பிறகுதான் ஆர்ட் டைரக்டரின் பொறுப்பு எத்தகையது என்று தெரிய வந்தது.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன்பு 'பி.என். ரெட்டி, சேகர், ராம்நாத் புரொடக்ஷன்ஸ்' என்ற பெயரில் ஒரு சினிமாக் கம்பெனி தொடங்கப்பட்டது. பிரசித்திபெற்ற பழம்பெரும் டைரக்டரான திரு பி. என். ரெட்டி, சிறந்த ஒளிப் பதிவாளரான திரு கே. ராம்நாத் ஆகியவர்களுடன் சேர்ந்து திரு சேகர் ''சுமங்கலி'', ''வந்தே மாதரம்'' போன்ற சிறந்த படங்கள் வெளிவருவதற்குத் தோன்றாத் துணையா யிருந்திருக்கிறார்.

திரு ஏ. கே. சேகர் தன்னடக்கம் மிக்கவர்; புகழை ஒரு சிறிதும் விரும்பாதவர்; ஆடம்பரம் ஒரு சிறிதும் இன்றித் தாம் உண்டு, தம் வேலை உண்டு என்று கலைப் பணியிலேயே ஈடுபட்டு உழைக்கும் அருங்கலை விநோதர். யாரிடமும் அன்போடு பழகும் பண்புநிறைந்தவரைச் சந்தித்துப் பேசிய ஆனந்தத்தில் விடை பெற்றுக் கொண்டேன்.

—விஜயம்




பாலின் குணங்கள் அடங்கியது...



காட்பரீஸ் மில்க் சாக்கலேட்

மிட்டாய் மட்டுமல்ல... ஒரு உணவும் கூட!

CFY-7-TAM



கவிச் சக்கரவர்த்தி

கம்பருடைய கவிதையில் பன்முறை பயின்று பழகிய மூதறிஞர்கள், 'கம்ப நாடன் கவிதையில் போற் கற்றோர்க்கு இதயம் களியாதே' என்று கொண்டாடி மகிழ்ந்தார்கள். அண்மையில் சேவா ஸ்டேஜ் நாடக சபையினர் தயாரித்து அளித்திருக்கும் கவிச் சக்கரவர்த்தி (கம்பர் கதை) நாடகமும் கற்றோர்க்கு இதயம் களிக்கும் வண்ணமே அமைந்திருக்கிறது. இந்த நாடகம் 5–12–63ல் முதல் முதலாக அரங்கேறியபோது கண்டு களிக்கும் பெருமை பம்பாய்த் தமிழர்களுக்கே வாய்த்ததென்றாலும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று தேனாம்பேட்டை பொருட்காட்சித் திறந்த வெளி அரங்கில் சென்னைவாசிகளும், கலை அன்பர்களும் கண்டு மகிழ மீண்டும் ஒரு முறை புதிதாகவே அரங்கேறினாற் போன்று நன்கு நிகழ்ந்தது.

கம்பருடைய இலக்கியத்திலும், வரலாற்றுக் குறிப்புகளிலும் ஈடுபாடும் பரிச்சயமுமுள்ள திரு கு. அழகிரிசாமி அவர்கள் மணி மணியான வசனங்களோடு கட்டுக்கோப்பான முறையில் நாடகத்தை இயற்றிக் கொடுத்துள்ளார். பற்பல நிகழ்ச்சிகளும், சம்பவங்களும், தனிப் பாடல்களுமாகக் கலந்து கிடக்கும் கம்பருடைய கம்பீரமான வரலாற்றை இவ்வளவு கோவையாக அமைத்துச் சுவை நிரம்பிய நாடகமாகச் செய்ததற்காக நாடகாசிரியர் திரு அழகிரிசாமியையும், சேவா ஸ்டேஜின் தலைவர் திரு எஸ். வி. சகஸ்ரநாமத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

'ஏரெழுபது' சடையப்பர் இல்லத்தில் அரங்கேறும் காட்சியோடு தொடங்குகிற நாடகம், குலோத்துங்க சோழனின் அவைக் காட்சி வரும்போதே மகத்தான நிலையை அடைந்து களை கட்டி விடுகிறது. எல்லாரும் கவிச் சக்கரவர்த்தியின் வரலாற்றுக்குப் பெருமை தேடித் தரும் விதத்தில் நடித்திருக்கிறார்கள். சிறப்பாகக் குறிப்பிட நேரும்போது கம்பராக வரும் ஜயராமனும், குலோத்துங்கனாக வரும் முத்துராமனும், சடையப்பராக வரும் சகஸ்ரநாமமும், ஒட்டக்கூத்தராக வரும் ஏ.கே. வீராச்சாமியும் பாத்திரத்தோடு ஒன்றி நன்றாக நடித்துள்ளார்கள்.

கம்பர் சோழனோடு மாறுபட்டு வெளியேறும் காட்சி இன்னும் அப்படியே கண்களில் நிற்கிறது. திருவரங்கத்தில் ராமாயணம் அரங்கேறும் காட்சியும், அதன் முன்பு சடையப்பர் வீட்டில் கம்பர் பாடல்களை இயற்றுவதும் மறக்க முடியாத காட்சிகளாக வாய்த்துள்ளன. ஒரு மழை இரவில் மாவண்டூர்ச் சிங்கன் வீட்டுக்குக் கம்பர் போவதும், அவனைப் புகழ்ந்து பாடிவிட்டுத் திரும்புவதும் உருக்கமான கட்டங்களாக அமைந்துள்ளன. உயர்தரமான இந்த இலக்கிய நாடகத்தைத் தமிழ்ப் பெரு மக்களும், கலையுள்ளம் படைத்தவர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று துணிந்து சிபாரிசு செய்யலாம். — நா. பா.





இளைய பாரதத்தினர்

அண்ணாமலை சர்வகலாசாலையில் பி.ஏ. (ஹானர்ஸ்) தமிழ் மாணவர்களுக்குப் பரீட்சை முடிந்து, வாய்மொழிப் பரீட்சை நடந்து கொண்டிருந்தது. வாய்மொழிப் பரீட்சையை நடத்த அந்த அறையில் நாலைந்து பேராசிரியர்கள் அமர்ந்திருந்தார்கள். 'என்ன கேட்பார்களோ?' என்ற ஐயத்துடன் அந்தப் பெண் நுழைந்தாள்.

வந்தவுடனேயே பரீட்சாதிகாரிகளுள் ஒருவரான பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், "உன் பெயர் என்ன?" என்று அந்த மாணவியிடம் கேட்டார்.

"என் பெயர் ஹம்ஸத்வனி!" என்று தயங்கியபடியே பதில் அளித்தாள் அந்த மாணவி.

"விசித்திரப் பேராயிருக்கிறதே!" என்று வியந்தார் பேராசிரியர்.

பேரைப் பற்றிய விவாதத்தில் அந்த மாணவிக்கு இருந்த நடுக்கமெல்லாம் பறந்தோடி விட்டது.

"என் தந்தை திருவண்ணாமலை நாடாருக்குச் சங்கீதத்தில் ரொம்பப் பிரியம். எங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் ராகத்தின் பெயரைச் சூட்டி விட்டார் அவர்!" என்றாள் ஹம்ஸத்வனி.

"அப்படியா? எங்கே, ஒரு பாட்டுப் பாடு, பார்க்கலாம்!" என்று கேட்டார் பேராசிரியர் தெ. பொ. மீ.

"எனக்குச் சங்கீதத்தை ரஸிக்கத் தெரியும். ஆனால் பாடத் தெரியாது!" என்று பளிச்சென்று பதிலளித்தாள் ஹம்ஸத்வனி.

பிறகு பல கேள்விகள். எல்லாவற்றுக்கும் கடகட வென்று பதிலளித்து வெற்றிகரமாகத் திரும்பினாள் ஹம்ஸத்வனி. அவளது ஆற்றலும் திறமையும் பிறகு, அவள் கல்வி கற்ற அண்ணாமலை சர்வகலாசாலையிலேயே தமிழ் ஆசிரியைப் பதவியைப் பெற்றுத் தந்தன.

ஹம்ஸத்வனி தாம் ஆசிரியை ஆனதும் ஏற்பட்ட முதல் நாள் அனுபவத்தை ரஸமாக எடுத்துச் சொன்னார். "முதல் நாள் வகுப்புக்குச் சென்றபோது முன்னாலேயே மாணவ மாணவிகளின் பெயர்ப் பதிவு ரிஜிஸ்தரில் பெயர்களையெல்லாம் நன்றாகப் படித்துப் பார்த்துக் கொண்டு சென்றேன். அவர்கள் பெயரைத் தப்பாக உச்சரித்து விட்டால் பிறகு மாணவ மாணவிகளின் கேலிக்கல்லவா இலக்காகும்படி நேர்ந்து விடும்? முதல் நாள் வகுப்பில் எந்த மாணவரிடமிருந்து எந்த விதமான கேள்வி அஸ்திரம் பிறக்குமோ என்று பயந்துகொண்டே யிருந்தேன். ஒவ்வொரு மாணவ மாணவியின் பூர்வோத்தரங்களையும் சொல்லும்படி கேட்டு அவர்களிடம் அக்கறை காட்டியதில் எந்த விதமான இடைஞ்சலும் ஏற்படாமல் தப்பினேன்!" என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

ஆசிரியைப் பணி ஏற்ற பிறகு ஒரு தடவை ஹம்ஸத்வனி தம் பிறந்த ஊரான விருதுநகருக்குச் சென்றிருந்தார். அவர் இளமையில் பயின்ற க்ஷத்திரியப் பெண் பாடசாலையின் ஆசிரியை எதிர்ப்பட்டாள்.



"ஹம்ஸத்வனி! நீ இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள் ஆசிரியைக்கு ஆசிரியை.

"நான் அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ் ஆசிரியை!"

"தமிழ் ஆசிரியையா? பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது 'கோழி' என்று எழுதச் சொன்னால் 'கேழி' என்று எழுதி வைப்பாய்! எப்படி உன்னால் தமிழ் ஆசிரியையாக முடிந்தது?" என்று வியந்தாள் அந்த ஆசிரியை.

"நான் விழுப்புரத்தில் கான்வெண்டில் படித்து விட்டு வந்த புதிது. அப்படியெல்லாம் உங்கள் கேலிக்குள்ளானேன். என்

தாயார் பத்மாவதி அம்மாள் காட்டிய ஆர்வம் என்னைத் தமிழை நன்றாகப் படிக்க வைத்தது. மெட்ரிக் படிக்கும்போது தமிழ்ப் பேராசிரியர்களான சேதுரகுநாதன் அவர்களும், இலக்குவனார் அவர்களும் எனக்குத் தமிழ் இலக்கியத்தை நன்கு கற்க உதவி புரிந்தார்கள். அண்ணாமலை சர்வகலாசாலையில் சேர்ந்ததும் திரு ஏ. வி. செட்டியார் என்னை ஆசிரியைத் தொண்டில் ஈடுபட ஊக்கமளித்தார்கள்!''

''மிக்க மகிழ்ச்சி. என் மாணவி சோடையில்லை!'' என்று முதுகில் தட்டிப் பாராட்டி விட்டுச் சென்றாள் அந்த முதிய ஆசிரியை.


சொற்பொழிவாற்றும் திறமை படைத்த ஹம்ஸத்வனி அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ் ஆசிரியையாக நான்கு ஆண்டுகள் பணியாற்றிவிட்டுத் தற்பொழுது மேரி ராணி கல்லூரியில் தமிழ் ஆசிரியையாகச் (Assistant Lecturer) செயலாற்றி வருகிறார்கள்.

'' அண்ணாமலை சர்வகலாசாலையில் நாளொரு நிகழ்ச்சியும், அனுபவமும் எனக்கு ஏற்பட்டன. அத்தகையவற்றைப் பெண்கள் கல்லூரியான மேரி ராணி கல்லூரியில் எதிர்பார்க்க முடியுமா? ஆனால் மேரி ராணி கல்லூரி மாணவிகள் கலை நிகழ்ச்சிகளில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள்'' என்று தம் அனுபவத்தைக் கூறிக் கொண்டே போனார்.

''பொழுதுபோக்கு என்று உங்களுக்கு ஏதாவது இருக்குமே?''

''பொழுது போக்கா? மாலையில் கல்லூரி விட்டதும் பஸ்ஸைப் பிடித்து வீடு வந்து சேருவது ஒன்று போதுமே?'' என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

- குண்டுமணி





தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி நிவாரணமளிக்கவும் கிருமிகளை அகற்றவும் பெப்ஸ் உதவிபுரிகிறது



**பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.**

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

பி. இ. புல்போர்ட (இந்தியா) பிரைவேட் லிட்

FPT-55-TAM

சென்னை ராஜ்யத்திற்குப்பூரண விநியோகஸ்தர்கள்
மெஸர்ஸ் மோதி & கம்பெனி, சென்னை - 1



கயல் விழி

சோழச் சக்கரவர்த்திக்குப் பாண்டிய அரண்மனையிலேயே வீராபிஷேகம் செய்யலாம் என்றும் பாண்டிய நாட்டின் பெயரை மாற்றிச் 'சோழ பாண்டிய மண்டலம்' என்று வைத்து விடலாமென்றும் பாண்டிய மன்னரே கூறியதும் சுந்தரபாண்டியன் திணறி விட்டான். அவன் வீராவேசமாகத் தன்னைக் கொன்று விட்டே அந்தச் செயலுக்கு உடன்பட வேண்டும் என்று தமையனாரிடம் துடிப்புடன் பதிலளித்தான். இதைக் கேட்டதும், கலங்கியறியாப் பாண்டியரின் செங்கயற் கண்கள் கூடக் கலக்கமுற்றன. மெல்ல அவனைப் பற்றித் தமக்கு அருகில் அமர்த்திக் கொண்டார் பாண்டிய மன்னர். பிறகு பேசத் தொடங்கினார்:

''தம்பி! ஐந்து பாண்டியர்கள் தமக்குள்ளே பிரித்துக் கொண்டு உட்பகை வளர்த்ததால் அடிமைப்பட்ட பாண்டிய மண் இது. சோழர்களும் அந்த உட்பகையை உரமூட்டி வளர்த்து வந்தார்கள். அப்படிச் சிதறிக் கிடந்த நாட்டை இதே குலோத்துங்க சோழர்தாம் நம் தந்தையார் விக்கிரம பாண்டியருக்கு ஒன்றாக்கித் தந்திருக்கிறார். நமக்குள் பகைத்தெழுந்த வீர பாண்டியரை அடக்கி, நம் தந்தையை ஆளச் செய்த வீரர் இந்தக் குலோத்துங்கர்தாம். அந்த நாட்களின் நினைவுகள் உனக்கிருக்க நியாயமில்லை. நமது தந்தையாரின் கடைசிக் காலத்தில் பிறந்தவன் நீ.''

விழுப்பரையருக்கு அரசர் படும் வேதனை விளங்கத் தொடங்கியது.

''அன்றைக்குச் சக்கரவர்த்திகளிடமிருந்த பரந்த மனப்போக்கு இன்றைக்கு இல்லையே!'' என்றான் சுந்தர பாண்டியன். பின்னர் தொடர்ந்து,

''நாம் திறை செலுத்துகிறோம்; சோழப் பேரரசின் மேலாணையை ஏற்றுக் கொள்ளுகிறோம். இவ்வளவிருந்தும் போதாதா? பாண்டிய நாடு தன்னைத் தானே இழிவு படுத்திக் கொள்ள வேண்டுமா?'' என்று கேட்டான்.

''இழிவு!'' என்று பெருமூச்செறிந்தார் பாண்டியர். ''இழிவுதான்! இழிவைப் பொறுக்கா விட்டால் அழிவு!''

''அழிந்து விடுவதுமேல்! நம்முடைய மக்களுக்கு முன்பாகவே நாம் நமது உரிமையை அழித்துக் கொண்டு, மானத்தை அழித்துக் கொண்டு, பெயரை அழித்துக் கொண்டு வாழ்வதைவிட அழிந்துபடுவதேமேல்!''



அகிலன்



''நம்முடைய ஏழகப் | படை ' வீரர்களும் மறவப் படை வீரர்களும் சோழப் பெருஞ் சேனைக்கு முன் எதிர்த்து நிற்க முடியுமா? படை பெருக்கும் உரிமையும் நமக்கு இல்லையே....!''

''நம்முடைய நாட்டுக்குள்தானே போர் நடைபெறும்? பெருக்கிக் கொள்ள முடியாத நம் வீரர்களை மட்டும் நம்பி நாம் எவ்வளவு காலம் ஆட்சி நடத்த முடியும்? பாண்டிய நாட்டில் வாழும் ஆண்கள் அனைவருக்கும் ஆண்மை யில்லையா? அவர்களுக்குப் பொறுப்பில்லையா? சிறுமையைப் பொறுத்துக் கொள்ளச் சொல்லி நமது மக்களைப் பழக்குவதைவிட, இழிவை, எதிர்த்து நின்று அழியச் சொல்லலாமே! அடிமையான பாண்டிய நாடு அழிந்து, அதன் சாம்பலிலிருந்து ஒரு புது நாடு முளைத்தெழட்டுமே!''

அந்த நாட்டில் தாம் இருக்க முடியாதென்ற கவலை பாண்டியருக்கு இல்லை. சுந்தர பாண்டியனும் இருக்க மாட்டானே என்ற வேதனைதான்.

வாயிற் காவலனின் நிழல் தட்டியது. தலையசைத்தார் பாண்டியர்.

''அமைச்சர் சயங் கொண்ட சோழ ஸ்ரீ வல்லபர் வருகிறார்கள்'' என்றான் காவலன் மெல்லிய குரலில்.

பாண்டிய நாட்டின் அமைச்சர்களில் ஒருவரான சயங்கொண்ட சோழ வல்லபர், சோழ சாம்ராஜ்யத்தின் சார்பில் பாண்டியரிடம் பணி புரிந்தவர். பாண்டியரிடம் எவ்வளவு ஈடுபாடும் பயபக்தியும் உண்டோ அவ்வளவு குலோத்துங்க சோழரிடமும் உள்ளவர்.

அவரைத் தூரத்தில் கண்ட மாத்திரத்தில், ''இனித் தூதுவர்கள் இங்கு வரமாட்டார்கள்; ஓலை வந்து கொண்டிருக்கிறது'' என்றார் பாண்டியர்.

சயங் கொண்ட சோழ வல்லபரின் முகம் உணர்ச்சியற்ற இரும்பை ஒத்திருந்தது. கொண்டு வரும் செய்தியை மிகவும் எளிதான விஷயம்போல் எடுத்துக் கூறிப் பாண்டியரின் ஒப்புதலைப் பெறும் ஆற்றல் அவருக்கு உண்டு. 'சக்கரவர்த்திகளின் இந்தச் சிறு விருப்பங்களை நிறைவேற்றுவதால் நமக்குத் தானே பெருமை?' என்று கூடக் கூறக் கூடியவர். நாட்டு மக்களை நாம் விரும்பும் முறையில் மாற்றி விடலாம் என்ற நம்பிக்கை அவருக்கு.

ஆனால் அவருடைய முகத்தில்கூட இன்று பரபரப்புக் காணப்பட்டது. பாண்டியருக்கு மௌனமாகவே வணக்கத்தைத் தெரிவித்து விட்டு ஓலையை நீட்டினார். எதிர்பார்த்த செய்திகளுக்கு மேலாகவும் அதில் ஒன்று இருந்தது. சுந்தரபாண்டியனை உடனடியாகச் சிறை செய்து விழா முடியும் வரையில் நிலவறையில் வைத்திருக்க வேண்டும். பாண்டிய மக்களுக்கு இந்தச் செய்தி தெரிந்திருக்க வேண்டும் என்பதில்லை. வீராபிஷேகம் வெற்றிகரமாக நடந்தேறுவதற்குப் பாண்டியரின் பெருந்துணையை வேண்டி இருந்தது சோழப் பேரரசு.

குலசேகரப் பாண்டியர் ஓலையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். சயங்கொண்ட சோழ வல்லபரின் கண்கள் சுந்தர பாண்டியனைச் சுற்றி வளைக்கத் தொடங்கின.

குலசேகரப் பாண்டியரின் முன்பு இரு காட்சிகள் மாறி மாறித் தோன்றின: தந்தையார் காலத்திலிருந்து அமைதி காத்து வளர்ந்த பாண்டியத் திருநாடு ஒரே நிக்காடாகி நின்றது. அடுத்தாற் போல் நிலவறைக்குள் சுந்தரபாண்டியன் தலை கவிழ நின்றான்.

சட்டென எழுந்து சுந்தர பாண்டியனின் கரத்தைப் பற்றினார் பாண்டியர். அவனுக்கோ விழுப்பரையருக்கோ ஏதும் விளங்கவில்லை.

ஆறும் அத்தியாயம்

வீரனின் கண்ணீர்

மலை குலைந்தாலும், மனம் குலையாத குலசேகரப் பாண்டியர், குலோத்துங்க சோழரின் ஓலையைக் கண்ணுற்ற மாத்திரத்தில் பதற்றமடைந்தது அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபருக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. சுந்தரபாண்டியனின் கரத்தை அரசர் இறுகப் பற்றியவுடனேயே, அவரது முடிவு எப்படியிருக்கும் என்பதை உணர்ந்து கொண்டார் அமைச்சர்.

சுந்தர பாண்டியனைச் சிறையில் அடைப்பதற்காக அரசர் அவனைப் பற்றவில்லை. வாழ்விலும் தாழ்விலும் தமது உடன் பிறந்தானுக்கு இழிவு நேராது காப்பதற்காகக் கொதித்தெழுந்து விட்டார் அவர்.

''அரசே!'' என்று முறையிட்டார் அமைச்சர்; ''ஓலையின் செய்திகளுக்கு நாம் மறுமொழி அளிப்பதுபற்றி இப்போது ஆலோசனை நடத்துவோம். நாம் செய்யப் போகும் முடிவின் நன்மை தீமைகளைச் சீர்தூக்கி, எது நன்மை என்று அரசுக்குத் தோன்றுகிறதோ, அவ்வாறே செய்வோம்.''

''குலோத்துங்க சோழச் சக்கரவர்த்திகளுக்குத் 'தியாக விநோதர்' என்ற பெயரும் இருக்கிறதல்லவா? அதை நிலைநாட்டுவதற்காகவே இது போன்ற விநோதங்களும் நிகழ வேண்டுமென எதிர்பார்க்கிறார் போலும்!'' என்றார் பாண்டியர்.

சுந்தர பாண்டியனைப் பற்றிய செய்தியை எங்கே அப்போதே வெளியிட்டு விடப் போகிறாரோ என்ற அச்சம் அமைச்சருக்கு. இரகசியங்களைக் காப்பாற்றும் பழக்கமுள்ளவர் பாண்டியர். பலருக்கு மத்தியிலும் அமைச்சருக்கு மட்டிலும் விளங்கும்படியாக அந்தரங்கச் செய்திகளைப் பேசுபவர் அவர். அந்த நம்பிக்கையின் பேரில்தான் சுந்தர பாண்டியனும் காரானை விழுப்பரையரும் அருகில் இருக்கும்போதே ஓலையை அரசரிடம் கொடுத்து விட்டார்.

சிறிது அமைதி பெற்ற அரசர் தமது ஆசனத்தில் சாய்ந்து, ''தங்களது ஆலோசனைகளைக் கூற முடியுமா?'' என்று அமைச்சரிடம் கேட்டார்.

அமைச்சரின் குரல் அமைதியோடு ஒலித்தது.

''சோழப் பேரரசு நமது தலைநகருக்கு வந்து வீராபிஷேகம் செய்து கொள்ளவும் விருதுப் பெயர்கள் சூடவும் விரும்புகிறது. இது நமது நாட்டுக்குப் பெருமையே த வி ர ச் சிறுமையல்ல. பாண்டிய நாட்டைச் 'சோழ பாண்டிய மண்டலம்' என்று அழைப்பதால் இரு நாடுகளுக்குள்ளும் ஒற்றுமையே வளரும். மற்றொரு விஷயம் பற்றி...'' என்று

பாண்டியரின் முகத்தை ஏறிட்டு நோக்கி, ''அது அரசரின் முடிவைப் பொறுத்தது; அதுவும் தாற்காலிகமான அரசியல் ஏற்பாடு என்பதால் அதிலும் இழுக்கிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை'' என்று முடித்தார். சுந்தரபாண்டியனைச் சிறையிடுவது பற்றி அவர் வெளிப்படக் கூறாது குறிப்பால் சுட்டினார்.

சயங்கொண்ட சோழ வல்லபர் குலோத்துங்க சோழரின் விருப்பத்தின்படி பாண்டியரின் அமைச்சராக வந்தவர். என்றாலும் குலசேகரப் பாண்டியருக்குப் பல வழிகளிலும் ஆலோசனைகள் கூறிப் பாண்டிய நாட்டில் நிலையான ஆட்சி ஏற்படுத்த உதவியவர். ஆனால், ஒரு விஷயத்தில் மாத்திரம் அவர் என்றுமே விழிப்புடன் இருந்து வந்தார். சோழ சாம்ராஜ்யத்தின் நலனும் பாண்டிய நாட்டின் நலனும் முரண்படுமெனத் தெரிந்த போதெல்லாம் அவரது சிந்தனை சோழ சாம்ராஜ்யத்தின் பக்கமே சாய்ந்தது. அவருடைய கடமை அது.

அரசரும் அவரது விழிப்பை உணர்ந்தவர்; அரசரின் விழிப்பும் அமைச்சர் அறிந்ததுதான். இருவருமே கத்தி முனைகளில் நடமாடுவது போன்று ஒருவர் மற்றவரின் சித்த மூலைகளில் நடமாடி வந்தனர்.

குலசேகரப் பாண்டியர் அடுத்தாற்போல் அவைக்களப் புலவரான காரணை விழுப்பரையரை வினவினார். புலவருக்குப் புலவர், அந்தரங்க ஆலோசகர், வீரருக்கு வீரர் அவர். வள்ளுவம் என்ற பொய்யாமொழித் தராசினில் எடைவிட்டுக் கூறும் சிந்தனை அவருடையது.

விழுப்பரையர் கூறலானார்: ''போரிட்டுத் தோல்வியுற்ற நாட்டில்தான் வெற்றி கொள்வோர் வீராபிஷேகம் நடத்துவார்கள்; விருதுகள் சூடுவார்கள். அடுத்தாற்போல் 'சோழ பாண்டிய மண்டலம்' என்று இந்தப் பாண்டிய நாட்டின் பெயரை மாற்றுவதால் ஒற்றுமை வளரும் என்று என் சிற்றறிவுக்கு எட்டவில்லை. மாறாக வேற்றுமை உணர்வும் வெறுப்பும் வளர்வதற்கு வகையுண்டு. ஓலைக்குப் பொருள் என்னவெனின், போருக்கு அஞ்சிப் போர் தொடுக்காமலே மற்றொரு தோல்வியைப் பாண்டியநாடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.''

அமைச்சரை விழுப்பரையரின் கருத்து முணுமுணுக்க வைத்தது. 'இவரை யார் இதற்கெல்லாம் விளக்கம் கேட்டார்கள்? எது நாட்டுக்கும் அரசுக்கும் இந்தச் சமயத்தில் வேண்டுமோ அதை மட்டும் கூறியிருந்தால் போதுமே' என்று நினைத்தார். ''முடிவு செய்ய வேண்டியவர் அரசர். கயல் மீனுக்குத் தன் வலிமையும் தனக்குப் பகையான வேங்கையின் வலிமையும் தெரியாமலிராது. ஓலையில் உள்ள எழுத்துக்களை மட்டும் படித்துவிட்டுப் பொருள்கூறுபவர் இன்றைய நாட்டின் நிலைமையையும் கற்றுக்கொண்டு ஆலோசனை கூற வேண்டும்.''

அரசரின் முடிவை எதிர்நோக்கினார் அமைச்சர். விழுப்பரையரும் சுந்தர பாண்டியனும் அதையே ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ஆனால் பாண்டியரோ சுந்தரபாண்டியன் பக்கம் திரும்பி, ''இளவரசரின் ஆலோசனைகளையும் நாங்கள் அறிந்து கொள்ளலாமோ?'' எனக் கேட்டார்.

அவையில் உடனிருக்கச் சுந்தர பாண்டியனுக்கு உரிமை உண்டு. ஆனால் அவனுக்கு ஆலோசனை கூற உரிமை இல்லை. குறிப்பாக அமைச்சர் அருகில் இருக்கும்போது அவன் தனது நாவினைக் காக்க வேண்டுமென்பது கட்டளை. இப்போது அவனிடமே அரசர் ஆலோசனை கேட்க முற்பட்டது அமைச்சருக்குப் பொறுக்கவில்லை.

''அரசே!'' என்று குறுக்கிட்ட அமைச்சர், ''எது வந்தாலும் போர்க்களம் சென்று பொருத வேண்டுமென்ற வீரத் துடிப்பு மிக்க காளைப் பருவத்தினர் இவர். நாமோ இன்று வயதிலும் ஆட்சித் திறனிலும் படைப்பெருக்கிலும் முதிர்ந்த குலோத்துங்க சோழருக்கு மறுமொழி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். கடலினும் பெரிய படையுடன் மோதி நாம் நமது நாடு நகரங்களை அழித்துக் கொள்ளத்தான் வேண்டுமா? சக்கரவர்த்திகளின் மேலாட்சிக்கு நான் பரிந்துரை செய்வதாக எண்ண வேண்டாம். பிறப்பில் சோழ நாட்டான் என்றாலும் வைகைப் பெருக்கால் விளைந்த செந்நெல் உண்டவன். எண்ணித் துணிய வேண்டிய கருமம் இது.''—சயங்கொண்ட வல்லபரின் குரல் தழுதழுத்தது.

அமைச்சர் உணர்ச்சி வயப்பட்டு இதுவரை அரசர் கண்டதில்லை. அரசியல் பணிகளில் இருதலைக் கொள்ளிபோல், கடமைகள் வந்து முன்னே நிற்பதுண்டு. 'இம்முறை உண்மையிலேயே அவர் பாண்டிய மண்ணுக்காகக் கலங்குகிறார்' என்பதை உணர்ந்தார் குலசேகரர்.

விழுப்பரையர் பணிவோடு எழுந்து நின்றார்:

''இளவரசரின் ஆலோசனைகளையும் கேட்ட பின்னர் முடிவு செய்தலே நலம் என்று தோன்றுகிறது. 'ஒருவர்

இளையவர் என்பதாலோ உறவின் முறையினர் என்பதாலோ அவர் பெற்றுள்ள தகுதியை மறக்கலாகாது' என்பது வள்ளுவர் வாக்கு.''

சுந்தரபாண்டியனின் கருத்தை எதிர்பார்ப்பது போல் அவன் பக்கம் திரும்பினார் பாண்டியர். இளைஞன் எழுந்தான்:

''வீராபிஷேகத்தை மதுரையில் நமது அரண்மனையில் அவர்கள் நடத்துவதற்கான நியாயமான முகாந்திரம் ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை. அப்படி ஏதும் இருந்தால் அது படைச் செருக்கு ஒன்றுதான். படை வலிமையைக் காட்டியே, போரிடாமலே, நமது தோல்வியை ஒப்புக்கொள்ளச் செய்யும் ராஜதந்திரம் சோழப் பேரரசருக்குப் புதுப் புகழைத் தரக்கூடும். ஆனால் அதை அப்படியே ஏற்றுக் கொள்வது நமக்கு இழுக்காகும். போரிடாமல் தோல்வியின் வடுவை மட்டும் ஏற்றுக் கொள்வதை விடப் போர் செய்து விழுப் புண்களுடன் வீர சுவர்க்கம் புகுந்து அதே தோல்வியைத் தழுவுவோமானால் அது பெருமை தரும்.''



''ஒன்றை இங்கு கூற நான் கடமைப்பட்டவன்'' என்று இடையில் குறுக்கிட்ட சயங்கொண்ட சோழ வல்லபர், ''குலோத்துங்க சோழ தேவருடன் நான் அருகில் இருந்து பழகியவன்; எவ்வளவுக்குப் பரந்த மனம் அவர்களிடம் உண்டோ அவ்வளவுக்கு வெஞ்சினமும் உண்டு. நெஞ்சில் தாம் இகழப் பட்டதாக வஞ்சம் கொண்டார்களானால், ஊழிக் காலத்தின் பிரளய வேகத்தோடு அவர்கள் போர்க் கோலம் பூணுவார்கள். — துணிந்த பின் எண்ணுவம் என்பது நமக்கு இழுக்கு'' என்றார்.

''எண்ணியே துணிவோம்!'' என்றான் சுந்தர பாண்டியன். ''நெடுநாட்களாக எண்ணத்தில் துணிவு கொள்ள மறந்துவிட்டது இந்த நாடு. நேற்றுத்தான் பாணர் குலப் பெண்மணி ஒருத்தி, 'அடிமைத் தளையில் ஆழ்ந்துள்ள இந்த மாமதுரை அழிந்தால்தான் என்ன?' என்று தனது கூத்தினிடையே கேட்டாள். அந்த எண்ணத்தின் வலிமையைப் பின்னர்தான் உணர்ந்தேன். அந்த எண்ணம் நாடு முழுதும் பரவியிருக்குமானால், யாருடைய வெஞ்சினம் நம்மை ஏது செய்யும்? 'எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார் திண்ணியராகப்பெறின்' என்று கூறிய அறநூலை அரங்கேற்றிய பாண்டியப் பதி இது. நான் இன்று எண்ணுகிறேன், 'இந்த நாட்டை இனி யாராலும் அடிமை கொள்ள முடியாதென்று!' இந்த எண்ணத்தில் திண்மை சேர்க்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. இதற்காக நானும் இந்த நாட்டு ஆண்மக்களும் பிடி சாம்பலாவோமானால், அந்தச் சாம்பலிலிருந்து ஒரு சக்தி பிறக்கும்! — 'இது அடிமை நாடு' என்ற எண்ணத்தை ஊட்டக் கூடிய இந்தக் கட்டளைகளுக்கு நாம் இணங்க மறுப்போம்! எது வந்தாலும் ஏற்போம்!'' என்று கண்களில் அனல் பொறி தெறிக்கக் கூறினான்.

குலசேகரப் பாண்டியர் தமது இரு விழிகளையும் மூடி ஒரு கணம் ஆலவாய் அழகனைத் தியானித்துக் கொண்டார். 'மனிதன் படைப்பதுதான் நாடு; ஆனால் மனிதனைப் படைப்பது நீ. நான் இங்கு ஒரு மனிதனைக் கண்டுவிட்டேன்' என்று அவர் உளம் பூரித்தார்.

சயங்கொண்ட சோழவல்லபரின் தலை சாய்ந்தது. துள்ளும் இளம் கயல் மீனாகச் சுந்தரபாண்டியன் இப்போது அவருக்குக் காட்சியளிக்கவில்லை. எண்ணம் எனும் மாபெரும் ஆயுதத்தை வள்ளுவர் அவனுக்கு வழங்கி விட்டார். தம்மை அரங்கேற்றிப் போற்றிய நாட்டுக்குப் பெருமை தரத் துணிந்துவிட்டாரா அந்தத் தெய்வமாக் கவி?

குலசேகரப் பாண்டியர் மெல்லத் தம்மிடமிருந்த சோழப் பேரரசின் திருமந்திர ஓலையை எடுத்தார். அவரது வலிமை மிருந்த கரத்துக்கு அந்தச் சிற்றோலை ஒரு தாங்கமுடியாத சுமையாக இருந்தது போலும். நடுங்கும் கரத்தால் மௌனமாக அதைச் சுந்தர பாண்டியனிடம் நீட்டினார்.

நீட்டோலை வாசித்தோன் நெடுமரமாக நின்றனன். அதில் அவனையே விழா முடியும்வரை நிலவறைக்குள் சிறையிட்டு வைக்கும்படியான ஆலோசனை இருந்தது. ஆலோசனையா அது?



சோழப் பேரரசின் மறுக்க முடியாத ஆணையாகும்.

அமைச்சருக்கு இப்போது குறுக்கிடத் துணிவில்லை.

செங்கயற் செல்வன் சுந்தரபாண்டியனின் விழிகளில் வைகை பெருக்கெடுத்தோடியது. மூவருடைய ஆலோசனைகளையும் கேட்ட பின்னர் முடியரசர் ஓலையை அவனிடமே நீட்டுவதன் பொருளென்ன? வாய்மொழியால் ஆணை பிறப்பிக்காமல் குறிப்பால் உணர்த்தி 'இதை நிறைவேற்று!' என்று கூறுகிறாரா?

''அரசே! ஓலையின் முழுச் செய்தியையும் நான் முன்பு அறியவில்லை. இளையவனின் ஆலோசனைகள் அரசுக்குத் தவறென்று தோன்றியிருக்கலாம். தங்கள் முடிவை ஏற்று இந்தக் கணமே நான் சிறை புகச் சித்தமாக இருக்கிறேன்!''

வணங்கா முடியினன் வணங்கினான்; கலங்கா வீரன் கலங்கினான். விழுப்பரையரின் விழிகளினின்றும் கிளம்பிய செந்தீப்பொறி அமைச்சர் சயங்கொண்ட சோழவல்லபரைச் சுட்டது. ஓலையில் இருந்த திடுக்கிட வைக்கும் செய்தியை இப்போது அறிந்து கொண்டதும் அதை அமைதியே உருவான விழுப்பரையரும் தாங்க முடியாது தவித்தார். 'சோழப் பேரரசர் இப்படி ஒரு சின்னத்தனமான காரியத்தையா செய்யச் சொல்கிறார்?'

அதற்குள் பாண்டியர், அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபரிடம், ''தூதுவர்களிடம் இன்று ஏதும் முடிவு கூறமுடியாது'' என்று தமது முடிவைக் கூறினார். ''அவர்கள் வெகுண்டெழுந்து உடனே திரும்ப வேண்டுமென்று கூறக்கூடும். அப்படி அவர்கள் வற்புறுத்துவார்களானால், விரைவில் தாங்களே அங்கு தூது வருவதாகச் சொல்லுங்கள்.''

''நான் சென்று சக்கரவர்த்திகளை நேரில் பார்ப்பதாகவா?''

''ஆமாம், மறுமொழியுடன் தாங்களே செல்வீர்கள்.''

அமைச்சருக்கே இப்போது அரசரை ஆழம் காண முடியவில்லை. (தொடரும்)

காால்கேட் பேபி பவுடர்

விசேஷமாக உங்கள் குழந்தைக்கெனவே ஒரு பிரத்யேகமான பவுடர்.

உங்கள் குழந்தை ஒரு தனிச்சிறப்புகொண்டது—எல்லா விதத்திலும் விசேஷமானது. விசேஷமான ஆகாரம், விசேஷமான உடைகள். ஏன்? விசேஷமான பவுடர் கூடத்தான்—கால்கேட் பேபி பவுடர்!

கால்கேட் பேபி பவுடர் உங்கள் குழந்தையின் மென்மையான சருமத்திற்கென பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டது. அவ்வளவு மிருதுவானது—அவ்வளவு மழமழப்பானதும், சிக்கனமானதும் கூட... குழந்தைகள் கால்கேட் பேபி பவுடரை விரும்புகின்றன—நீங்களும்கூட அதையே விரும்புவீர்கள்!



உங்கள் செல்லக் குழந்தை ரூ. 1,000 ஜெயிக்கக்கூடும்

... உங்கள் குழந்தையின் (முழு முகத்தின்) மிகச் சமீபகாலத்திய போட்டோ ஒன்றை அனுப்புங்கள்: • 1½ வயதும், அதற்குக் கீழ்ப்பட்டதும். • 1½ வயதிலிருந்து 3 வயதுவரை. போட்டோவை கால்கேட் பேபி பவுடர் வார்த்து அல்லது ஜயண்ட் சைஸ் டப்பியின் மூடியுடன் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்:

கால்கேட் பேபி பவுடர் புகைப்படப் போட்டி
தபால் பெட்டி நம்பர் 1955, பம்பாய்-1.

விதிகளும், கட்டுப்பாடுகளும்:

1. நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டோக்கள் அனுப்பலாம்; ஆனால் ஒவ்வொரு போட்டோவுடனும் கால்கேட் பேபி பவுடர் வார்த்து அல்லது ஜயண்ட் சைஸ் டப்பியின் மூடியொன்று அனுப்பவேண்டும்.
2. மகாராஷ்டிர ஸ்டேட் வீமன்ஸ் கௌன்ஸிலின் 5 அங்கத்தினர்கள் அடங்கிய குழு ஒன்று போட்டியின் முடிவை நிர்ணயிக்கும். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது, எல்லோரையும் கட்டுப்படுத்தும்—இது சம்பந்தமாக எந்தவிதமான கடிதத்தொடர்பும் அனுமதிக்கப்படமாட்டாது.
3. ஜூலை31, 1964அன்று முடிவுபெறும் இந்தப்போட்டியில் கால்கேட்-பாமாலிவ் (இந்தியா) பிரைவேட் லிட்., மற்றும் [illegible] அட்வர்டைஸிங் இன்க். இவைகளின் ஊழியர்கள் கலந்துகொள்ளத் தகுதியற்றவர்கள்.

பரிசுகள்

1½ வயதிற்குக் கீழ்	1½ வயதிலிருந்து 3 வயது வரை
முதல் பரிசு: ரூ. 1,000/-	முதல் பரிசு: ரூ. 1,000/-
50 ஆறுதல் பரிசுகள் ரூ. 50/-வீதம்	50 ஆறுதல் பரிசுகள் ரூ. 50/-வீதம்



நானும் மனிதன்தான்

இதை நிரூபிப்பதற்குத்தான் இந்தப் படத்தில் ஒவ்வொருவரும் பாடுபட்டிருக்கின்றனர். அழுது, புரண்டு, சண்டையிட்டுச் சேற்றில் உருண்டு, விஷம் கொடுத்துக் கொன்று, சிறையில் அடைபட்டுக் கடைசியில் ''நானும் மனிதன்தான்'' என்பதை அறிவிக்க முயன்றிருக்கின்றனர்.

இந்தப் படத்தைத் தயாரிக்கும் முன்பு, கதையைப் பற்றி யாருமே சிந்தித்ததாகத் தெரியவில்லை. பாடலைப் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. படம் பார்ப்பவர்களும் மனிதர்கள்தான் என்று நினைத்ததாகவும் தெரிய வில்லை. சகோதர பாசத்தை அடிப்படையாகக் கொண்ட பழைய கதைதான்.

ஆனந்தன் மூவிஸின் தயாரிப்பான இந்தப் படத்தில் ஆனந்தன்தான் கதாநாயகன் — முத்தையா — படிக்காத பட்டிக்காட்டு முரடன்; அவன் தம்பி சந்திரன் பட்டணத்தில் படித்தவன். அண்ணனுக்கு ஒரு பட்டிக்காட்டுப் பெண் காதலி — கே. சந்திரகாந்தா. தம்பியின் காதலி, பட்டணத்துப் பகட்டுப் பெண் — ஷீலா. முத்தையா வேலைக்காரிக்குப் பிறந்தவன் என்று காரணம் காட்டி ஏக ரகளை நடக்கிறது. சந்திரனின் திருமணம் இதன் காரணமாகத் தடைப்பட்டுப் போகிறது. முத்தையா தன் தம்பியின் கல்யாணத்தில் தலை காட்டுவதில்லை என்று சத்தியம் செய்து தன் பங்குச் சொத்தையும் விட்டுக் கொடுத்துக் கலியாணத்தை நடத்தி வைக்கிறான். கடைசியில் தம்பிதான் வேலைக்காரியின் மகன் என்ற உண்மை வெளியாகிறது.

ஆரம்பத்திலிருந்தே, அடி, உதை, குத்து என்று ஆனந்தனுக்கு நல்ல சான்ஸ்! சேற்றில் விழுந்து புரளவும், கண்ணீர் விட்டுக் கதறவும், தாடியோடு தோன்றவும் கூட 'சான்ஸ்' கிடைக்கிறது.

அவர்தான் கதாநாயகன் என்பதை நிரூபிக்க ''நானும் மனிதன்தானடா'' என்று பாடிக்கொண்டே வேக நடை போடுகிறார். அது தமிழ்ப்படக் கதாநாயகர்களின் தனி உரிமையாயிற்றே! அதை விட்டுக் கொடுக்கலாமா? (அந்தக் காட்சியைப் பிடிக்காதவர்கள் போனால் போகட்டும் போடா!)

ஆனந்தனின் நடிப்பில் வீரம், சோகம், இரண்டும் சிறந்து நிற்பது பாராட்டுக்குரியது. சண்டைக் காட்சிகளில் சுறுசுறுப்பும் பரபரப்பும் காட்டும் இவர் சோகக் காட்சியில் நிதானித்து நடித்து நல்ல பெயரைத் தட்டிக் கொள்கிறார்.

அசோகன் முரட்டுக் குரலில் கத்தியே தம் வில்லன் பாகத்தை ஸ்தாபித்துக் கொள்ளப் பார்க்கிறார்.

சந்திரகாந்தா, ஷீலா — இருவரும் இரு துருவங்கள்.

சந்திரகாந்தா துள்ளிக் குதித்து, கண்ணீர் விட்டு, வீர வாசகம் பேசிக் கதாநாயகி பாகத்தை எட்டிப் பிடிக்க முயன்றிருக்கிறார். ஆனால் ''இது சத்தியம்'' படத்தில் அவரிடம் கண்ட மெருகை இதில் ஏனோ காண முடியவில்லை.

நடிப்பைப் பற்றிய கவலையே இல்லாமல் உடலழகைக் காட்டியே சமாளிக்க முயன்றிருக்கிறார் ஷீலா. ஆனால் அவர் வருகிற கட்டங்களிலெல்லாம் கண்களைக் கெட்டியாக மூடிக் கொள்ளத் தோன்றுகிறதே!

பாண்டி செல்வராஜ் நல்ல மனிதர்! தாமும் அதிகமாகச் சிரமப்பட வில்லை. படம் பார்ப்பவர்களையும் சிரமப்படுத்தவில்லை. அந்த மட்டில் சந்தோஷப்பட வேண்டியதுதானே!

நாகேஷின் தமாஷ்கள் எல்லை மீறிப் போய் ஆபாச வழிகின்றன. காய்கறி நறுக்கும் போது கையை நறுக்கிக் கொண்டு 'ஐய்யோ முறையோ' என்று கூச்சல் போடுவதும், உடனே காயத்தின் மீது மிளகாய்ப் பொடி தாளி, மண்ணெண்ணெயைக் கொட்டி.... என்ன வேடிக்கையோ, வினையோ! நாகேஷ் கொஞ்சம் பொறுப்போடு நடிக்க வேண்டும்: வார்த்தைகளைப் புரியும்படி தெளிவாய்ப் பேசவேண்டும். இல்லாவிட்டால் அவருடைய ஹாஸ்யங்களுக்காக அவர் ஒருவர் மட்டும் சிரிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுவிடும்!

''நானும் மனிதன்தான்'' என்பதை வலியுறுத்தப் புதிய கதை ஒன்றைத் தயாரித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். அதை விடுத்து அரைத்த மாவையே மறுபடியும் அரைத்திருக்கிறார்களே! — காந்தன்





உண்மைக் கதை

[உலகப் புகழ்பெற்ற முதல் இந்திய சர்க்கஸ் கம்பெனி 'கார்லேகர் கிரேண்ட் சர்க்கஸ்.' இதன் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி எல்லாவற்றையும் கலைபட ஸர்கஸீச்யா ஜகாந்த எனும் மராட்டி நூலாக எழுதியிருக்கிறார், சர்க்கஸ் அதிபரின் பிள்ளை செவாஜி சங்கர் கார்லேகர். மெஜஸ்டிக் புக் ஸ்டால், பம்பாய், வெளியிட்டுள்ள இந்நூலின் உருக்கமான பகுதி இது.]

பர்மாவின் தலைநகர் ரங்கூனில் எங்கள் சர்க்கஸ் குழு முகாமிட்டிருந்தது. அங்கு வந்து இடம் பிடித்து, குடி அமைத்து, ஆட்டம் ஆரம்பித்து எட்டே நாட்கள் ஆகியிருந்தன. விடியற்காலையில் பர்மா சர்க்காரின் பாதுகாப்பு இலாகா அதிகாரிகள் ஆயுதம் தாங்கிய போலீஸாருடன் படையெடுத்து வந்து, உத்தரவு என்ற பெயரில் ஓர் இழவோலையை எங்களிடம் நீட்டினார்கள்.

''இன்னும் இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் உங்கள் சர்க்கஸ் கம்பெனி ரங்கூன் எல்லையைத் தாண்டிப் போய்விடவேண்டும்!''

இது சாத்தியமா? வைக்கவுண்டோ, போயிங்கோ வரிசையாகக் காத்துக் கொண்டா இருக்கின்றன, எங்களை யெல்லாம் அப்படியே அலாக்காகத் தூக்கிப் போய் ஆபத்தில்லாப் பிரதேசத்தில் கொண்டுவிட? சர்க்கஸ் கம்பெனியைக் குடிபெயர்த்துக் கொண்டு போவது சாமான்யமான காரியமா?

மேலும், முதல் நாள் இரவு ஏற்பட்ட பயங்கரமான குண்டுவீச்சால் ரங்கூன் நகரமே பதறிப் பரிதவித்துப் போயிருந்தது. எங்கள் குழுவில் ஓர் ஆள்கூடக் கண் அயரவில்லை. முதல் காட்சி ஆரம்பமான சமயம். பிரும்மாண்டமான கூடாரம். நிறையக் காட்சியாளர்கள் நெருக்கி நிறைந்திருந்தார்கள். கடந்த ஏழு நாட்களுக்குள் எங்கள் சர்க்கஸுக்குப் பிரமாதமான புகழ். நகரத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் — ஏன்?— அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்தும்கூட ஜனங்கள் கும்பல் கும்பலாக எங்கள் சர்க்கஸ் வித்தைகளைக் காண வந்து குவிந்தார்கள். எக்கச் சக்கமான வசூல் கிடைத்தது.

இந்த அமித லாபத்தையும் புகழையும் கண்டு எந்தப் பாவி திருஷ்டி வைத்துத் தொலைத்தானோ, எங்களுடைய முடிவு காலம் சப்பைமூக்கு ஜப்பானியக் குள்ளப் பிசாசுகள் ரூபமாக வந்து தொலைந்தது. எட்டாவது நாள், வசூலெல்லாம் முடிந்து, காட்சியும் ஆரம்பமாகி விட்டது. வானத்தில் பேரிரைச்சலுடன் சாரி சாரியாகப் போர் விமானங்கள் பறந்து வந்தன. ரங்கூனின் பல பகுதிகளிலும் குண்டுகளைப் பொழிந்து சர்வ நாசம் செய்து விட்டுத்தான் திரும்பின ஜப்பானியப் போர் விமானங்கள். சர்க்கஸ் கூடாரத்தின் தலை வாயிலில் ஒரு குண்டு விழுந்து வெடித்தது. காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் கூக்குரலிட்டுக் கொண்டு வெளியே ஓடலானார்கள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், கிழவர்களும் இடித்துத் தள்ளிக் கொண்டு, உயிர் பிழைத்தால் போதும் என்று, கூட்டத்தில் இடிபட்டு, மிதிபட்டு, காயமடைந்து ஓட்டமாக ஓடிய பரிதாபத்தைக் கண்ட எங்கள் நிலை எப்படியிருக்கும்? எங்கும் அழுகுரல், அலறல், கூக்குரல்!

ஏகப்பட்ட விளக்கு ஜோடனைகளும், அலங்கார அமைப்புக்களுமாக 'இந்திரலோகம்' போல் ஜொலித்துக் கொண்டிருந்த சர்க்கஸ் கூடாரம் அரைமணி நேரத்துக்கெல்லாம் அவலக் கோலம் பூண்டு விட்டது. நொந்து மனமிடிந்து போய் உட்கார்ந்திருந்த எங்களுடைய வயிற்றெரிச்சலை ஜப்பான்காரன் கொட்டிக் கொண்டது போதாதென்று, பர்மாக்காரனும் பங்குக்கு வந்து சேர்ந்து விட்டான்.

'இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் சகலத்தையும் தூக்கிக் கொண்டு எல்லைக் கப்பால் போய் விட வேண்டுமாம்!' இது முடிகிற காரியமா?

எங்கள் சர்க்கஸில் (கார்லேகர் கிரேண்ட் சர்க்கஸ்) அப்போது இருபத்தைந்து யானைகள், அறுபது குதிரைகள், பன்னிரண்டு ஒட்டகங்கள், ஆறு கங்காருகள், மூன்று கொரில்லாக் குரங்குகள், ஆறு வரிக் குதிரைகள்,



போர் செய்த அவலம்


இரண்டு ஒட்டைச் சிவிங்கிகள், நீர்க் குதிரை இருபத்தைந்து உயர் ஜாதி நாய்கள், ஆறு கரடிகள், சிங்கம், புலிகள் நாற்பது; இவைகளைத் தவிர மான்கள், குரங்குகள், மலைப் பாம்புகள், கிளிகள் முதலானவைகளும் நிறைய இருந்தன. ஆட்கள் மட்டும் (இருபாலரும்) ஐந்நூறு பேர்கள். இவர்களில் நூற்றி இருபத்தைந்து வெள்ளைக் காரர்கள்; மற்ற ஆட்டக்காரர்களில் ஆண் பெண் அடங்கலாகச் சீனக்காரர், ஜப்பானியர், மலையாளிகள், தெலுங்கர், நேப்பாளிகள், பஞ்சாபிகள் யாவரும் இருந்தார்கள். மகாராஷ்டிரக்காரர்கள் மட்டும் நூற்றி ஐம்பது பேர்கள்.

பர்மா — மலாயா விஜயத்துக்காகவே ஏராளமான பணச் செலவில் பல புதிய சாதனங்களை வாங்கிச் சேகரித்திருந்தோம். பத்தாயிரம் பேர்கள் சௌகரியமாக உட்கார்ந்து பார்க்குமளவுக்கு விசாலமான கூடாரம் அமைத்திருந்தோம். நாற்பதினாயிரம் ரூபாய் செலவில் புதிதாக வாங்கிய சாதனங்களைக் கொண்டது அந்தக் கூடாரம். பல மாதங்கள் வரையிலும் முகாமிடும் நோக்கத்துடன் ஆயிரக் கணக்கில் செலவு செய்து உறுதியான காலரிப் படிகளைக் கட்டியிருந்தோம். புதியனவாக இரண்டாயிரம் இரும்பு நாற்காலிகள் வாங்கியிருந்தோம். இப்படியே புதிது புதிதாகச் சேகரித்த சாமான்கள் ஏராளம். தளவாடங்களைக் கொண்டு செல்ல மட்டும் எங்களிடம் நாற்பது டிரக்குகள் இருந்தன.

சர்க்கஸ் அதிகாரிகள், பிரதான ஆட்டக்காரர்கள் ஆகியவர்களுக்குத் தங்கியிருப்பதற்காக, ரயில் வண்டியின் முதல் வகுப்புப் பெட்டியைப்போல், சகல வசதிகளுடன் 'வண்டி வீடுகள்' தயாரித்திருந்தோம். ஒவ்வொரு வண்டி வீட்டின் அடக்கம் இருபத்தையாயிரம் ரூபாய். இப்படிப் பல வீடுகள் வைத்திருந்தோம். இந்த வண்டி வீடுகளையெல்லாம் இழுத்துச் செல்வதற்கென்றே நாற்பதினாயிரம் ரூபாய்க்கு ஒரு ரயில் இஞ்சினை வாங்கினோம்.

எங்கள் தளவாடங்கள், பரிவாரங்கள் எல்லாவற்றையும் நாடு விட்டு நாடு கொண்டு செல்ல, ஆறு பெரிய ரயில் வண்டிகளை வாடகைக்கு அமர்த்திக் கொண்டிருந்தோம் என்றும் பாருங்களேன்! ஒவ்வொரு ரயில் வண்டிக்கும் முப்பத்தேழு பெரிய பெட்டிகள் உண்டு.

சாமான்செட்டுகளை மூட்டை கட்டி, வண்டிகளில் ஏற்றிப் பயணம் புறப்பட ஆயத்தம்



செய்து முடிப்பதற்குள்ளே இருபத்து நான்கு மணி நேரக் கெடு முடிந்து விட்டது.

'எப்பொழுது கெடு நேரம் முடியும்!' என்று காத்திருந்தார்களோ என்னவோ யம தூதர்கள் மாதிரி பர்மிய சோல்ஜர்கள் அணி வகுத்து வந்தார்கள். சர்க்கஸ் மிருகங்கள் எல்லாவற்றையும் சுட்டுக் கொல்ல மேலிடம் பிறப்பித்த உத்தரவை எங்களிடம் நீட்டி விட்டார்கள்.

எங்கள் நாடியே ஒடுங்கி விட்டது. பெற்ற பிள்ளை குட்டிகளைப் போல் பேணி வளர்த்த ஜீவன்களுக்கு இப்படியா ஒரு துர்க்கதி ஏற்பட வேண்டும்? எங்கள் அழுகை, கண்ணீர், கவலை பற்றி அவர்களுக்கு என்ன அக்கறை? போர் வீரர்கள் தம் சூரத்தனத்தைக் காட்டத் தொடங்கி விட்டார்கள்.

சிங்கங்கள் கர்ச்சித்துக் கொண்டே மடிந்தன.

புலிகள் உறுமியவாறே இறந்தன.

யானைகளின் பிளிறல்களில் அவலம் ஒலமிட்டது. குதிரைகளின் கனைப்பு ஒலியில் மரணக் கதறலே கேட்டது.

ஐயோ! மான்களின் மருண்ட பேதைப் பார்வையைப் பார்த்தும் இரக்கம் ஏற்படவில்லையே கொலை பாதகர்களுக்கு!

பசியின் போதும், பசி அடங்கியபின்னும் சர்க்கஸ் மிருகங்கள் எழுப்பும் எக்காளங்களையே கேட்டுப் பழகியிருந்த எங்களுக்கு அவைகளின் பரிதாபமான அவல ஒலங்களைக் கேட்கக் கேட்க, உடம்பெல்லாம் தீப்புண்பட்டுப் பரிதவிப்பது போல் துடித்தோம். வேறு என்ன செய்வது?

ஜப்பானியப் பிடாரிகளைச் சபித்தோம் ; பர்மிய அரக்கர்களைக் கொன்றுவிட எண்ணினோம். கபோதிக் குரோதம் கனவுக்கு உதவுமா ?

பேர்ல் ஹார்பரை அழித்த செருக்கு. சிங்கப்பூரைச் சீர்குலைத்த இறுமாப்பு — இங்கே ரங்கூனையும் தாக்கத் துணிவைக் கொடுத்தன ஜப்பானிய வெறியர்களுக்கு. அமெரிக்காவையும் பிரிட்டனையும் அடிபணிய வைத்துவிடப் போவதாகக் கனவு கண்டு, ஆயிரமாயிரம் ஆகிய மக்களை அழித்தும் அநாதையாக்கியும் படுநாசம் விளைவித்தார்களே, இந்த அநியாயம் அடுக்குமா?

எல்லா உடைமைகளையும் ரங்கூனிலேயே போட்டு விட்டு, கால்நடையாகவே பர்மாவைக் கடந்து இந்தியா நோக்கிப் புறப்பட்டோம். அப்போது எனக்குப் பதினேழு, பதினெட்டு வயதுதான் இருக்கும். சர்க்கஸ் அதிபரான என் தந்தை புரொபஸர் சங்கரராவ் நோய்வாய்ப்பட்டிருந்ததால், அவர் ரங்கூனுக்கு வரவில்லை. நான் மெட்ரிக் பாஸ் செய்த மகிழ்ச்சிக்கு அன்பளிப்பாக, என்னையும் ரங்கூனுக்கு அனுப்பி வைத்தார். சர்க்கஸின் முழுப் பொறுப்பும் ராம்பாபு ஜோஷியிடம் இருந்தது. தந்தையின் உற்ற நண்பர். திறமை மிக்கவர்.

என் தந்தை எவ்வளவு வருஷங்களாக, எத்தனை கஷ்ட நஷ்டங்கள்பட்டு இந்தச் சர்க்கஸ் கம்பெனியை வளர்த்து இவ்வளவு பெரிதாக்கி யிருக்கிறார்! இந்தத் துக்கிரி கால் எடுத்து வைத்ததும், உருத் தெரியாமல் அவ்வளவு சீரும் சிறப்பும் அழிந்து போய் விட்டனவே ! இத்தகைய பேரழிவைப் பார்த்த பிறகும் நான் உயிரோடு வாழ்கிறேனே— இதுதான் பேரதிசயம்!

1878ம் வருஷத்தில், ஜாங்கலி சமஸ்தானத்து அரசரின் உதவியுடன் விஷ்ணுபந்த் சத்ரே என்பவர் 'சத்ரே க்ராண்ட் சர்க்கஸ்' என்ற பெயரில் முதல் இந்திய சர்க்கஸ் கம்பெனியை ஆரம்பித்தார். அப்போதிருந்தே அவருடன் வேலை செய்து, பிறகு அதே கம்பெனியை உடைமையாகப் பெற்று, உலகப் புகழ் பெற்றவர் என் தந்தையார். 1933ல் ஆப்கானிஸ்தான் மன்னர் அமானுல்லாவின் அழைப்பை ஏற்று, ஒரு மாத காலம் அங்கு சென்று நிறையப் புகழும் பொருளும் ஈட்டி வந்த பெருமை அவருக்கு உண்டு. தொடர்ந்து பல வெளிநாடுகளுக்கும் திக்விஜயம் செய்திருக்கிறார். புரொபஸர் சங்கரராவ் கார்வேகர் என்றால், சர்க்கஸ்காரர்கள் மதிப்புடன் சென்னி சாய்த்து வணங்கும் கௌரவத்தை என் அப்பா பெற்றிருந்தார். அவரால் இந்தப் பேரிடியைத் தாங்கிக் கொள்ள முடியுமா ?

சர்க்கஸ் ஊழியர்கள் ஐந்நூறு பேர்களும் உணவு உடைகளைச் சுமந்து கொண்டு, பாரதம் நோக்கி வழி நடந்தோம். நூற்றுக்கணக்கான பர்மாவாழ் இந்தியர்களும் எங்களுடன் பயணம் செய்தார்கள். சாரி சாரியாக மனிதக் கூட்டம் பர்மாக் காடுகளைக் கடந்து, பசியும் தாகமும், வழிக் களைப்பும், மன வேதனையும் வாட்டி வதைக்க நடைப் பிணங்களாகப் பிரயாணம் செய்தோம். அப்போது வழியில் எங்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் கொஞ்சமா?

பர்மியக் கொள்ளைக்காரர்கள் பதுங்கியிருந்து தாக்கினார்கள். நாகா மலைக்காரர்களும் எங்களைச் சூறையாடினார்கள். முதல் இரு வாரங்களுக்குள் பல தடவைகள் கொள்ளைக் கும்பலோடு மல்லுக்கு நின்றதில் எங்கள் ஆட்களில் ஐம்பது பேர்கள் மடிந்தார்கள்.

அஸ்ஸாம், அராகான், காட்டுப் பாதைகளில் செல்லும்போது, வன விலங்குகளின் தாக்குதல்களை அடிக்கடி சமாளித்துக்கொண்டு முன்னேற வேண்டியிருந்தது. ஓர் அடி முதல் ஐம்பது அடி வரையுள்ள விதம் விதமான பாம்புகளின் பயங்கரத் தாக்குதல்களை இன்று நினைத்தாலும் மேனி பதறுகிறது. பசி, தாகம், களைப்பு — சகலத்தையும் மறந்து துறந்து அந்த ஆபத்துக்களைக் கடக்க விரைவாக நடந்து கொண்டிருந்தோம்.

ஓரிடத்தில் ஐம்பதடி நீளமுள்ள பெரிய மலைப் பாம்பு ஒன்று இரைக்கு ஏங்கிக் காத்துக் கிடந்தது. நல்ல காலமாக நாங்கள் சிலர் அதைப் பார்த்து விட்டோம். அந்தப் பாதையை விட்டு, வேறு வழியாக முன்னேறினோம். எங்கள் கடைசிக் கும்பலில் வந்து கொண்டிருந்த நஞ்சப்பா என்பவன் கவனக் குறைவாக, பாம்பு இருக்கும் பாதையில் போய் விட்டான். வலுவிலே வரும் இரையை விட்டு விடுமா அது? தாவிக் கவ்வியது. மெள்ள விழுங்க ஆரம்பித்தது. நஞ்சப்பாவின் அலறலைக் கேட்டதும் முன்னால் சென்றவர்கள் திரும்பி ஓடி வந்தார்கள். உடனே கத்தியால் மலைப் பாம்பின் உடலைக் கிழித்து,

அதிசயமான புதுமுறை தயாரிப்பு



பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்

எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய் கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.



இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
இந்தியாவில் தயாரிப்பது

காஷ்மீர் போக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



உன்னதமான காஷ்மீர் போக்கே யின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் போக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக் கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் கவனமுடனும் கையாளுங்கள். காஷ்மீர் போக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக்கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றதுமானது. நீங்கள் இருவருமே உபயோகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!



காஷ்மீர் போக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

நஞ்சப்பாவை மரண வாயிலிலிருந்து விடுவித் தோம். ஐயோ! அந்தப் பயங்கரத்தை நினைத் தாலே உரோம நாளங்கள் விதிர்க்கின்றன! அன்று நல்லபடியாகப் பிழைத்து வந்த நஞ்சப்பா பிறகு ஜெமினி சர்க்கஸில் சேர்ந்து சௌக்கியமாக இருந்து வந்தான்.

அந்தக் காட்டுப் பாதையில் பிரயாணம் செய்த போது, மலேரியா விஷ சுரத்துக்கு இரையானவர்கள் ஏராளம். எங்கள் கூட்டத் தாரின் பங்கு ஐம்பது பேர்கள். நான் வழி யெல்லாம் கதறிக் கதறி அழுதேன். மானேஜர் ஜோஷி எனக்கு எவ்வளவோ ஆறுதல் சொல்லித் தேற்றி வந்தார். என் துக்கம் இலகுவில் விலகக் கூடியதா?

நோய், பசி, சோர்வு எல்லாமாகச் சேர்ந்து உடலை உருக்குலைத்து விட்டன. மன நிலையைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். மணிப்பூர் எல்லைக்கருகில் வந்துகொண்டிருந்த போது, கொள்ளைக்காரர்கள் எங்களைத் தாக்கி எஞ்சியிருந்த கந்தல் கிழிசல், தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

கிட்டத்தட்ட அழிவின் தலைவாயிலுக்கு வந்துசேர்ந்த எங்களைத் தெய்வம் 'சோதித் தது போதும்' என்று இரங்கி, ஆபத்துதவி யாக இந்தியப் பட்டாளப் பிரிவு ஒன்றைக் காட்டித் தந்தது. பர்மாவில் சிக்கியிருந்த பிரிட்டிஷ் ராணுவத்தினரைக் காப்பாற்ற இந்தியப் படையணிகள் அங்கே போய்க் கொண்டிருந்தன. அவர்கள் ஜீப்புகளைக் கண்டதும், எங்கள் மானேஜர் ஜோஷி கூவி அழைத்தார். அங்கிருந்த ஆங்கிலேய அதி காரிகளிடம் எங்களுடைய சோகக்கதை யைத் தெரிவித்தார்.

ராணுவ வீரர்களும், அதிகாரிகளும் எங் களுடைய பரிதாபமான கதையைக் கேட்டுக் கண்ணீர் வடித்தார்கள். அவர்கள் எங் களுக்கு உணவு, உடை, மருந்து எல்லாம் தந் தார்கள். தங்கள் ஜீப்புகளிலேயே எங்களை மணிப்பூரின் தலைநகர் இம்பாலில் கொண்டு போய் விட்டுத் திரும்பினார்கள்.

அங்கு சில தினங்கள் தங்கி இளைப்பாறி விட்டு, நாங்கள் நடந்தே டிப்ருகட் வந்து சேர்ந்தோம். பிறகு, அங்கிருந்து சௌகரிய மாகக் கல்கத்தாவுக்கு வந்தோம். எங்கள் குழுவினரில் — ஐந்நூறு பேர்களில் நூற்றைம் பது பேர்களை வழியிலேயே கொள்ளைநோய்க்கும் பசிக் கொடுமைக்கும் பலிகொடுத்தோம்.

தாய்நாடு திரும்பியும் என் விசனம் அடங்க வில்லை. தூக்கத்திலும், விழிப்பிலும் என் எதிரே அந்த ஆறு சிங்கக் குட்டிகளும் தீனமாக உயிர்ப் பிச்சைக்கு யாசிப்பதைப் போன்ற ஒரு பிரமை!

எல்லா சர்க்கஸ் மிருகங்களையும் பர்மிய சோல்ஜர்கள் சுட்டுக் கொன்றபின், என் அரவணைப்பிலிருந்த ஆறு சிங்கக் குட்டிகளை யும் கொன்றுதானாக வேண்டும் என்று அடம் பிடித்தார்கள். எவ்வளவோ கெஞ்சிப் பார்த் தேன். பாதகர்கள் செவிசாய்க்கவில்லை.

என் அப்பாவுக்கு மட்டுமல்ல, சர்க்கஸ் ஊழியர்கள் அவ்வளவுபேர்களுக்குமே செல் லக் குழந்தைகளாகவே ஓட்டுறவும் சீராட்டலு மாக அந்தச் சிங்கக் குட்டிகள் வளர்ந்து வந்தன. சிங்கக்குட்டிகளை வளர்ப்பு மிருகங் களாக்க, இரண்டு வயது வரையிலும் பயிற்சி கொடுக்க வேண்டும். ஆறு மாத காலம் அவை களின் முதுகைத் தடவிக் கொடுத்துத் தாஜா செய்தால்தான் மேற்கொண்டு பயிற்சியைத் தொடங்க முடியும். அவை என்னிடம் எவ் வளவு பிரியம் வைத்திருந்தன, தெரியுமா? என் கையால் கொடுத்தால்தான் அவை உணவு உட்கொள்ளும். என்னை ஒரு நாளாவது பார்க்காதிருந்தால், அவைகளுக்கு இருப்புக் கொள்ளாது.

அவைகளை அரக்கர்கள் சுட்டுக் கொன்ற மாபாதகத்தை நான் பார்க்க வில்லை. அந்தத் தருணத்தில் அவை என்னை நினைத்து, எதிர் பார்த்து எப்படி யெல்லாம் பரிதவித்திருக் குமோ! இந்த நினைப்பே முதலில் என்னைப் பிரக்ஞை இழக்கச் செய்து விட்டது!

மானேஜர் என்னைத் தழுவி, "இந்தியா வுக்குத்தான் வந்து சேர்ந்து விட்டோமே; இன்னும் ஏன் சிவா, நீ அழுது கொண்டிருக் கிறாய்?" என்று கேட்கும்போது, என் தொண்டையைத் துக்கம் வந்து அடைக்கும்.

வளர்த்த பாசமும் அழித்த சோகமும் மனிதனுக்கு மனிதன்தான் இருக்குமா?

'நான் ஏன் மனிதனாகப் பிறந்தேன்?' என்ற கழிவிரக்கம் அன்றைக்கும் இருந்தது; என் றைக்குமே இருக்கும்!

— சௌரி



காஞ்சி அருகிலுள்ள அம்பி ஏரமத்தில் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று வஸந்த நவராத்திரி விழா விசேஷ பூஜைகளுடன் விமரிசையாக ஆரம்பமாயிற்று. பக்தர் களும், சங்கீத வித்வான்களும் ஆசாரிய சுவாமிகளைத் தரிசித்து ஆசி பெற்றனர்.



அம்பீஸ் கபே பாகஸ்தர் கே. ஏ. சுப்பிரமணியன் (ராஜன்) அவர்களுக்கும் திருவையாறு ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணி அய்யர் அவர்கள் குமாரத்தி சௌ. ராஜலக்ஷ்மி (லக்ஷ்மி)க்கும் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



சென்னை ஹைகோர்ட் ரிடயர்டு அஸிஸ்டென்டு ரிஜிஸ்திரார் ஆர். ஸ்ரீநிவாஸனுடைய புதல்வி சௌ. ஜெயலக்ஷ்மிக்கும் கிராம்ப்டன் கம்பெனி என்ஜினீயர் சிரஞ்சீவி ஜி. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் சென்னை ஷெனாய் நகரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!



ஷேக்ஸ்பியரும் கம்பரும்



ஷேக்ஸ்பியரின் நானூறாவது பிறந்த தின விழாவைக் கொண்டாடும்போது ஷேக்ஸ்பியரையும் கம்பரையும் ரசித்த டி. கே. சி. யிலிடம் நினைவு செல்கிறது. ஆம்! டி.கே.சி. கம்பரிடம் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தாரோ அந்த அளவுக்கு ஷேக்ஸ்பியரிடமும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்று சொல்லலாம். எனினும் ரஸிகமணி தமக்கு ஷேக்ஸ்பியரின் கவிதையை ரஸிக்க முடியாது. கருத்தைத்தான் ரஸிக்க முடியுமெனக் கூறுவார். அவரவர்களுக்கு அவரவர் தாய்மொழியில் தான் கவிதையை நன்றாக ரஸிக்க முடியும் என்பது ரஸிகமணியின் உறுதியான கருத்து.

திருக்குற்றாலத்தில் ஒரு நாள் ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலிருந்து பொறுக்கியெடுத்த மணிகளைத் தொகுத்த ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு மணி மிக அபாரமாக இருப்பதாக என் மனத்துக்குப் பட்டது. அதன் தமிழ் மொழிபெயர்ப்பு இதுதான்:

பத்தரை மாற்றுத் தங்கத்துக்கு
முலாம்பூசப் பார்ப்பதும்
வெண்தாமரை மலருக்கு வண்ணம் தீட்டப்
பார்ப்பதும்
நீல ஆம்பலுக்கு மணம் ஊட்ட முயல்வதும்
பனிக்கட்டியை இன்னும் வழவழப்பாக்க
முயல்வதும்
வான வில்லுக்கு மற்றுமொரு வண்ணத்தைக்
கூட்டப் பார்ப்பதும்
அல்லது
வான மண்டலத்தின் அழகிய நேத்திரமாக
விளங்கும் சூரியனைக் கைவிளக்குக்
கொண்டு அலங்கரிக்க முயல்வதும்
வீணான காரியம், பயித்தியக்காரத்தனமான
அதிகப்பிரசிங்கித்தனமாகும். *

இது என் மனத்தைப் பெரிதும் கவர்ந்ததால் ரஸிகமணி டி.கே.சி. யிடம் என் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளச் சென்றேன்.

அவர்கள் என் கையிலிருந்த புத்தகத்தை வாங்கி மெள்ளப் படித்தார்கள். பிறகு மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக்கொண்டே தாம் உட்கார்ந்திருந்த சாய்மான நாற்காலியில் சாய்ந்தார்கள்.

''ஆம்! ஷேக்ஸ்பியரின் உவமைகள் நன்றாகத்தான் இருக்கின்றன. ஒன்றை விட ஒன்று மிஞ்சித்தான் இருக்கின்றன. ஆனால் கம்பர் இதற்கும் மேலே ஒரு படி போய்விடுகிறார்!'' என்று கூறினர்.

''என்ன!'' என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டேன்.

''ஆமாம். ராமனுக்கு மகுடாபிஷேகம் செய்யத் தசரதன் முடிவு செய்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்ட மக்கள் அடைந்த ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல. பட்டாபிஷேகத்துக்கு வேண்டி அயோத்தியின் வீடுகளையும் வீதிகளையும் அலங்கரிக்கத் தொடங்கி விட்டார்கள்....

''எப்போதுமே சகல அழகும் வாய்ந்ததாக இருக்கிறது அயோத்தி. இருந்தாலும் ஜனங்களைப் பேராசை பிடித்து வேண்டாத படியெல்லாம் அலங்கரிக்கத் தூண்டுகிறது. எதுபோல் என்றால்,

இனிகடர் இரவியைத்
திருத்தும் ஆரம் அப்
பனியிடைப் பள்ளியான்
பரந்த மார்பிடை
மணியினை வேகடம்
வருக்கும் ஆறும்போல்
அணிகள் அணிந்தனர்
அருத்தி மாக்களே!

[இனிகடர் இரவி: அடர்ந்த ஒளிக் கிரணங்கள் கொண்ட சூரியனை; திருத்தும் ஆரும்: ஒழுங்குபடுத்துவது போல்; அப்பனியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை மணி: மகா விஷ்ணு மார்பில் அணிந்துள்ள மணியாபரணம்; வேகடம் வருத்தல்: மாசு நீக்குதல்.]

''யாராவது சூரியனை மெருகுத் தூள் போட்டு விளக்கப் பார்ப்பார்களா? நீல வானத்திடை சயனம் கொள்ளும் நெடுமாலின் மார்பை அலங்கரிக்கிற மணியானது எல்லா உலகும் போய்ப் பிரகாசிக்கும்படியாகக் கிரணங்களை வீசிக்கொண்டிருக்கிறது. அந்த மணியை யாராவது மாசு துடைக்கப் போவார்களா?

''ஆயினும் அழகிய அயோத்தியில் வாழ்ந்த அயோத்தி மக்கள் தங்கள் நகரை அலங்கரித்தார்கள் ஏன்? பைத்தியம் காரணமாகத்தான்!''

ஷேக்ஸ்பியர் விட்ட இடத்தைப் பற்றிக் கொண்டு கம்பர் சஞ்சரித்த கற்பனை லோகத்தை ரஸிகமணி அன்று விளக்கியது இன்றும் என் மனத்தில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது.

—எஸ். வி. எஸ்.

---

* *To gild refined gold, to paint lily,*
To throw a perfume on the violet,
To smooth the ice, or add another hue
Unto the rainbow or with taperlight
To seek the beauteous eye of heaven to
garnish
Is wasteful and ridiculous excess.

நீரோட்டம்

எஸ். ரங்கநாயகி

பன்னிரண்டாம் அத்தியாயம்

சுசீலாவின் தந்தை யசோதைக்காக எது செய்தாலும் சுசீலாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; கோபம் கோபமாக வந்தது. யசோதைக்காகத் தானே தந்தையிடம் வக்காலத்து வாங்கிப் பேசியவள், அவர் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அருவருப்புடன் நோக்கினாள்.

சுசீலா வந்து இரண்டு மாத காலம் ஆயிற்று. சுசீலா வந்திருப்பதைப் பற்றி யசோதை தன் தந்தைக்கு எழுதவில்லை. இருவருக்கும் பிரசவ காலமாயிற்றே எனத் தந்தை கஷ்டப்பட்டு யாரையாவது அனுப்பிவிடப் போகிறாரே என்று அவள் பயந்தாள். சுசீலாவிடம் தந்தைக்கு விழுந்திருக்கும் நல்ல அபிப்பிராயத்தைக் கலைத்துவிட அவள் விரும்பவில்லை.

சுசீலா முன்போல் சரளமாகப் பழகாததை உணர்ந்தாள் யசோதை. சித்தியிடம் அன்பு செலுத்த வேண்டுமென்று வாதாடியவள் இப்பொழுது தன் வெற்றியில் ஏன் ஆனந்தம் காட்டவில்லை...? முன்பு வாதாடியதெல்லாம் வெறும் வெளிப் பூச்சுத்தானா, அல்லது அவள் மனத்தைப் பாதிக்கக் கூடிய விஷயம் ஏதேனும் நேர்ந்து விட்டதா? பேச்சுப் போக்கில் கல்கத்தா வாழ்க்கையைப் பற்றி அறிய முயன்றாள் யசோதை. தியாகுவைப் பற்றிப் பேச்செடுத்தாலே சுசீலா சீறி விழுந்தாள். யசோதைக்குத் தந்தி, கடிதம், அதன் உறை இவைதான் நினைவுக்கு வந்தன. சுசீலாவின் அப்பாவிடம் அவள் இதுபற்றி ஏதும் கூற விரும்பவில்லை. அதனால் தானாகவே கடிதம் எழுதிவிட்டாள். அண்டை அயலார் சுசீலா பிரசவத்திற்கு வந்திருப்பதாகக் கருதினர்.

தியாகுவின் கடிதத்தைக் கணவர் தாமே நேராகக் கொண்டு கொடுத்தது பற்றி அவளும் வருந்தினாள். வயது வந்த பெண்ணுக்கு எதிரில் அதுவும் மனக் குமைச்சல் காரணமாக வாடியிருப்பவளுக்கு எதிரில் இவர் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்?

''சுசீலா! தியாகு கடிதம் எழுதியிருக்கிறான்'' என்று யசோதை உரக்கக் கூறினாள் சுசீலாவின் காதில் விழும்படி.

சுசீலா இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை.

யசோதை கடிதத்தை எடுத்துக் கொண்டு சுசீலாவின் இருப்பிடத்துக்கு வந்தாள். ராஜு கோபித்தார். ''யசோதை! உன்னை யார் எழுந்து வரச் சொன்னது? அவளுக்கு அக் கடிதத்தில் அக்கறை இல்லை... சிறிது நேரமாவது இருவரும் நிம்மதியாகப் படுத்திருப்பதுதானே!''

தந்தையின் வார்த்தைகளைக் கேட்டதும் சுசீலாவுக்கு விக்கி விக்கி அழவேண்டும்போல் இருந்தது. உடம்பெல்லாம் எரிவது போல் காணப்பட்டது. விருட்டென எழுந்தாள். ''சித்தி! நான் பாட்டுக்கு உட்கார்ந்திருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? ஏன் வம்புக்கு இழுக்கிறாய்?'' சிடுசிடுத்துக் கூறினாள். பிறகு வாசலுக்குச் சென்றுவிட்டாள்.

யசோதையின் மனம் துன்புற்றது. கணவர் தன்னிடம் அன்பாக இருக்க வேண்டுமென எவ்வளவோ ஆசைப்பட்டாள். அனைத்தும் கைகூடியிருக்கும் வேளை இது. எதை உத்தேசித்து ராஜு அவளை விவாகம் செய்து கொண்டாரோ, சுசீலாவுக்கு நல்ல கணவன் அடைவது மூலம் அது சித்தியாயிற்று. அவள் புரிந்த தியாகத்திலும் அவள் முழுதும் நசிவு கண்டுவிடாதபடி அவள் வாழ்வும் நிறைவு காண ஆரம்பித்துவிட்டது. அதுமட்டுமல்ல, சுசீலாவும் தாய்மையைத் தாங்கி வந்திருக்கிறாள். இந்தக் குதூகல வேளையில் சுசீலா இவ்விதம் வெறுப்பைக் கக்கியது அவளுக்கு எல்லையற்ற கிலேசத்தை அளித்தது. இவ்வளவுக்கும் ராஜு சுசீலாவிடம் காரணமின்றிக் கோபிக்கவோ திட்டவோ செய்ததில்லை.

முற்றத்தில் உட்கார்ந்து பலாப் பழத்தை உரித்துவிட்டபின், ''சுசீலா, சுசீலா!'' எனக் குரல் கொடுத்தார் ராஜு. சுசீலா வேண்டா வெறுப்பாக உள்ளே எழுந்து வந்தாள்.

''சுசீலா! இந்தப் பழத்தை எடுத்துக் கொள்'' என்றார் ராஜு.

சுசீலா அதைத் தொடவில்லை. இந்த அப்பாவைத் தெரியாதாக்கும்! சித்திக்கெனப் பழம் வாங்கி வந்திருக்கிறார். மேல் உபசாரமாகப் பெண்ணுக்கும் நீட்டுகிறார்... சித்திக்கு உரிக்க வேண்டிய கஷ்டம் கூட இல்லை. அப்பா அதையும் செய்துவிட்டார். சித்தியும் வாய் திறக்கவில்லை... அந்த நேரத்தில், அவள் தாயார் காரணமில்லாமல் பிடிவாதம் பிடிக்கும்போது அவள் தந்தை எவ்வளவு பணிவிடைகள் செய்திருக்கிறார் என்பது சுசீலாவின் நினைவுக்கு வரவேயில்லை.... பழத்தை எடுக்காமலே அவள் வாசல் அறையை அடைக்கலம் அடைந்து விட்டாள்.


''யசோதை! பழத்தைச் சுசீலாவுக்குக் கொடுத்துவிட்டு நீயும் சாப்பிடு. நான் கடைக்குப் போய் வருகிறேன்....'' என்று கூறிய ராஜு வெளியே சென்றார்.

யசோதை பழத்தை எடுத்துக்கொண்டு சுசீலாவிடம் சென்றாள். ''சுசீலா, இந்தா. இந்தப் பழத்தை எடுத்துக் கொள்'' என்று கூறியபடி சுளைகளிலிருந்து கொட்டைகளை நீக்கி அவளிடம் கொடுத்தாள்.

''எனக்கு வேண்டவே வேண்டாம். நீ கொட்டையை நீக்கும் வேலையைக் கூடச் செய்து விடாதே. அப்பா தவித்துவிடப் போகிறார்....'' சுசீலா முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறினாள்.

யசோதையின் மனம் இரும்பாகக் கனத்தது. உடல்குலுங்க அழுது துடிக்க வேண்டும் போல் இருந்தது. நெஞ்சக் குமுறல்களை ஒருவாறு அடக்கிய அவள், சுசீலாவின் தோள் மீது கை போட்டபடி கூறினாள்: ''சுசீலா! நீ ஏன் இப்படிப் பேசுகிறாய்? உன் அப்பா என்னிடம் சரணமாகப் புக நீயே பிரார்த்திப்பாயே! உன் வேண்டுதலின் பலனாகத்தான் உன் அப்பா சரணமாகப் புகுகிறார். எனக்கு நல்வழி அளித்தவள் நீ. இப்பொழுது நீயே....''

''வேண்டாம் சித்தி. மேலும் கிளறாதே. உன்னைக் கூப்பிட்டுத்தான் எனக்குப் பழம் கொடுக்கச் சொல்ல வேண்டுமாக்கும்!''



''தவறு சுசீலா... உன்னிடம்தான் முதலில் கொடுத்தார். நீ எடுக்காமல் போகவே என்னிடம் கூறினார். உன் அம்மா இருந்தால் உன் அப்பா இது போல் உனக்கு வேண்டியதைப் பற்றிக் கூறமாட்டாரா? நீ என்னை உன் அம்மாவாக நினைத்துப் பழக வேண்டாமா?'' நல்லதனமாக அவள் முதுகைத் தடவிக் கொடுத்தபடிதான் யசோதை கூறினாள்.

''அம்மாவா... ஐயோ, எனக்கு அம்மாவும் இல்லை...அப்பாவும் உதறி விட்டார்.... கணவனுக்கும் லட்சியமில்லை... சூன்யம், சூன்யம்! எங்கும் சூன்யம்... எனக்கு ஒருவரும் இல்லை... நான் அநாதை...'' விம்மலுடன் அழுது விட்டாள் சுசீலா.

யசோதை மெதுவாக அவளைச் சாய்த்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். பிறகு ''அழாதே, சுசீலா. உன் மனத்தில் ஏதோ பெரிய சஞ்சலம். அதன் காரணமாக நினைவு மறந்து பேசுகிறாய் நீ... உன் கல்கத்தா வாழ்க்கையைப் பற்றி வாய் திறந்து கூறினாலாவது பரிகாரம் காணலாம்... தியாகுவிடம் குற்றம் காண முடியாமல் எழுதிவிட்டான். உன்னைத் தவிர வேறு ஒருவருக்கும் அவன் மனத்தில் இடம் இருக்காது எனப் பிரமாண ரூபத்தில் எழுதிவிட்டான்...'' எனக் கூறிக்கொண்டே வந்தவள், சட்டென்று தன் இடுப்பைப் பிடித்துக் கொண்டு, 'ஐயோ, சுசீலா!' எனப் பரிதாபக் குரல் எழுப்பினாள்.

திடுக்கிட்டுச் சுசீலா யசோதையை நோக்கினாள். யசோதை துடிதுடிக்க ஆரம்பித்துவிட்டாள். சுசீலா செய்வது புரியாமல் வாசலுக்கு ஓடினாள். ராஜு திரும்பி விட்டார்.

சுசீலா தன் வெறுப்பை மறந்தாள். ஆதரவுடன் யசோதையின் கையைப் பற்றி டாக்ஸியில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றாள்.

ராஜு சுசீலாவை வீட்டுக்குத் திரும்பும்படி கூறினார். அவளுக்கும் பேறுகாலமாதலால் ஆஸ்பத்திரியில் அவள் அதிக நேரம் இருப்பதை அவர் விரும்பவில்லை. ஆனால் சுசீலா வீட்டுக்குச் செல்ல மறுத்து விட்டாள்.

ஆபத்தான கேஸ் என்றபோது சுசீலாவின் கண்களிலிருந்து தன்னையறியாமல் கண்ணீர் பெருகியது. யசோதைக்கு விவாகமாகி வீடு வந்த புதிதில் தியாகத்தின் ஒளியாக எதிர் நின்ற பிம்பமும், திடீரென்று தான் கல்கத்தாவிலிருந்து திரும்பி வெறுப்பைக் கக்கிய போதும் கருணையின் உருவமாக அவளை ஆதரித்து நின்ற உருவமும் அவள் எதிரே தோன்றித் தோன்றி மறைந்தன.

யசோதைக்குப் பெண் குழந்தை பிறந்து விட்டது. சுசீலா டாக்டரின் அனுமதி பெற்று உள்ளே யசோதையைப் பார்க்கச் சென்றாள். அன்று முழுதும், இரவு எவ்வளவு நேரமாகியும் செய்தி கேட்கத் துடித்துச் சுசீலா ஆஸ்பத்திரியிலேயே இருந்தாள். உண்மையில் சுசீலா வெறுப்பின் சின்னம் அல்ல, சூழ்நிலை அவளை வைத்து ஆட்டுகிறது என யசோதையின் மனம் கூறிக் கொண்டது. யசோதையிடம் பேசிவிட்டுத்தான் சுசீலா வீடு திரும்பினாள். சுசீலாவுக்குத் துணையாக வீட்டில் உமாபதியின் தாய் பாலம் வந்திருந்தாள்.

மறு நாள் ராஜு ஆபீசுக்குப் புறப்படும் போது, ''சுசீலா! இன்று ஆபீசில் வேலை அதிகம். நான் போகும் போது யசோதையைப் பார்த்து விட்டுப் போகிறேன். மாலை வரும்போதும் பார்த்து விட்டு வருகிறேன். பிற்பகல் வேளை மட்டும் நீ ஒரு முறை பார்த்து விட்டு ஏதாவது வேண்டுமானால் கேட்டு விட்டு வா'' என்று கூறிச் சென்றார்.

அவர் சென்றதும் பாலம் கூறினாள்: ''என்ன அதிசயமோ! எல்லோருக்கும் தான் குழந்தை பிறக்கிறது. அதுக்கு மூணு வேளை போய்ப் பார்க்கணுமாக்கும். நிறை மாசத்துப் பொண்ணு. இரக்கமில்லாம உன்னைப் போகச் சொல்றானே இவன்!'' எனக் கூறினாள். சுசீலா தன் மனத்தில் ஏதோ தீய சக்தி எழும்புவது போல் உணர்ந்தாள். ஆயினும் அந்தச் சமயம் அவள் வாய் திறந்து ஒன்றும் கூறவில்லை. பிற்பகல் யசோதையைப் பார்க்கச் சென்றாள். யசோதை பலவீனமாக இருந்தாள்.

மறுநாளே ஒருவரும் எதிர்பாராத விதத்தில் சுசீலாவுக்கும் பிரசவ நோவு கண்டது. பாலத்தின் துணை கொண்டு ராஜு அவளை ஆஸ்பத்திரியில் சேர்த்தார். அதிகக் கஷ்டமில்லாமல் ஆண் குழந்தை பிறந்து விட்டது. தியாகுவின் சாயலையும், சுசீலாவின் நிறத்தையும் கொண்டு தங்க விக்கிரகமாகப் பிறந்து விட்டான் சுசீலாவின் மகன்.

யசோதைக்கு முன்பாகச் சுசீலா வீடு திரும்பி விட்டாள். சில நாட்கள் கழித்துத்தான் யசோதை வீடு வந்தாள்.

மேலும் சில நாட்கள் படுக்கையில் இருக்க வேண்டுமென டாக்டர் கூறியதால் யசோதை வீட்டில் அதிகமாக நடமாட வில்லை. சுசீலாவோ மனக் கசப்பிலும், பாலத்தின் ஓரிரு வார்த்தைகள் காரணமாகவும் வெறுப்புக்

வீரசிங்கன்பேட்டை

ஸ்ரீ மாரியம்மன் திருப்பணி

தஞ்சை மாவட்டத்தில், ஐயாரன் அடித்தலமாகிய திருவை யாற்றுக்கு அருகில் உள்ள வீரசிங்கன்பேட்டை ஸ்ரீ மாரியம்மன் திருக் கோயிலானது சோழ பரம்பரையைச் சேர்ந்த வீரசோழனால் நிர்மாணிக் கப் பட்டது. இத் திருக்கோயில் புண்ணிய நதியாகிய குடமுருட்டி யாற்றுக்குத் தென்பாலுள்ளது.

தொன்றுதொட்டு வேண்டுவார் வேண்டியாங்கு அருளும் கண் கண்ட தெய்வமாக விளங்கும் வீரசிங்கன்பேட்டை ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தைப் பழுது பார்த்து, அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கும், யாத்ரீகர்கள் தங்குவதற்கு வசதியாக புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்கும், திருக்குளத்துக்குப் படித்துறை கட்டுவதற்கும் பக்தர்கள் முயற்சி எடுத்து வருகின்றனர்.

இவ் வைபவத்தில் மெய்யன்பர்கள் எல்லோரும் கலந்து கொண்டு தங்களால் இயன்ற பொருளுதவி புரிந்து ஸ்ரீ மாரியம்மன் திருவருளுக்குப் பாத்திரர்கள் ஆகுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

திருப்பணிக் கமிட்டியார்

பொருளுதவி அனுப்ப வேண்டிய விலாசம்: ஸ்ரீ. வைத்தியநாத அய்யர், திருப்பணிக் கமிட்டித் தலைவர். வீரசிங்கன்பேட்டை, வழி-கல்யாணபுரம், தஞ்சை மாவட்டம்

சிறந்த சாப்பாட்டிற்கு
ஒரு அபார யோசனை





ஆவி பொங்கும் சாதத்துடன் கொஞ்சம்

போல்ஸன் வெண்ணெய்

சேர்த்துக்கொள்ளுங்கள். வெண்ணெய் உருகும் மணமே நீங் கள் ரசித்துச் சாப்பிடப்போகும் உணவின் தன்மையை அதி கரிக்கும்! சுவையுடன் போல்ஸன் வெண்ணெய் கூடுதலான போஷாக்கையும் சக்தியையும் அளிக்கிறது. வாழ்வின் சுவை யை அனுபவியுங்கள்-போல்ஸன் வெண்ணெயை உபயோகி யுங்கள்.

தற்சமயம் போல்ஸன் பாக்கெட்டுகள் மகாராஷ்டிரா, குஜ ராத், மதராஸ், மே. வங்காளம், பீஹார், மற்றும் டில்லியில் மட்டும் கிடைக்கின்றன. டின்கள் எல்லா டவுன்களிலும் கிடைக்கின்றன.

போல்ஸன் வெண்ணெயில் முதன்மை யானது, இணையற்றது.

பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள்.

வீடுதோறும் காப்பி, டீ, மாவு மற்றும் தேயி லைக்கும் போல்ஸன் பெயர்பெற்றது.

போல்ஸன் லிமிடெட்-பம்பாய்-ஆனந்த்-பாட்னா

FU157A TAM EA

கொண்டு படுக்கையில் கிடந்தாள். ராஜூ வீட்டு வேலைகளையும் மேற்கொண்டார்.

குழந்தையைப் பார்க்க வரவேண்டுமென வற்புறுத்தித் தியாகுவுக்குக் கடிதம் எழுதும்படி யசோதை கணவரிடம் கூறினாள். ராஜூவும் அவள் கூறியபடி எழுதினார். ஆபீசில் அதிக வேலை இருப்பதால் வருவதற்கில்லையென அவன் பதில் எழுதி விட்டான். வந்த கடிதத்தைச் சுக்கல் நூறாகக் கிழித்துப் போட்டாள் சுசீலா. ''சித்தி! இந்தக் கடிதத்தை யார் எழுதச் சொன்னது? பிறந்த அழகுக்கு அப்பாவைப் பார்க்க வில்லையே என்றுதான் குழந்தை அழுகிறதாக்கும்.....''

யசோதை பதிலே கூறவில்லை.

திடீரென்று ஒரு நாள் மாலை ஒருவரும் எதிர்பாராமல் ராஜூவின் சகோதரி வந்தாள். சாமான் அறை மச்சில் இருந்த தொட்டிலை எடுத்தாள். யசோதையை நோக்கிக் குழந்தையைக் கொண்டு வரச் சொன்னாள். யசோதை இந்தப் புது உறவு முறையைக் கண்டு திகைத்து நின்றாள். ''இதெல்லாம் எதற்கு அக்கா?''

''சும்மா இரு. எனக்கு எல்லாம் தெரியும். உனக்கு இதுதானே முதல் குழந்தை! ராஜூவுக்குப் பேரன் பிறந்து தாத்தாவானாலும் நீ இப்பொழுது தானே முதல் தடவை அம்மா ஆகிறாய்?'' என்றவள், கால் பவுனில் தான் செய்து கொண்டு வந்திருந்த காப்பையும் குழந்தையின் கையில் போட்டாள். பானு என்று அதற்குப் பெயரும் வைத்தாள். பாட்டும் தானே பாடி நிரப்பி விட்டாள்.

போகும் போது அவள் யசோதையிடம் கூறினாள். ''யசோதை! சுசீலாவுக்குத் தொட்டிலிட்ட போது அவள் அம்மா பதில் சீராக நூறு ரூபாய் தூக்கிக் கொடுத்தாள். அந்தத் திட்டத்துக்கு இப்ப நீயும் தூக்கிடாதே. ராஜூவுக்கு இது இரண்டாவது குழந்தை தானே! பாவம், அவனும்தான் என்ன செய்வான்? பிரசவச் செலவு இரண்டும் சேர்ந்து போச்சு. இந்த மாப்பிள்ளையாவது நிலைமையைப் புரிந்து கொண்டு பணம் அனுப்பி வைக்கலாம். அதுவும்தான் இல்லை போலிருக்கு..... அதனாலே அம்பதுக்கு மேலே எத்திடாதே. அதை வாங்கினாலே என் வீட்டுக்காரர் திட்டுவாரு. அவ்வளவு கஷ்டப்படறச்சே என் வாங்கினேம்பாரு.... ஆனால் வெறும் கையோடு திரும்பறது மரியாதைக் குறைவுன்னு எனக்குத் தான் தோணுகிறது.......''


— — ஏட்டிக்குப் போட்டி — —

அலாஸ்காவில் ஏற்பட்ட பூகம்பத்தால் வாஷிங்டன் நகரமே உயர்ந்து தாழ்ந்தது!

— விஞ்ஞானிகள் அறிவிப்பு

'தலைநகரம் உயர்ந்து தாழ்ந்தால் பரவாயில்லையே. இங்கே தலைநகரில் உள்ள தலைவர்கள் அல்லவோ இன்று உயர்வதும் நாளை தாழ்வதுமாய் இருக்கிறார்கள்!' என்று அலுத்துக் கொள்கிறார் காமராஜ் திட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர்.

கழுதை கடித்ததால் மூன்று பேர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகப்பட்டிருக்கிறார்கள். —கல்கத்தாவில் கலவரம்



இந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து எங்கள் வீட்டு நாய் உதைக்க ஆரம்பித்திருக்கிறது!

சி. சுப்பிரமணியம் எழுதிய 'உலகம் சுற்றினேன்' என்ற நூலின் முதல் தமிழ்ப் பிரதியை டில்லி தமிழ்ச் சங்கத்தினிடமும் முதல் ஹிந்தி பிரதியை ஹிந்தி பிரசார சபையினிடமும் ஸ்ரீமதி இந்திரா காந்தி கொடுத்தார். — செய்தி


முதல் தமிழ்ப் பிரதியை ஹிந்தி பிரசார சபையிடமும், முதல் ஹிந்திப் பிரதியைத் தில்லி தமிழ்ச் சங்கத்தினிடமும் கொடுத்திருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும் என்கிறார் தேசிய ஒற்றுமைவாதி ஒருவர்.

நாத்தனாரின் சாதுரியத்தைக் கண்டு யசோதை ஸ்தம்பித்து நின்று விட்டாள். கால் பவுனுக்குக் குறைந்த காப்புக்கு ஐம்பது ரூபாய் பதில் சீர்!

நாத்தனார் ரூபாயை வாங்கிச் சென்ற பிறகுதான் யசோதைக்குச் சுசீலாவின் நினைவு வந்தது. ''சுசீலா எங்கே காணும்?'' என்று கணவரிடம் கேட்டாள்.

''நீங்கள் தொட்டில் போடும் அமர்க்களத்தில் இருந்த போது அவள் குழந்தையை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போய் விட்டாளே!''

யசோதை திடுக்கிட்டு நின்று விட்டாள். நாத்தனாரின் சாதுர்யத்தைப் பற்றி வியந்து நின்ற நோக்கில் சுசீலாவைப் பற்றி அவள் மறந்தே விட்டிருந்



''சொந்த விரோதத்தை யெல்லாம் இங்கே காட்டாமே சண்டை போடுங்க...''

தாள். தன் குழந்தைக்குத் தொட்டி விட ஒருவரும் வரவில்லையே எனச் சுசீலாவின் மனம் கண்டிப்பாக ஏக்கம் கண்டிருக்கும்! இரு குழந்தைகளையும் ஒன்றாகத் தொட்டிலில் விடாமல் எவ்வளவு பெருந் தவறு நேர்ந்து விட்டது. மாடிப் படி அருகில் மெதுவாக வந்து, ''சுசீலா! சுசீலா !'' எனக் கூப்பிட்டாள் யசோதை. முதல் இரு கூப்பாட்டுக்குப் பதிலே கூறாதிருந்த சுசீலா, மூன்றும் முறையாகக் கூப்பாடு வந்த போது, ''என்ன?'' எனக் கேட்டாள்.

''கீழே இறங்கி வா.''

''கீழே என்ன வைத்திருக்கிறது? எந்த அத்தை குழந்தையைத் தொட்டி விடக் காத்திருக்கிறாள்!'' என்று ஆத்திரத்துடன் பளீரென்று வார்த்தைகள் வெளிவந்தன.

யசோதையின் நெஞ்சு ஒரு முறை விம்மிக் குலுங்கியது. ''அசடாகப் பேசாதே. கீழே வா. சொல்கிறேன்.'' சுசீலா பதில் கூறவுமில்லை; கீழே இறங்கி வரவும் இல்லை.

யசோதை மாடிப் படியில் காலடி வைத்தாள். ராஜு கோபித்தார். ''யசோதை! உன்னை நடமாடவே கூடாது என டாக்டர் கூறியிருக்கும் போது நீ மாடிப் படி ஏறுகிறாயே!..... சுசீலாவையும் ஏன் தொந்தரவு செய்கிறாய்?''

தந்தையின் வார்த்தைகள் சுசீலாவின் காதுகளில் விழுந்தன. அவள் நெஞ்சு குமுறியது. அப்பாவா இப்படிக் கூறுபவர்! உமாபதியின் தாயார் கூறியதெல்லாம் உண்மைதானா? அப்பாவைச் சித்தி தன் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டாளா?..... இவளுக்குப் பிறந்த குழந்தைக்குத் தொட்டிலும் காப்பும் அமர்க்களப்படுகின்றன ... அவன் செல்வனுக்கோ...? இந்த வீட்டில் முதல் பேரன், அவனது அப்பாவுக்கு முதல் குழந்தை..... அருமையும் பெருமையுமாக இருக்க வேண்டியவனுக்கு ஒன்றுமே கிடையாது. குழந்தையைப் பார்க்க வேணுமென்று எண்ணம் கூட அவன் அப்பாவுக்கு இல்லை.....லீவு கிடையாதாம். அவ்வளவும் பொய்ச் சாக்கு..... தோழருடன் நேரம் போய்க் கொண்டிருக்கும்.... போயிற்று. எல்லாமே போய் விட்டது.... சித்திக்குப் பிறந்த குழந்தையோ அதன் அம்மாவுக்குச் செல்லம், அப்பாவுக்குச் செல்லம், ஊராருக்குச் செல்லம்..... அவன் செல்வனே....?

குழந்தையை அணைத்து அவள் உடல் குலுங்க விம்மிக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் பொறுத்து ராஜு மாடிக்கு வந்தார். ''சுசீலா ! குழந்தையை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி வா......''

''கீழே என்ன வேலை இருக்கிறது? இரவுப் பொழுதுக்கும் நான் இங்கேயே படுத்துக் கொள்கிறேன்.''

'' படுக்கையைப் பற்றி நீ பிறகு யோசிக்கலாம். குழந்தைக்குத் தொட்டி விட வேண்டுமென யசோதை கூறுகிறாள். வா!''

சுசீலா சினத்துடன் தந்தையை நோக்கினாள். 'யசோதை கூறுகிறாளாம்! அப்பாவுக்கென ஆசை கிடையாதா?'

''அப்பா, இந்தக் கரிசனமெல்லாம் எனக்கு அவசியமில்லை என்று சொல்லுங்கள். தொட்டில் போடவில்லையே எனக் குழந்தை அழுது விடப் போவதில்லை. நான் ஒரு அநாதை. அதே போல் குழந்தையும் அநாதை. அத்தை கிடையாது.... பாட்டி கிடையாது.... ஒருவருமே கிடையாது......''

சுசீலா ஏதேதோ கூறிக் கொண்டே போனாள். ராஜு பதிலே கூறவில்லை. தாமே குழந்தையைத் தூக்கிக் கொண்டு படியிறங்கிச் செல்ல ஆரம்பித்து விட்டார்.

''அப்பா!'' எனக் கூவியபடி அவர் கையிலிருந்த குழந்தையை வாங்கச் சுசீலா எழுந்தாள்.

அதற்குள் கீழே பல பெண்மணிகளின் குரல் கேட்டது. சுசீலா மாடிப் படியிலிருந்து எட்டிப் பார்த்தாள். வந்திருந்தவர்கள் அனைவரும் அண்டைஅயலார்கள். யசோதை அனைவரையும்

வரவேற்றுக் கொண்டிருந்தாள். கூடத்தின் நடுவே தொட்டிலுக்கு அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருந்தது. ஒரு தட்டில் வெற்றிலை, பழம், பூ... அதன் நடுவே ஒரு சிறு பெட்டி.... அது காப்பாகத்தான் இருக்க வேண்டும்.

ராஜு குழந்தையை யசோதையிடம் கொடுத்தார். ''சுசீலா! எவ்வளவு நேரம்மா? எல்லோரும் வந்து காத்திருக்கிறார்களே!'' என்று யசோதை குரல் கொடுத்தாள்.

வேறு வழியில்லை. சுசீலா கீழிறங்கி வந்து விட்டாள். யசோதை தொட்டிலிடும் வைபவத்தை ஆடம்பரமாகச் செய்து குழந்தையின் காப்பை அணிவித்தாள். கண்ணன் எனப் பெயரும் வைத்தாள். ''மாமி! உங்க குழந்தை எங்கே? அதுக்குத் தொட்டில் போடவில்லையே!'' என்று அடுத்த வீட்டுச் சிறுமி கேட்டாள்.

''அதுக்கு எல்லாம் இரகசியமாக அதன் அத்தை செய்துட்டாங்க. இந்தப் பாப்பாவுக்கு நான்தான் பிறந்த வீட்டு மனுஷி எல்லாம்.... நான் ரகசியமா செய்யப் பிரியப்படுவேனா?...'' என்றாள் யசோதை குழந்தையை அணைத்தபடி.

சுசீலா பல்லைக் கடித்துக் கொண்டாள். சித்தி பேச்சில் ஒன்றும் குறைவில்லை! ஒருகால் தன் குழந்தையின் காப்பையே எடுத்துப் போட்டிருப்பாள்.

யசோதையுடைய குழந்தை பானுவின் கையைப் பார்த்தாள் சுசீலா. அத்தை அணிவித்த காப்பு அவள் கையிலேயேதானிருந்தது. அப்படியானால் இது? வந்தவர்கள் விடைபெற்றனர்.

இரவு ஒன்பது மணிக்கு ஜுவல்லரி ஷாப்பிலிருந்து குமாஸ்தா வந்தான். அவன் கொடுத்த பில்லைச் சுசீலா பார்த்தாள். அரைப் பவுன் வளைக்கான பில்.

''இது எப்போ வாங்கினது?''

''என்னம்மா, இப்படிக் கேக்கறீங்க? சித்தே முந்தித் தானே ஐயா வந்து ஜோடிக் காப்பு வாங்கிட்டுப் போனாங்க. கடையிலே அப்போ முதலாளி இல்லை. வந்த பிறகு பில் போட்டு வீட்டுக்கு எடுத்து வாடான்னு சொன்னாரு.....நம்ப கடை காப்புத்தானே உங்க குழந்தை கையிலே மின்னுது. அது மட்டுமில்லே. என் கையாலே இப்பத்தானே வெத்திலை, பழம், பூ எல்லாம் வாங்கிக் கொடுத்தேன்......''

யசோதை அங்கு வந்தாள். ''இதெல்லாம் என்ன பேச்சு? இந்தாங்க பணம். வாங்கிட்டுப் போங்க'' என்றாள். குமாஸ்தா பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றார். (தொடரும்)

திரைத் துணுக்குகள்

சென்ற வாரம் வெளியான கேள்விக்கு விடை:

காளிதாஸ் 3, பட்டினத்தார் 3, கபீர்தாஸ், மீராபாய் 3, ஆண்டாள் 2, ஜயதேவர், துளசிதாஸ் 2, அருணகிரி 2, புரந்தரதாஸர், தியாகராஜர் 2, சுந்தரமூர்த்தி நாயனார், விப்ரநாராயணா 3, திருவள்ளுவர், நாமதேவர், கம்பர், துக்காராம், தாயுமானவர், ஜோதி ராமலிங்கம், மாணிக்கவாசகர், பாண்டுரங்கர், திருமங்கை ஆழ்வார், காரைக்கால் அம்மையார், வால்மீகி, திருமழிசை ஆழ்வார், காளமேகம், சிவகவி (எண்கள் அந்த தலைப்பில் வெளியான படங்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.)

நம்பிக்கை இழந்த ஹோப்

டுவிஸ்ட் நடனம் என்பது எப்படி இருக்கிறது? ஆப்பிரிக்கக் கானகங்களில் வாழும் ஆதிவாசிகளின் நடனங்களைப் போன்று அநாகரிகமாய் விளங்குகிறது என்பதை அழகாகச் சொல்லாமல் சொல்கிறார் பாப் ஹோப், 'கால் மி பவானா' என்ற படத்தில். ஆதிவாசிகள் 'தாம்தூம்' என்று குதித்து நடனமாடுகிறார்கள். பாப் ஹோப்பும் தமது திரைப்படக் காதலியுடன் நடனத்தில் கலந்து கொள்கிறார். முரசொலிகளுக்கு ஏற்ப இவர்கள் ஆடுவது டுவிஸ்ட் நடனம்தான்! அடுத்த காட்சியில் ஆப்பிரிக்க ஆதிவாசிகள் அனைவருமே தங்கள் பூர்வீக நடனத்தை விட்டு விட்டு, பாப் ஹோப்பைப்போலவே டுவிஸ்ட் நடனமாடுகிறார்கள்!



ஆரம்பக் காட்சியில் அமெரிக்க ஜனாதிபதி (கென்னடி)யிடமிருந்து மிஸ்டர் மெரிவெதரை (பாப்ஹோப்)த் தேடிக் கொண்டு அதிகாரிகள் வருகிறார்கள். ஒரு முக்கிய காரணத்துக்காக அவர் ஆப்பிரிக்கக் கானகத்துக்குச் செல்ல வேண்டுமென்கிறார்கள். பாப் ஹோப்புக்கோ பயம். தம்மிடமே நம்பிக்கை இழந்த ஹோப் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார். அவர்கள் கேட்கிறார்கள்: மிஸ்டர் மெரிவெதர்! இறுதியாகக் கேட்கிறோம். நாங்கள் ஜனாதிபதிக்கு என்ன பதில் சொல்லட்டும்?

பாப் ஹோப்: நான் நிக்ஸனுக்கு வோட்டுப் போட்டேன் என்று சொல்லுங்கள்!

இப்படிப் பதில் கூறியபோதிலும் ஹோப் ஆப்பிரிக்காவுக்குப் போகத்தான் செய்கிறார் — நம்மை மேலும் சிரிக்க வைத்துக் குதூகலப்படுத்த.

சிரிக்கவும் சிந்திக்கவும்

பத்திரிகைக்காரர்கள், 'கே' என்றும், 'நிகிடா' என்றும் செல்லமாகக் குறிப்பிடும் ரஷ்யப் பிரதம மந்திரி குருஷேவுக்குச் சென்ற வாரம் 70வது வயது பூர்த்தியாயிற்று. கம்யூனிஸ்டுகளுக்கும் நகைச்சுவைக்கும் வெகுதூரம். ஆனால் குருஷேவ் இதற்கு விதிவிலக்கு. அவர் பதவியேற்ற புதிதில் ஒரோரு சமயம் வேடிக்கையாகப் பேசியதைக் கேட்டவர்கள், அவர் வேண்டுமென்றே செயற்கையாக அப்படிப் பேசுகிறார் என்று நினைத்தார்கள். பிறகு தான் அவரது பருமனான உடலில், மோட்டாவான ஹாஸ்ய உணர்ச்சி பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கிறது என்று தெரிய வந்தது.

அவர் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பற்றி மார்க்ஸ், லெனின் பரிபாஷையில் பேசுவதில்லை. உபமானக் கதைகள் மூலம் அவற்றை எடுத்துச் சொல்வார். பத்திரிகை நிருபர்களிடம் ஒரு சர்வாதிகாரிபோல் நடந்து கொள்ள மாட்டார். ஒரு சமயம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, ''அன்னிய நாட்டு நிருபர்களான பெரியோர்களே! உங்கள் ஆத்மாக்களைச் சைத்தானுக்கு விற்று விடாதீர்கள்'' என்றார். அதைக் கேட்டு நிருபர்கள் சிரித்தார்கள். அவர் மேலும் தொடர்ந்து, ''பாவம், உங்களுக்குப் பொது உடைமைக் கொள்கையைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆகையால் அதன் விரோதிகள் அதைப் பற்றி அளக்கும் பயங்கரமான கதைகளை அப்படியே நம்பி விடுகிறீர்கள். அதற்காகக் கடவுள் உங்களை மன்னிப்பாராக!'' என்று கூறிய போது நிருபர்கள் விழுந்து, விழுந்து சிரித்துக் கைதட்டினார்கள்.



காரணம் பொது உடைமைக் கொள்கைக்காரரான அவர், அந்தக் கொள்கை ஏற்றுக் கொள்ளாத—கடவுள், ஆத்மா, சைத்தான் முதலியவற்றின் பெயரை உபயோகித்துத் தமாஷாகப் பேசியதுதான். ரஷ்யக் கம்யூனிஸத்தின் கடுமையும், கொடுமையும் குறைந்து கொண்டு வருவதற்கு அவரது நகைச்சுவையுணர்ச்சிதான் காரணம் என்றுகூடச் சொல்லலாம்.

சென்ற வாரம் அவர் இறந்து விட்டதாகவே ஒரு ஜெர்மன் நிருபர் ஒரு செய்தியைப் பரப்பி விட்டார். குருஷேவ் அந்த நிருபரை ரஷ்யாவை விட்டுப் போய் விடச் சொன்னதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. மிஸ்டர் 'கே' தம்மைப் பற்றிய மரணச் செய்திச் சம்பவத்தைத் தாமே அனுபவித்துச் சிரித்திருக்கக் கூடும். உலகின் பல தேசத்துத் தலைவர்களுடன் அமெரிக்கத் தலைவர்களும் மக்களும்கூட உண்மையான அன்போடு அவருக்குப் பல்லாண்டு கூறுவதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. ஆங்கிலத்தில் 'நமக்கு முன்பின் தெரியாத ஒரு சைத்தானைக் காட்டிலும் நமக்கு நன்கு அறிமுகமான ஒரு சைத்தானே மேல்' என்பதாக ஒரு பழமொழி உண்டு. அந்த வகையில் குருஷேவைத் தவிர வேறு யாரேனும் ருஷ்யத் தலைமைப் பதவியை ஆக்கிரமித்தால் உலக சமாதானம் என்ன ஆகுமோ என்ற பெருங்கவலை அமெரிக்கர்களை ஆட்கொண்டிருக்கிறது. ஆகவேதான் கம்யூனிஸம் அவர்களுக்குக் கட்டோடு பிடிக்காது என்றாலும், சமாதானப் பிரியர், அணு ஆயுத அழிப்புக்குக் கூடுமான வரை விட்டுக் கொடுத்து ஒத்துழைக்க முன்வருபவர் என்பதால் குருஷேவுக்கு நீண்ட ஆயுளையும் ஆயுள் உள்ள வரை ருஷ்யத் தலைமைப் பதவியையும் அருளுமாறு ஆண்டவனை அவர்கள் பிரார்த்திக்கிறார்கள்!

கி கி கி

எனக்கு ஜால வேடிக்கைகள் என்றால் எப்போதுமே ஒரு தனிப்பட்ட பிரேமை. அவை 'குட்டிச்சாத்தான், பொம்மக்கா, மலையாள பகவதி, மந்திரக்காளி முதலிய தேவதைகளின் உதவியாலும் 'ஓம், ஹ்ரீம், கிலி, மங், கங்' என்பது போன்ற மந்திரமெனப்படும் வார்த்தைகளின் உதவியாலும் செய்யப்படுகின்றன என்று துளிக்கூட நம்பி அல்ல. அவற்றைச் செய்து காட்டும் மனிதனது தந்திர சக்தியை வியந்துதான்.

உலகப் புகழ்பெற்ற அமெரிக்க ஹௌடினியின் அபாரமான வித்தைகளைப் பற்றிச் சிறுவனாயிருந்த போது படித்து வியப்புக் கடலில் ஆழ்ந்திருப்பேன். ஒரு சமயம் அவர் ரயில் தண்டவாளங்களில் படுத்துக் கொண்டார். தம் கைகளையும், கால்களையும் தண்டவாளங்களுடன் சங்கிலியால் பிணைத்துப் பலமான பூட்டுக்களால் பூட்டி விடும்படி செய்தார். பத்து நிமிஷ நேரத்துக்கெல்லாம் ஒரு ரயில் வண்டி மணிக்கு அறுபது மைல் வேகத்தில் வரவிருந்தது. வண்டி ஹௌடினி கட்டிப் போடப்பட்டிருந்த இடத்துக்கு நூறு கஜ தூரத்துக்கப்பால் வரும் போதே அவர் பூட்டுக்களைத் தகர்த்தெறிந்து கொண்டு பாதையினின்றும் புரண்டு அப்பால் சென்று விட்டார்! அவரைப் பற்றி நான் முதன் முதலில் பத்திரிகையில் படித்த செய்தி இது.

பல மேதைகளைப் போன்றே அவர் ஏப்ரல் மாதம் பார்த்துப் பிறந்தவர்! இது அவர் பிறந்த தொண்ணூறாவது ஆண்டு. இன்னும் பத்து வருடம் கழித்து அவர் பிறந்த நூறாவது

ஆண்டு விழாவை உலக மந்திரவாதிகள் எல்லாரும் கொண்டாடப் போகிறார்கள். அப்போது அவர் செய்து காட்டிய அபாரமான வித்தைகளைப் பற்றிய இரகசியங்கள் எல்லாம் தெரிய வரும். ஏனென்றால், அவர் அவற்றைப் பற்றிய விவரங்களை எழுதி ஓர் உறையில் போட்டு யோக்கியமான வக்கீலிடம் ஒப்படைத்திருக்கிறார். உறை மீது, 1974ம் வருடம் ஏப்ரல் மாதம் 6ந் தேதிதான் திறக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.



ஹெளடினி பாலியத்தில் பூட்டு வேலை செய்யும் ஒரு கம்பெனியில் வேலை பார்த்தார். பிறகு சாதாரண நாடக வேடிக்கைகள் செய்து காண்பித்து வந்தார். நாளடைவில் அவர் தமது தனிப்பட்ட அபாரமான வித்தைகளைக் காண்பிக்கலானார். தாம் எந்த விதமான சிறையிலிருந்தும் தப்பி விட முடியுமென்று போலீஸ் இலாக்காக்காரருக்கு ஒரு சவால் விட்டார். ஸான் பிரான்ஸிஸ்கோ போலீஸ் அதிகாரி இந்தச் சவாலை ஏற்றுக் கொண்டார்.

போலீஸ் அதிகாரி அவரை நகரிலேயே உள்ள மிகவும் பலமான சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அவர் ஏதாவது வைத்துக் கொண்டிருக்கிறாரா என்று நன்றாகச் சோதனை செய்தார். சந்தேகத்திற்கிடமில்லாதபடி அவரது ஆடைகளைக் களையச் செய்து அவைகளை அறைக்கு வெளியே வைத்துவிட்டார். பிறகு சங்கிலியால் அவரது கை கால்களைப் பிணைத்து விட்டார். பிறகு அறையின் கதவை மிக மிக பலமான பூட்டுக்களால் பூட்டிக்கொண்டு போய் விட்டார்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் போலீஸ் அதிகாரியின் அறை வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. போய்ப் பார்த்தால் ஹெளடினி தமது உடைகளைத் தரித்துக் கொண்டு வந்து புன்னகை புரிந்த வண்ணம் நின்றிருந்தார்.



அவர் உலகத்தில் 14 தேச போலீஸ் இலாகாக்களுக்குச் சவால் விட்டு இது மாதிரி செய்து காண்பித்திருக்கிறார்.

ஜெர்மனியில் ஒரு நகரத்தில் இவ் வித்தையைச் செய்து காண்பித்த போது போலீஸ்காரர்கள் அவர்மீது வழக்குத் தொடுத்தார்கள், மந்திரம், மாயம் என்று சொல்லி ஜனங்களை ஏமாற்றுவதாகும் என்று.

அவர் நீதிஸ்தலத்தில் விசாரிக்கப்பட்ட போது, தமக்கு மந்திரம், இந்திரம் ஒன்றும் தெரியாதென்றும், தமது சாமர்த்தியத்தினாலேயே வித்தைகள் செய்வதாகவும், அனுமதியளித்தால் அங்கேயே செய்து காட்டுவதாகவும் நீதிபதியிடம் கூறினார். நீதிபதி அதற்கு ஒப்புக் கொண்டார்.

அவரை ஓர் இரும்புப் பீரோவுக்குள் நுழைந்து கொள்ளச் செய்து வெளியே கதவைப் பூட்டி விட்டார்கள். அடுத்த நிமிடம் அவர் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து சேர்ந்தார்.

அவர் தமது 32வது வயதில் ஓர் அபாயமான வித்தையைத் துணிந்து செய்து காட்டினார். அமெரிக்காவில் டெட்ராயிட் நகரின் வழியாக ஓடும் டெட்ராயிட் நதியின் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து போயிருந்தது. அதில் ஒரு பெரிய துவாரம் போடச்செய்தார். பனிக்கட்டி உருகி அதில் தண்ணீர் நிறைந்தது. பதினாயிரக் கணக்கான ஜனங்கள் ஆற்றங்கரையில் கூடியிருந்தனர். அவரது ஆடைகளைக் களையச் செய்து கைகளிலும், கால்களிலும் பலமான புத்தம் புதிய போலீஸ் விலங்குகளை மாட்டிப் பூட்டினார்கள். பிறகு அவரைத் தண்ணீருக்குள் தள்ளி விட்டார்கள்.

ஒன்று, இரண்டு என்று நிமிடங்கள் ஓடிக் கொண்டே இருந்தன. ஜனங்கள் தவித்துப் போய் அவரைக் காப்பாற்ற உதவி செய்ய வேண்டுமென்று கூவினார்கள்.

ஆனால் ஏழாவது நிமிடத்தில் ஹெளடினி தாமே வெளியே வந்து விட்டார். அவர் கை கால்களில் விலங்குகளைக் காணோம்!

ஹெளடினியைப் பற்றிய திரைப் படம் சமீபத்தில் சென்னை மினர்வா தியேட்டரில் ஓடியது. டோனிகர்டிஸ் ஹெளடினியாகத் தோன்றுகிறார். படத்தில் அவரது பெரிய வித்தைகளெல்லாம் காண்பிக்கப் பட்டிருக்கின்றன. அவர் வித்தைகளைத் திரைப்படம் ஒன்றின் மூலமாகத்தானே சுலபமாகக் காண்பிக்க முடியும்? நேரில் செய்து காட்டச் சாத்தியமா?

* * *


“ஒவ்வொரு மனிதனும் அவன் வசிப்பதற்கு ஒரு வீடும், மூன்று வேளை புசிப்பதற்கு உணவும் உள்ளவனாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவன் தன் குழந்தை குட்டிகளைச் சுத்தமாகவும் சௌகரியங்களுடன் வளர்த்து வருவதற்கான வசதிகள் உள்ளவனாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.”

இப்படிக் கூறியவர் ஒரு ஜன நாயகவாதியல்ல, கம்யூனிஸ்டும் அல்ல, அரசியல்வாதியே அல்ல. சென்ற ஏப்ரல் மாதத்தில் 75 வயதானவர். பிரபல விஞ்ஞானிகள், பேராசிரியர்களுடன் சேர்த்துக் கௌரவிக்கப்பட்டவர். ஒரு பெரிய கோமாளி.

அவர் யார்?

சார்லஸ் ஸ்பென்ஸர் சாப்ளின்

— என். ஆர்.



7.95
17.95
14.95
கோடையில் இலேசான காலணியுடன் செல்லுங்கள் ....
7.95
9.95
Bata

அறிவுக் கனலே, அருட்புனலே!

1895ம் ஆண்டு ஆகஸ்டு கடைசியில், ஸ்வாமி விவேகாநந்தரின் அமெரிக்க நண்பர் இருவருக்குப் பாரிஸில் விவாகம் நடைபெற இருந்தது. இதனை ஒட்டி, நெடுநாளாகவே இங்கிலாந்துக்குச் செல்ல எண்ணியிருந்த ஸ்வாமிஜி ஐரோப்பாவுக்குக் கிளம்பினார். சுமார் இரு வாரக் கப்பல் பயணத்துக்குப் பின் பாரிஸ் மாநகரத்தைச் சென்றடைந்தார். அவர் எதிர்பார்த்தது போலவே நீல வானையும், நீலக் கடலையும் ஒட்டி வாழ்ந்த அந்த இடைக்காலம் அவருக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது.

நுண் கலைகளின் நிலைக் களனும், போக புரியுமான பாரிஸின் காட்சி சாலைகளையும் அரண்மனைகளையும் கலைக் கூடங்களையும் மாதா கோயில்களையும் கண்டு களித்தார் ஸ்வாமிஜி. பல பிரெஞ்சுப் பிரமுகர்களுடன் அறிமுகம் செய்து கொண்டார். பாரதத்தைப் பற்றிப் பல உண்மைகளை அவர்களுக்கு அளித்து அவர்களது நாட்டைப் பற்றிய பல உண்மைகளைத் தாம்சேகரித்துக்கொண்டார்.



இச்சமயத்தில் ஸ்வாமிகளைப் பற்றி இந்தியாவில் மிஷனரிகள் செய்த துஷ்பிரசாரம் குறித்தும் அதனை இந்திய சமூகத்தினரில் சிலர் ஏற்றுக் கொண்டதற்கு விசாரப்பட்டும் அழஸிங்கர் அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். பதிலுக்குக் கனல் கக்காக ஒரு மடல் எழுதினார் ஸ்வாமிஜி.

''அப்பா உதவி கூடச் செய்யாத ஹிந்து சமூகத்தினர் முட்டாள்தனமாக என்மீது யஜமானத்துவம் செலுத்துவதை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. சந்நியாசிக்கு முக்கியமானவை பிரம்மச்சரியமும், வறுமையும் — இவற்றை நான் முறித்து விட்டேன் என்று மிஷனரிகள் சொல்வார்களா?

''இந்தியாவுக்கு நான் எவ்வளவு சொந்தமோ அவ்வளவுக்கு உலகம் முழுவதற்கும் சொந்தமானவன். எந்த நாடும் என்மீது தனி பாத்தியதை கோர முடியாது. நான் எந்தத் தனியொரு நாட்டுக்கும் அடிமையானவனா, என்ன?....

''எனக்கு யாருடைய உதவியும் வேண்டாம். பிறருக்கு உதவி செய்தே என் வாழ்நாள் முழுவதையும் கழித்தவன் நான்.

''ஜாதிக் கட்டுக்குள் அகப்பட்ட, மூட நம்பிக்கைகள் நிறைந்த, கருணையற்ற, போலித்தனமான நாஸ்திகக் கோழைகளில் ஒருவனாக வாழ்ந்து சாவதற்காகவா நான் பிறந்ததாக நினைக்கிறாய்?''

இதே அனல் வீசும் கடிதத்தில் ஸ்வாமிஜி தம்மை அரசியலுடன் சம்பந்தப்படுத்துவதையும் வன்மையாகக் கண்டித்தார்.

''அரசியல் 'நான்சென்ஸ்'டன் எனக்கு ஒரு தொடர்பும் கிடையாது. எந்த அரசியலிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. சர்வேசுவரனும், சத்தியமும்தான் உலகிலுள்ள ஒரே அரசியல். மற்றவையெல்லாம் வெறும் குப்பையேயாகும்'' என்று ஆக்ரோசமாக எழுதினார்.

எதிர்ப்பாளரை எல்லையில் இப்படி ஆக்னேயாஸ்திரமாகப் பொழிந்த இதே ஸ்வாமிஜி தாக்குதல்களை நினைந்து நெஞ்சுடைந்து கண்ணீர் பெருக்கியதுமுண்டு. திவ்ய மாதாவைத் தம் துணைக்குக் கூவியழைத்தும் புலம்பியதுமுண்டு. ''ஈசுவரனின் திராட்சைக் கொடிக்காலில் பணிபுரிகிற சமயவாதிகளே தங்கள் சகோதரன் ஒருவனை இப்படி நிந்திக்கிறார்களே'' என்று நொந்திருக்கிறார் ஸ்வாமிஜி.

ஆங்கிலேயர் எந்த இந்தியர்களை அடிமையாக்கி ஆண்டு வந்தனரோ அந்த இந்தியர்களில் ஒருவரான ஸ்வாமிஜி ஆங்கிலேயர் நாட்டில் அடியெடுத்து வைத்தார். பாரதத்தில் நிகழும் மத மாற்றத்துக்கும், பாரத மக்கள் தங்கள் மரபை மறந்து உலக போகங்களில் மோகித்திருப்பதற்கும் மட்டும் ஸ்வாமிஜி ஆங்கிலேய ஆட்சியை வெறுக்கவில்லை. ஆங்கில ஆட்சியில் நன்மைகள் மட்டுமே நிகழ்ந்திருந்தாலும் கூட அவர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி இருப்பது ஒன்றுக்காகவே அவர் பொங்கியிருப்பார். ஸ்வாமிஜி தாம் ஒரு விதமான அரசியல் சார்பும் அற்றவர் என்று கூறினார். என்றாலும் நாட்டின் அடிமைத்தனமும், விடுதலையும் அரசியலை மட்டும் சேர்ந்தது என்றெப்படிச் சொல்ல முடியும்? அது மக்களின் வாழ்முறையையே அல்லவா பாதிப்பது? எனவே எந்நாட்டுக்கும் பொதுவானவராகத் தம்மைச் சொல்லிக் கொண்டாலும் அவருக்கு ஆங்கிலேயர் மீது ரோத தாபமிருக்கத்தான் செய்தது. 'ஸ்வாமிஜி கூறியவற்றிலிருந்தே அவர் இங்கிலாந்தில் வெறுவான நட்புணர்ச்சியுடன் அடியெடுத்து வைக்கவில்லை என்று அறிகிறோம்' என்கிறார் ஸ்வாமி நிகிலாநந்தர்.

ரா. கணபதி

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிமைப் பிரஜை ஒருவர் பாரதத்தின் மாண்பினை விளக்கத் தைரியமாக இங்கிலாந்துக்கு வந்து விட்டார் — சிங்கத்தின் பிடரியை அதன் குகையிலேயே பிடித்து உலுக்குவது என்பார்களே, அந்தக் காரியத்துக்காக.

லண்டனில் வந்திறங்கிய ஸ்வாமிஜியை அமெரிக்காவிலேயே அவருக்குப் பரிசயமாயிருந்த ஸ்டர்டி, குமாரி முல்லர் ஆகியவர்கள் வரவேற்றனர். ஆத்மிகத்தில் நாட்டமுள்ள பலரை அவருக்கு அறிமுகம் செய்வித்தனர்.

சில தினங்கள் பூரண ஓய்வு கொண்டு உடலைத் தேற்றிக் கொண்டார் ஸ்வாமிஜி. சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்தார். இரண்டு வாரங்கள் இப்படிக் கழிந்த உடனேயே எவ்வாறோ அவரை உழைப்பு மீண்டும் பற்றிக் கொண்டு விட்டது.

இங்கிலாந்தின் பிரபல பத்திரிகைகளின் நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டு அவரையும் அவரது தத்துவத்தையும் சிலாகித்து எழுதினர். ராஜா ராம்மோஹன் ராய், கேசவ சந்திரஸேனர் — ஏன் புத்தரையுமே — அவர் நினைவுறுத்துவதாக எழுதினர்.

பொது வாழ்வை இங்கிலாந்தில் விஸ்தரித்துக் கொள்ள வேண்டாம் என்று ஸ்வாமிஜி நினைத்த போதிலும், அவரது அன்பர்கள் அதற்கு அநுமதிக்க வில்லை. அக்டோபர் 22ந் தேதி மாலை பிக்கடெல்லி பகுதியிலுள்ள மன்னர் மன்றம் (Prince's Hall) என்ற இடத்தில் அவரது முதல் பொதுப் பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்தனர். 'ஆத்ம ஞானம்' என்ற பொருள் பற்றி ஆத்ம ஞானியாகிய ஸ்வாமிஜியும் உள்ளம் நிரம்பிப் பேசினார். அமோக வெற்றி பெற்று விட்டார். ஸ்வாமிஜிக்குத்தானா வெற்றி? பாரதப் பண்புக்கே வெற்றி ஈட்டித் தந்தார்.



சகோதரி நிவேதிதை

மறு நாள் காலையில் இங்கிலாந்துப் பத்திரிகைகள் ஸ்வாமிஜிக்குப் புகழ் மாலைகள் சூட்டின. '''சாது' ஹிந்து என்று நீங்கள் இளக்காரமாகக் கூறுகிற எங்களுக்கு உங்களுடைய பிரமாதமான நாகரிகம் வேண்டவே வேண்டாம்'' என்று அவர் தீரத்துடன் எடுத்தியம்பியதை ஆட்சியாளரின் நாட்டு ஏடுகள் அப்படியே பிரசுரித்திருந்தன!

ஸ்வாமிஜி ஓர் உபதேசத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்று அறிந்ததும் மக்கள் திரண்டு வந்து அவரிடம் போதனை பெற்றனர். ஆங்கில மக்கள் இவ்வாறு தம்மைக் குருவாகக் கருதி உபதேசம் நாடி வந்தது ஸ்வாமிஜிக்கு வெகு ஆச்சரியமாகவே இருந்தது. முதல் பொது மேடைப் பிரசங்கம் நிகழ்த்தியதிலிருந்து சுமார் ஒரு மாதம்தான் ஸ்வாமிஜி அம்முறை இங்கிலாந்தில் இருந்தார் எனினும், அதற்குள்ளாகவே தம்மையும் தமது மதத்தையும் ஆங்கிலேயர் மறக்க முடியாதபடி ஆழ்ந்த நினைவாகப் பதித்தார்.

ஃ ஃ ஃ

அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய்

என்றெல்லாம் பாரதியார் ஓர் ஆங்கில நாரீமணியை நாவாரத் துதித்திருக்கிறார். ஆங்கில நாட்டினர் இந்தியரான விவேகானந்தருக்கு மரியாதை செய்தது அதிசயமெனில், பாரதியாரோ தமது 'ஜன்ம பூமி' — என்ற 'ஸ்வதேச கீதங்களின் இரண்டாம் பாக'மாகிய தேசியப் பாடல்களையே இந்த ஆங்கில மாதரசிக்கு சமர்ப்பித்திருப்பது அதிசயத்திலும் அதிசயமல்லவா? அந்தப் பெண்மணி யார் என்று அறிய வேண்டுமானால் பாரதியாரின் சமர்ப்பண உரையைப் படித்தாலே போதுமானது. கவி சொல்கிறார் :

> எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமலுணர்த்திய குருமணியும் பகவான் விவேகானந்தருடைய தர்மபுத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை சமர்ப்பிக்கின்றேன். **சி. சுப்பிரமணிய பாரதி**

நிவேதிதை என்ற பெயர் அந்த ஆங்கிலப் பெண்மணி இந்தியாவுக்கு வந்து ஆத்மிகம் பரப்பி, பெண் கல்விக்குத் தொண்டு புரிந்து, அரசியல் விடுதலைக்காக முயன்றவர்களுக்கு ஆசி கூறி ஊக்கியபோது பெற்ற நாமம். அதன்முன் — அதாவது பகவான் விவேகானந்தர் அவளைத் தர்மபுத்திரியாக ஈன்றெடுக்கு முன் — அவள் பெயர் குமாரி மார்கரெட் நோபில் என்பதாகும்.

இந்தப் பெயருடன்தான் அவள் ஸ்வாமிஜியை 1895ம் ஆண்டில் லண்டனில் சந்தித்தாள். தூய்மை தழைத்த ஒரு தெய்வீகத் தொடர்பு அவளுக்கும் ஸ்வாமிஜிக்கும் ஏற்பட்டது. 'லண்டனில், ஸ்வாமிஜி திரட்டியவற்றுள் மிகப் பெரும் சொத்து குமாரி மார்கரெட் ஈ. நோபில்தான்' என்கிறார் ஸ்வாமி நிகிலாநந்தர்.

அயர்லாந்தின் விடுதலைக்காகப் போரிட்ட ஒரு குடியில் ஸ்வாமிஜி உதித்த நாலாண்டுகளுக்குப் பின் பிறந்தவள் மார்கரெட். அவளுடைய குழந்தைப் பருவத்திலேயே தந்தை காலகதி அடைந்து விட்டார். மரணத் தறுவாயில் அவருக்கு ஏதோ ஸ்புரித்தது. தம் மனைவியைக் கூப்பிட்டு, ''மார்கரெட்டை ஆண்டவன் அழைப்பான். அப்போது அவளை அனுப்பி வை. அவள் தன் இறகுகளை விரித்துப் பறப்பாள். மகத்தான காரியங்கள்

பல செய்வான்" என்றார்: கல்லூரிப் படிப்பு முடிந்தபின் மார்கரெட் உபாத்தினித் தொழில் புரிந்து வந்தாள். சுதந்திர அயர்லாந்துக் குழுவில் சேர்ந்தாள்.

ஸ்வாமிஜி இங்கிலாந்துக்கு வந்த சமயத்தில் மார்கரெட் ஒன்றன்பின் மற்றாக இரு பேரதிர்ச்சிகளுக்கு ஆளாகியிருந்தாள். அவள் திருமணம் செய்து கொள்ள நிச்சயிக்கப் பட்டிருந்த வாலிபன் ஒருவன் க்ஷயரோகம் என்ற காலபாசத்துக்கு ஆளானான். இதன்பின் அவள் வேறோர் ஆடவனிடம் உளமார்ந்த அன்பு கொண்டாள். அவனும் அவளை நேசித்தான். இருவருக்கும் திருமணத்துக்கு நாளும் குறிப்பிட்டாகி விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவன்மீது வேறொரு மங்கை வலை வீசிப் பிடித்துக் கொண்டு போய் விட்டாள்.

வேதனையில் வெந்து வெதும்பிக் கொண்டிருந்த மார்கரெட்டிடம் அவளுடைய கலைப் பயிற்சி ஆசிரியர் எபினேசர் குக் ஒருநாள் சொன்னார்: "ஹிந்து சாமியார் ஒருவர் லேடி இஸபெல் மார்கன்ஸன் வீட்டுக்கு வந்திருக்கிறாராம். அவரைக் காணச் சில அன்பர்களுக்கு அழைப்பு வந்திருக்கிறது. நீயும் வருகிறாயா?" என்றார்.

"வருகிறேன்!" என்றாள் அமைதிக்காக அலைந்த மார்கரெட்.

சூரிய ரச்மி ஒன்று இலை இடுக்குகள் வழியே குட்டையிலுள்ள ஒரு நீர்த் துளியை முகர்ந்து எடுத்துக் கொண்டுவிட்டது. அது ஆவியாகிப் பிறகு மேக பிந்துவாகிக் குளிர்ந்து பிரும் மாண்டமான சாகரத்தில் விழப் போகிறது!


அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை: மாலைப் பொழுதில் இளம்பெண் மார்கரெட், லண்டனின் நாகரிகங்களுக்குச் சிறப்பு இடமான 'வெஸ்ட் என்ட்' என்ற மேற்கு முனையில் இருந்த இஸபெல் சீமாட்டியின் வீட்டை அடைந்தாள். நவம்பர் மாதத்துக் குளிருக்கு இதமாக அங்கே வரவேற்பு அறையில் கணகண வென்று கணப்புத் தீ எரிந்துகொண்டிருந்தது.

அங்குதான் அதோ, அந்தக் கொழுந்து.... ஆம், அறிவுக்கனலாகிய ஸ்வாமி விவேகானந்தர் வீற்றிருந்தார்.

பதினைந்து பக்தர்கள் அவரைச் சுற்றி அரை வட்டமாக அமர்ந்திருந்தனர். அங்கு மௌனம் என்பது கையால் ஸ்பரிசிக்கக்கூடிய ஒன்று போல் அடர்ந்து படிந்திருந்தது. அதனைக் கலைத்து விடுவோமோ என்று தயங்கியபடி உள்ளே நுழைந்தாள் மார்கரெட். தனது 'ஸ்கர்ட்'டைச் சரிசெய்துகொண்டு நாற்காலியில் அமர்வதற்குள் அதென்ன சப்தம் செய்யுமோ என்று பயந்து, தயங்கி அமர்ந்தாள்.

அவளுக்கு நேர் எதிரே ஸ்வாமிஜி. அவரது நெடிதுயர்ந்த தோற்றமும், அமைப்பான அங்கங்களும், அவற்றில் துலங்கும் தூய கம்பீர சாந்தமும், துயருற்றுத் தவித்த அவளது மனப் பாலைவனத்தில் வர்ஷபிந்துவாக விழுந்தது. அவர் கண்களைத் திறந்து பார்த்த போது அவற்றில் ஒரே பொழுதில் மாதுரியமும் மனோந்நதமும் மிளிர்வதைக் கண்டு அதிசயித்தாள் நோபில்.

குட்டிக்கதை



ஜப்பானில் 'கவோலைகாய்' அல்லது 'மனைவியிடம் மருள்வோர் சங்கம்' என்பதாக ஒன்று இயங்கி வருவதை அறிந்ததிலிருந்து அத்தகைய ஒரு சங்கத்தைத் தமிழகத்திலும் நிறுவிக் கணவன்மார்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்று தீர்மானித்தான் சுதர்சனம். இதைப் பற்றித் தன் மனைவியிடம் வெளியிடப் பயந்து ரகசியமாகவே காரியங்களை நடத்தினான். ஏராளமான அங்கத்தினர்கள் இதில் சேர்ந்தார்கள். எல்லோருமே தக்க தருணம் வரும்வரை தங்கள் நடவடிக்கைகளை ரகசியமாகவே வைத்துக்கொள்வதென்று தீர்மானித்தார்கள். தினந்தோறும் பிரசங்கங்கள் நிகழ்ந்தன, கணவன்மார்களுக்குப் புத்துணர்வும், நியாயமான உரிமைகளைக் கோரிப் பெறத் துணிவும் ஊட்டுவதற்காக. சொற்பொழிவுகளில் சுதர்சனத்தின் கனல் தெறிக்கும் பேச்சுக்களே அனைவரது பாராட்டுதல்களையும் அதிகமாகப் பெற்றன.

இவ்வாறிருக்கையில் இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்துகொண்ட ஒருவர் 'தெரியாத்தனமாகத் தம் புது மனைவியிடம் கொண்ட மோகத்தால் தாம் சேர்ந்துள்ள சங்கத்தைப் பற்றி உளறி வைத்தார். செய்தி நகர மாதரசிகளிடம் தீப் போல் பரவியது. பெண்மணிகளின் பெரும் படை கிளம்பியது, சங்கத்தை நோக்கி. மனைவிமார்களின் அந்தக் கூட்டத்தைக் கண்டதும் எல்லாக் கணவன்மார்களும் எடுத்தனர் ஓட்டம்! சுதர்சனம் ஒருவன் மட்டுமே தைரியமாக இருந்த இடத்தை விட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தான். பெண்கள் படையின் முன்னணியில் இருந்த அவன் மனைவி பங்கஜம், 'ஆகா! உங்களுக்கு இத்தனை துணிச்சலா?' என்று கறுவிக் கொண்டு அவன் அமர்ந்திருந்த நாற்காலியை அணுகினாள். போராட்டத்தின் இந்த உச்ச கட்டத்தை ஒருவிதத் துடிப்போடு மற்றப் பெண்மணிகள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். சுதர்சனத்துக்குச் சமீபத்தில் வந்த பிறகுதான் பங்கஜத்துக்குத் தெரிந்தது அவன் பயத்தில் மூர்ச்சையாகி அப்படியே நாற்காலியில் சாய்ந்து கிடக்கிறான் என்று!

— சாமா

அந்தியும் கங்குலும் கலக்கின்ற நேரம். அந்தப் பின்னணியில் அதிசயமானதோர் எளிமை சொட்டுவது. கூடியிருந்தோரின் கேள்விக்கு அவர் பதில் சொன்ன பாங்கையிலும், நடு நடுவே கம்பீரமாக சம்ஸ்கிருத சுலோகங்களை ஓதிய விதத்திலும், அவ்வப்போது 'சிவா சிவா' என்று உருகி உருகி அழைத்த பாங்கிலும் மார்கரெட்டின் உள்ள வயல் நன்றாக நனைந்தது. ''நாம் இன்ப துன்பங்களை நாட வில்லை; விடுதலை ஒன்றையே நாடுகிறோம்'' என்று அவர் கூறியது அந்த வயலில் வித்தாகப் பதிந்தது.

என்றாலும் அவர் கூறிய யாவற்றையும் நோபிலால் ஏற்க முடியவில்லை.

அதனால் என்ன? நரேந்திரநாத தத்தாலும் கூட்தான் ஆரம்ப காலத்தில் பரமஹம்ஸர் கூறியவற்றை யெல்லாம் ஏற்க முடியவில்லை. பிறகு...?

விவேகானந்தர் லண்டனை விட்டு ஒரு மாதத்துக்குப் பின் புறப்படுகையிலே அவரைத் தம் 'குரு' (Master) என்று அழைக்கத் தொடங்கி விட்டாள் மார்கரெட் நோபில்.

இந்த ஆரம்ப காலச் சந்திப்புக்களை நினைவு கூர்ந்து 1904ம் ஆண்டில் நிவேதிதை எழுதினாள்: ''ஏதோ ஒன்றுக்காகத்தான் நான் காத்துக் கொண்டிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். எனக்கென்று ஓர் அழைப்பு வரும் என்று அறிந்திருந்தேன். அது வந்தே விட்டது.......அம்பானது வில்லில் தனக்குரிய இடத்தை அடைந்து விட்டது.''

விரலானது வீணையில் தனக்குரிய ஸ்தானத்தை அடைந்துவிட்டது என்றும் கூறலாம்.

இங்கிலாந்து தம் உபதேசத்துக்கு எப்படிப்பட்ட வரவேற்பளிக்கும் என்று 'நோட்டம்' பார்க்கவேதான் ஸ்வாமிஜி அங்கு அப்போது வந்திருந்தார் எனினும், அவர் எதிர்பாராத விதமாக அவருடைய செல்வாக்கு அங்கு பெருகி வந்தது. சில பாதிரிமார்கள்கூட அவரது வாக்கைக்கேட்டு ஆமோதித்தனர். ''ஆங்கிலம் பேசுகிற இனத்தர்களின் மனத்தில் இந்தியாவின்பால் ஸ்வாமிஜி உண்டாக்கியுள்ள அன்பும் அநுதாபமும் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு ஒரு வலு வாய்ந்த துணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை'' என்று இங்கிலாந்துப் பத்திரிகை ஒன்று எழுதியது.

ஆங்கில ஆட்சி எப்படியானாலும், ஆங்கில மக்களில் பலர் மிகவும் கண்ணியமானவர்கள் என்பதை ஸ்வாமிஜி கண்டு கொண்டார். ''இங்கிலாந்தில் எந்தக் காரியத்தையுமே தொடங்கக் காலம் ஆகிறது. ஆனால் ஜான் புல் ஏதேனுமொன்றில் கையை வைத்து விட்டாரோ, அதன்பின் அதை அவர் விடவே மாட்டார். அமெரிக்கர்கள் துடிப்பானவர்கள். ஆனால் தீப்பற்றிய வைக்கோல் போல் சீக்கிரத்தில் அணைந்து போகிறவர்கள்'' என்று கூறுகிறார் ஸ்வாமிஜி. சென்னைச் சீடர் ஒருவருக்கு ''இங்கிலாந்தில் என் பணி அமோகமாக நடந்து விட்டது. அதைக் கண்டு நானே திக்பிரமை அடைகிறேன். பத்திரிகைகளின் வாயிலாக ஆங்கிலேயர்கள் அதிகம் பேசவில்லை. மௌனமாக வேலை செய்கிறார்கள். அமெரிக்காவில் செய்ததை விட இங்கிலாந்தில் நான் அதிகம் பணி புரிந்திருக்கிறேன் என்று திடமாக நினைக்கிறேன்'' என்று எழுதினார்.

எதையும் ஆய்ந்தோய்ந்து பார்த்துச் செய்கிற இங்கிலாந்தில் ஒரே வேகமாகத் தமது பணியைச் செய்வது நலமாயிருக்காது என்றும், தாம் இப்போது தூவியுள்ள விதை என்னவாகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென்றும் எண்ணிய ஸ்வாமிஜி, அமெரிக்க அன்பர்களின் அழைப்புக் கிணங்கி மீண்டும் அமெரிக்காவுக்குப் புறப்பட்டார்.

1895-ம் ஆண்டு இறுதியில் நியூயார்க் திரும்பிய ஸ்வாமிஜி முன்போலவே முப்பத்தொன்பதாவது சாலையில் கிருபாநந்தருடன் வசிக்கலானார். கர்மயோகத்தைப் பற்றி கர்மயோகத்தின் உருவகமாகவே யிருந்த ஸ்வாமிஜி அற்புதமான சொற்பொழிவுகள் ஆற்றத் தொடங்கினார்.


ஸ்வாமிஜியின் 'கர்மயோகம்' என்ற நூல் இந்த உரைகளின் தொகுப்பேயாகும்.

இச்சமயத்தில், ஸ்வாமிஜியின் பிரசங்கங்கள் புத்தக வடிவு பெற்றதைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஸ்வாமிஜி ஏற்கனவே எழுதி வைத்துத் தயார்ப்படுத்திப் பேசுபவரல்ல. கடலில் அலைகள் எப்படிப் பூர்விகத் திட்டமின்றி வீசுகின்றனவோ அதே போல ஸ்வாமிஜியின் பேரறிவில் சிந்தனை அலைகள் தாமாக எப்படி வீசினவோ அதனையே சொல்லாக்கித் தந்தார் அவர். இந்த அற்புத உரைகளை நிரந்தரமாக்கித் தர வேண்டுமென்று அமெரிக்கர்கள் நீண்ட நாளாக விரும்பினர். பல முறை சுருக்கெழுத்தாளர்களைக் கொண்டு பிரசங்கங்கள் சிலவற்றைக் குறிப்பும் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் இதெல்லாம் சரிப்பட்டு வரவில்லை. இதன்பின்தான் ஸ்வாமிஜி இங்கிலாந்திலிருந்து திரும்பியபின் ஜே. ஜே. குட்வின் என்பவரைக் கொண்டு ஸ்வாமிஜியின் உரைகளை உள்ளவாறே எழுத்தில் பதிவு செய்து கொள்ள ஏற்பாடாயிற்று.

குட்வின் சமீபத்தில்தான் இங்கிலாந்திலிருந்து நியூயார்க்குக்கு வந்திருந்தவர். லௌகிகமே உருவானவர் அவர். எப்படி ஒரு கருவியானது ஸ்வாமிஜியின் பிரசங்கத்தை எவ்வித சுய ஈடுபாடுமின்றிப் பதிவு செய்யுமோ, அப்படிப் போல உரைகளை எழுதிக்கொள்ளத்தான் குட்வின் வந்தார். ஆனால் மெழுகுக் கரண்டியால் தீயை வாரி யெடுக்க இயலுமா, என்ன? குட்வின் உருகத் தொடங்கினார். ஸ்வாமிஜியின் சிந்தனைகளை குட்வின் காகிதத்தில் மட்டும் பதிவு செய்து கொள்ளவில்லை. தமது இதயத்திலேயே பதிவு செய்து கொண்டார். அத்யாத்ம வாழ்க்கைக்கு அவரது உள்ளம் நழுவ ஆரம்பித்தது.

சோர்வின்றி ஸ்வாமிஜியின் உரைகளை யெல்லாம் குட்வின் சுருக்கெழுத்தில் எடுத்துக் கொண்டு, பிறகு இரவுகளில் அதனைத் தட்டெழுத்துக்களில் மாற்றுவார். அந்தத் தட்டெழுத்துப் பிரதிகளைப் பத்திரிகைகளில் பிரசுரமாவதற்கு அனுப்பி வைப்பார்;

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து
1964 மே 21

நாகப்பட்டினத்திலிருந்து
1964 மே 22

கம்பெனியின் சென்னைக் காரியாலயத்தின் மூலம் விற்பனை செய்யக்கூடிய பர்த் வசதியற்ற மற்றும் பங்க் வசதியுள்ள மேற்கண்ட கப்பல் பிரயாணத்துக்குரிய டிக்கட்டுகள் எல்லாம் விற்பனை ஆகிவிட்டன. இருந்தாலும் இவ்வகுப்பு டிக்கட்டுகள் கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

C. M. குட்டி	AL. காசி செட்டியார்	கேரளா டிராவல்ஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை - 1	கத்தோலிக் சென்டர் பில்டிங்ஸ் 6, அரமனைக்காரத் தெரு சென்னை - 1	மாஸ்கட் ஹோட்டல் திருவனந்தபுரம்

வெளியூர் பிரயாணிகள் கப்பல் கட்டணத் தொகை முழுவதையும், மணியார்டர் மூலமோ, அல்லது பாங்க் டிராப்டாகவோ கம்பெனியின் புரோக்கர்களுக்கு முன்னதாக அனுப்பி டிக்கட்டுகளை ரிசர்வ் செய்து கொள்ளலாம். கப்பல் புறப்பட குறைந்தது நான்கு நாட்களுக்கு முன்னதாக பிரயாண தஸ்தாவேஜுகளைக் காண்பித்து டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு, சிங்கப்பூருக்கு டிக்கட்டுகளை வாங்க விரும்பும் பிரயாணிகள் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட், நாகப்பட்டினம் என்ற விலாசத்துக்கு நேரிடையாக விண்ணப்பிக்கவும்.

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கோ., லிட்.	மதுரா கம்பெனி பிரைவேட் லிட்,
7. அரமனைக்காரத் தெரு, சென்னை -1	முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்.

இன்று நாம் ஸ்வாமிஜியின் இதயத் தரு முகிழ்த்த சிந்தனை மலர் பலவற்றை அநுபவிப்பதற்குக் காரணம் குட்வின்தான்.

1896ம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து அன்பு வழியே ஆத்மாவை அடையும் பக்தி யோகத்தைப் பற்றித் தமது உடலின் ஒவ்வோர் அணுவிலும், உரையின் ஒவ்வோர் அக்ஷரத்திலும், தொனியின் ஒவ்வோர் அசைவிலும், உணர்வின் ஒவ்வொரு சாயலிலும் சத்தியம் தொனிக்கத் தொடர் உரைகள் நிகழ்த்தினார் ஸ்ரீமத் விவேகாநந்தர்.

வேதாந்தம் அமெரிக்காவில் அமோகமாகப் பிரசாரமாயிற்று. ஹாலிவுட் சினிமாக்களைக் காண இன்று இந்தியமக்கள் எவ்வளவு நாட்டத்துடன் செல்கிறார்களோ, அப்படி இந்தியாவின் ஆத்மிகத்தை அறிய அன்று அமெரிக்கர்கள் ஆர்வமாக இருந்தார்கள்!

ஸ்வாமி கிருபாநந்தர் கூறுகிறார்:

''வேதாந்த இலக்கியத்துக்கு இங்கே பெருத்த தேவை ஏற்பட்டு வருகிறது. சற்றும் எதிர்பார்க்க முடியாதவர்களெல்லாம் சம்ஸ்கிருத வார்த்தைகளை அதிகமாக உபயோகிக்கிறார்கள். 'ஆத்மா, புருஷன், பிரகிருதி, மோக்ஷம்'-இன்னும் இதுபோன்ற சொற்கள் அமெரிக்கப் பேச்சின் 'பூரணப் பிரஜை'களாகி விட்டன. ஹக்ஸ்லி, ஸ்பென்ஸர் இவர்களுடைய பெயர்களைப் போலவே பலருக்கு சங்கராசாரியர், ராமாநுஜர் ஆகியோரது பெயர்களும் பழக்கமாகி வருகின்றன. இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடும் எந்த நூலாயினும் அவற்றுக்குப் பொது நூல் நிலையங்களில் 'மவுசு' ஏற்பட்டிருக்கிறது.''

ஸ்வாமிஜியின் பிரசங்கங்கள் சிறு பிரசுரங்களாக வெளிவரலாயின. ராஜயோகம், பக்தி யோகம், கர்மயோகம் இவற்றைப் பற்றிய அவரது உரைகளும் தனித்தனி நூல்களாக உருவாகத் தொடங்கின. குட்வின் ஒருவர் இருக்கக் கேட்பானேன்?

பிப்ரவரி 13ந் தேதி குருவாரத்தன்று பல இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் ஸ்வாமிஜி மந்திரோபதேசம் செய்தருளினார். அதற்கடுத்த குருவாரத்தில் டாக்டர் ஸ்ட்ரீட் என்ற அத்யந்த பக்தருக்குத் துறவு அளித்து யோகாநந்தர் என்ற நாமத்தை அளித்தார். ஸ்வாமிஜி ஓராண்டுக்குள் வேதாந்தத்தைப் பரப்பவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு மூன்று அமெரிக்கரைச் சாதுக்களாக்கியது ஓர் அரிய திருப்பணியாகும்.


''ஹோமரின் பிறந்த இடம் என்பதாக ஏழு நகரங்கள் உரிமை கொண்டாடிச் சர்ச்சையிட்டது போல் எங்கள் குருவை (ஸ்வாமி விவேகாநந்தரை)த் தங்களவராக ஏழு தேசங்கள் உரிமை கோரும் காலம் வரும்; அதனால் பாரதமானது தனது பெருமாண்பு பொருந்திய புத்திரர் ஒருவரைப் பெற்ற கௌரவத்தை இழந்து நிற்க நேரிடும்'' என்று பக்தி பாதியும் ஹாஸ்யம் பாதியுமாக எழுதினார் ஸ்வாமி கிருபாநந்தர்.

''அவர் தந்த உபதேசம் வர்த்தக உலக மனிதனுக்கு வலிவு தந்தது. விளையாட்டு வலிமையாளரைச் சிந்திக்கச் செய்தது. கலைஞருக்குப் புது அபிலாஷைகளை அளித்தது. மனைவியும் அன்னையும், கணவனும் தந்தையும் தங்கள் கடமைகளைப் பெரிதாகவும், புனிதமாகவும் மதிக்கும் உணர்வினை அளித்தது'' என்கிறார் ஸ்ரீமதி வில்காக்ஸ். வேதாந்தம் என்பது உலகை விட்டு ஓடுவதல்ல, உலக வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதே என்பதற்கு இதை விடச் சான்று வேண்டுமா, என்ன?

நியூயார்க்கில் செய்ய வேண்டியவைகளையெல்லாம் செய்துவிட்டு மீண்டும் ஸ்வாமிஜி டெட்ராய்டுக்குச் சென்றார். ''அச்சமயத்தில் அவர் ஒரே பக்தி மயமாக இருந்தார். கடவுள் அன்பு என்பதே அப்போது அவருக்குப் பசியாகவும், தாகமாகவும் இருந்தது. அன்பு உருவான தெய்வ மாதாவுக்காக ஏங்கி அவரது இதயம் வெடித்துவிடும்போல் அப்படி ஒரு தெய்வ வெறி அவரை ஆட்கொண்டிருந்தது'' என்கிறாள் ஸ்ரீமதி ஃபங்க். அவர் அன்று நிகழ்த்திய இறுதிப் பிரசங்கத்தின் போது, ''இந்த மண்ணுலகைச் சேராத ஒன்று அவரது அழகில் பொலிந்தது. உடலின் தளைகளை ஆத்மா ஏறக் குறைய உடைத்தெறிந்து விட்டது போலத் தோன்றினார். அப்போதுதான் அவரது முடிவின் நிழலாட்டத்தை முன்கூட்டிக் கண்டேன். பல வருஷங்கள் அளவுக்கு மீறி உழைத்ததால் அவர் மிகவும் தேக பலம் குறைந்துபோயிருந்தார். இந்த உலகில் அவரது காலம் அதிகமில்லை என்பது அப்போதே தெரிந்துவிட்டது. நான் என் கண்களை மூடிக்கொள்ள முயன்றேன். ஆனாலும் என் இதயத்தில் உண்மையை அறிந்திருந்தேன்'' என்று உருக்கத்துடன் எழுதுகிறாள் ஃபங்க்.

தமது ஆயுட்காலத்தை முடித்துக்கொள்ள ஸ்வாமிஜியுமே அவாவத் தொடங்கிவிட்டார்.

''ஹா! இந்தத் தேகம் எத்தனை பயங்கரமான ஒரு தளை!'' என்று அடிக்கடி அலறினார். ''என் உடலை நீட்டிப் படுத்துக்கொண்டு உயிரை விடுவதற்காக ஒரு மூலையைத் தேடி அலைகிறேன்'' என்று அரற்றினார். (தொடரும்)



''ஏன் அந்த எலியைப் பிடிக்க மாட்டேங்கறே? நான் பிடிக்கட்டுமா?''

''வேண்டாம்! வேண்டாம். அது தான் இந்த வீட்டிலே கடைசி எலி. அதையும் பிடிச்சுட்டா எனக்கு வேலை இல்லேன்னு என்னை விரட்டிடுவாங்க. அதனால்தான் அது ஒன்னை மாத்திரம் விட்டு வச்சிருக்கேன்.''

அமரநாதத்து ஈசன்

தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்

**'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'**


என்று மணிவாசகர் முழங்குகிறார். அந்த முழக்கத்தையே இன்று நாமும் பலப் பல கூட்டங்களில் கேட்கிறோம். தென்னாடுடைய சிவன் என்பதால் இந்தச் சிவ வழிபாடு தென்னாட்டில் தான் தோன்றியிருக்க வேண்டும் என்பதே பல சைவப் பெருமக்களின் சித்தாந்தம். அதற்கேற்பச் சிவலிங்க வழிபாடும் பொங்கழல் உருவனை அண்ணாமலையிலேயே எழுந்திருந்திருக்கிறது. அதன் பின்னரே நாடு முழுதும் சோதிர் லிங்கங்கள் தோன்றியிருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆனால் இத்தனை வாதமும் அடிபட்டுப் போகிறது அமரநாதரைக் காணும் போது. அழல் உருவனாக மட்டும் இல்லை; அவன் 'புனல்' உருவனுமாக அல்லவா இருக்கிறான் என்று நாம் அறிகிறோம். ஆம், எல்லாம் வல்ல இறைவன் பஞ்சபூதங்களின் வடிவில் இருக்கிறான் என்பதை அறிவோம். அட்டமூர்த்தி எப்படியெல்லாம் கோலம் கொள்கிறான் என்பதைத்தான் நமது அப்பர் பெருமானும்,

**இருநிலனாய்த் தீயாகி, நீரும் ஆகி
இயமானனாய் எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய், ஞாயிறு ஆகி
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி**

அவன் இலங்குகிறான் என்பதைத்தான் பாடியிருக்கிறாரே. தமிழ் நாட்டில் பஞ்சபூதத் தலங்கள் உண்டு. திருவாரூரில் மண்ணுருவிலும், திருவண்ணாமலையில் அனல் உருவிலும், திருவானைக்காவில் நீர் உருவிலும், திருக்காளத்தியில் காற்றின் உருவிலும், தில்லையில் ஆகாய வடிவிலும் இறைவன் இருந்து அருள் புரிகிறான் என்பதை முன்னரே தெரிந்திருக்கிறோம். என்றாலும் திருவானைக்காவில் ஆனைக்கா அண்ணலாக இருப்பவன் லிங்க உருவில் தானே இருக்கிறான் என்று காண்போம். அவன் கருவறையில் எப்போதும் நீர் ஊறிக்கொண்டே இருப்பதால் அவனை முழுக்க முழுக்க நீர் உருவினன் என்று கூறுவதற்கில்லை. முழுதும் நீர் உருவிலே நிற்கும் இறைவனைக் காண நாம் அமரநாதம்தான் செல்ல வேணும்.

இமயத்தின் சிகரத்திலே கயிலாயம், கேதார நாதம், பத்ரிநாதம், பசுபதி நாதம், அமரநாதம் என்னும் ஐந்து க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. இவைகளில் பத்ரிநாதம் ஒன்றே நாராயணனுக்கு என்று அமைந்தது. மற்றவை நான்கும் சிவ க்ஷேத்திரங்களே. இன்னும் கைலாயம் திபெத்திலும், பசுபதி நாதம் நேபாளத்திலும் இருக்கின்றன. மற்றவை மூன்றும் நம் இந்திய நாட்டின் எல்லைக்குள்ளே இருக்கின்றன. இந்த க்ஷேத்திரங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு எல்லாருக்கும் கிட்டுவதில்லை. ஏதோ பூர்வ புண்ணியவசத்தால் உடல் வலிவும், உள்ளத்தில் தெம்பும், கையில் நிறையப் பணமும், கருத்தில் நிறைய ஆர்வமும் உடையவர்களுக்கே இந்த க்ஷேத்திராடனம் கொடுத்து வைத்திருக்கும். இன்னும் நாம் நினைக்கிறபோது இந்த க்ஷேத்திரங்களில் உள்ள இறைவனைச் சென்று காண முடியாது. ஆண்டில் ஆறுமாத காலம் நல்ல உறைபனிக்குள்ளேயே மூர்த்தியும் கோயிலும் புதைந்து கிடக்கும்; பனி உருகும் காலமாகிய வேனிற் காலத்தில்தான் சென்று காணுதல் கூடும். அதிலும் அமரநாதம் செல்வதற்கு ஆகஸ்டு மாதமே வசதியான காலமாகும்.

ஸ்ரீநகரிலிருந்து அறுபது மைல் தூரத்தில் உள்ள பால்காம் செல்ல வேண்டும். பால்காம் செல்வதற்கு அன்று ரோடு கிடையாதாம். ஆனால் இன்று நல்ல ரோடு போட்டிருக்கிறார்கள். வசதியான பஸ்களும் விடுகிறார்கள். ஆதலால், பால்காமுக்கு எளிதாகச் சென்று சேர்ந்து விடலாம். ரோடு போடுவதற்குமுன் இந்த அறுபது மைலையும் நடந்தே செல்லப் பத்து நாட்கள் ஆகுமாம். பால்காமிலிருந்து நாலு நாள் பயணத்தான் அமரநாதம். ஆனால் நாலு நாட்களும் நடந்தேதான் செல்ல வேண்டும். விரும்பினால் குதிரைகள், பல்லக்குகள், டோலிகள் மேல் ஏறியும் செல்லலாம். பால்காமுக்கும் அமரநாதத்துக்கும் இடையில் உள்ள வழி முப்பது மைல் தூரமே. என்றாலும் மூன்று நான்கு இடங்களில் தங்கியே பயணம் செய்ய வேண்டியிருக்கும். பால்காமிலிருந்து செல்லும் வழி லிட்டர்நாலா என்னும் ஆற்றை ஒட்டியே செல்கிறது. வழியெல்லாம் பைன் மரக் காடுகள்தான். வழி வளைந்தும் சுற்றியுமே செல்லும். இங்கெல்லாம் ஆறுகள் குதித்துக் கொக்கரித்துக் கொண்டே பாறைகளின் வழியே ஓடும். பால்காமிலிருந்து சேஷநாக நதிக்கரை வழியாகவே செல்கிறது பாதை. ஒன்பது மைல் நடக்க ஒருநாள் ஆகிவிடும். ஆதலால் அன்று இரவு சந்தன்வாரி என்ற இடத்தில் தங்கி இரவைக் கழிக்க வேண்டும். வசதிகளைக் காஷ்மீர் சர்க்கார் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.



அமரநாதர்

மறுநாள் காலை செங்குத்தான மலைமீது ஏற வேண்டும். பாதை வளைந்து வளைந்துதான் செல்லும். ஒருவர் பின் ஒருவராகவே வழி நடக்கவேண்டும். வழியெல்லாம் மலர்ச்

செடிகள்தான். பறவைகள்கூட வாழமுடியாத குளிர். இப்படி எட்டு மைல் நடந்தபின் சேஷநாக் என்ற இடம் வந்து சேருவோம். அங்கு ஒரு நாள் இரவைக் கழிக்க வேண்டும். அங்கு வௌராஜன் என்ற பெயரோடு அழகான தடாகம் ஒன்றிருக்கிறது. மிக்க அழகான இடம். இதையும் கடந்து மேலே செல்லும் போதுதான் முக்கால் மைல் தூரம் மலையுச்சியில் செங்குத்தாய் ஏற வேண்டும். அங்கெல்லாம் குதிரையோ டோலியோ வராது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கால்களாலேயே நடந்து கடக்க வேண்டும். இங்கு ஏற்றமானது முழங்காலை மட்டும் முறிக்காது; உடலையே முறித்துவிடும். வழியெல்லாம் முட்புதர்கள் வேறே. ஆனால் கஷ்டப்பட்டு ஏறிய பின் மனத்தில் ஏற்படுகின்ற மகிழ்ச்சி இருக்கிறதே அது சொல்லும் தரத்தது அன்று. இனி நாம் சென்று சேர்வது வாட்ஜகான் என்னும் இடம். இது கடல் மட்டத்துக்கு மேல் 11500 அடி. அப்போது அங்கு குளிர் எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்? இங்கிருந்து பாதை இறங்கிச் செல்லும் வழியில் ஐந்து நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடும். அந்த இடத்தையே பஞ்ச தரணி என்பர்.

அங்கு ஒரு நாள் இரவைக் கழித்த பின் யாத்திரிகர் கூட்டம் அமரநாத் குகையை நோக்கிச் செல்லும் வழியில் உள்ள ஆறுகளில் பனி உறைந்து யாத்திரிகர்கள் நடந்து செல்ல உதவும். கால்களில் 'வைக்கோல் பிரிகளைச் சுற்றிக் கொண்டே நடக்க வேண்டியிருக்கும். பஞ்சதரணி ஆறு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓடுகிறது. அந்த ஆற்றின் வடபுறத்தில் ஒரு செங்குத்தான மலை. அதற்கும் வடபுறத்தில்தான் அமராவதி நதி. இந்த மலையையும் ஆற்றையும் கடந்துதான் அமரநாத் குகைக்குச் செல்ல வேண்டும். ஆற்றுக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் ஆற்றின் வட கரையில் உள்ள கரையில் தான் அமரநாதர் தரிசனம் தருகிறார்.


கடைசியில் எத்தனையோ சிரமப்பட்டாலும் அமரநாத் வந்து சேர்ந்து விட்டோம். வழியெல்லாம் 'அமரநாத் கி ஜெய்' என்று பக்தர் கள் முழங்கிய முழக்கத்தில் நாமும் கலந்து கொண்டுதான் வழிப் பயணத்தின் துன்பங்களை மறந்திருப்போம்.

அமரநாத் குகை பெரிய குகைதான். 150 அடி நீளமும், 150 அடி அகலமும் 150 அடி உயரமும் உள்ள குகை அது. நூற்றுக் கணக்கான மக்கள் உள்ளே நிற்க வசதியாக இருக்கிறது. அதன் மேற்கூரையிலிருந்து குகையின் பின் பாகத்திலுள்ள பாறையில் நடுவில் அமைந்து விளங்கும் சிவலிங்கத்தின் மீது தண்ணீர் சொட்டிக் கொண்டே யிருக்கிறது. அச் சிவலிங்கம்தான் அமரநாதர். அவர் முழுக்க முழுக்கப் பனிக்கட்டி உருவினர். இந்த அமரநாதர் எப்போதும் இருப்பவர் இல்லை. ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று உருப்பெற ஆரம்பிப்பார். நாளும் வளர்வார். 'பௌர்ணமி யன்று பூரணப் பொலிவோடு நல்ல காத்திரமான சிவலிங்க வடிவில் தோன்றுவார். மறுநாள் முதல் வடிவம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கும். அமாவாசைக்கு முந்தின தினம் முற்றும் தேய்ந்து மறைந்து விடுவார். கடவுள் உருவம், அருவம், அருவுருவம் உடையவர் என்று சைவ சித்தாந்தம் சொல்கிறதே அதற்கேற்ப அருவமாக இருக்கும் அவர் உருவம் பெறுவதும் அருவுருவமாகத் தோன்றுவதும் விந்தையிலும் விந்தையே.

அமரநாதர் தரிசனத்தோடு நமக்கு அவர் தரும் காட்சி நிறைவு பெறுவதில்லை. பறவைகளே வாழ இயலாத அந்த உறைபனியுடைய குளிர்ப் பிரதேசத்தில் இரண்டு புறாக்கள் வாழுகின்றன. பூரணப் பொலிவுடன் அமரநாதர் உருப் பெற்றதும் இரண்டு புறாக்கள் வந்து அக்குகையில் காட்சிதரும்.

இந்த அமரநாதரைத் தரிசிக்க இந்துக்கள் மட்டும்தான் வருகிறார்கள் என்றில்லை; புத்தர்கள் வருகிறார்கள்; முஸ்லிம்கள் வருகிறார்கள். அறுநூறு ஆண்டுகளுக்கு முன் காஷ்மீரை ஆண்ட ஜைனுல் உலாப்தீன் என்னும் மகம்மதிய அரசன் அந்தக் குகைக்கு வந்து அமரநாதரைத் தரிசனம் செய்து திரும்பியிருக்கிறான் என்பது வரலாறு. தென்னாடுடைய சிவன் இந்த அமரநாதத்திலே எந்நாட்டவருக்கும் இறைவனாக விளங்குகிறான்.




SUNLIGHT
Soap
புதுமுறையில் உருவாகிய
ஸன்லைட்
சலவையிலே அதிக ஒளி தருகிறது!
புதுமை பூண்டு வருகிறது புதுமுறையில் உருவாகிய ஸன்லைட்: அதி நூதனமான புது மேலுறை, புத்தெழில் வடிவம், எல்லாவற்றிற்கும் மேலாக, அதிக ஒளிதரும் ஆற்றல் ... சலவைக்கு சலவை அதிக ஒளி...;
சலவையிலே அதிக வெண்மை, அதிக ஒளி.
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
L. 53-140 TML



எப்போ வருவானோ

சியாமா

திடுக்கிட்டுத் திரும்பிய என்னை அந்த மூதாட்டியின் அமைதியான முறுவல் மேலும் திகைப்படையச் செய்தது. அவர்களுக்கு ஐம்பத்தைந்து வயதிருக்கலாம். கம்பீரமான களை பொருந்திய முகம். தலை தும்பைப் பூவைப் போல் வெளுத்திருந்தது. சற்று முன் என் முதுகைப் பதம் பார்த்திருந்த குடை அவர் கையில் இன்னும் ஆக்கிரோஷமாகவே இருந்தது. ஆனாலும் முன்பின் தெரியாத ஒருவரை அப்படிக் குடையால் தாக்கியது பற்றி அவர் முகத்தில் தயக்கத்தையோ கலவரத்தையோ காணவில்லை.

''அதே உயரம், பருமன், கிராப், கழுத்தை மூடியிருக்கும் காலரின் மடிப்புக் கூட'' என்று ஏதேதோ அவர் முணுமுணுக்கக் கேட்டேன்.

''மன்னிக்க வேண்டும்'' என்றேன். என் குரலில் வரவழைத்த கடுமையைப் புகுத்த முடியாமலோ அந்த அம்மையைப் புறக்கணித்தேன்.

அதே விநாடி என் கரத்தைப் பற்றிய அவர் ''தயவுசெய்து வெளியே நிற்கும் என் கார் வரை வாருங்கள். அண்ணாவும் இந்த அதிசயத்தைக் காணட்டும்'' என்று கூறிக்கொண்டே கரகரவென்று குன்னூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே நின்றிருந்த அவர் காரிடம் என்னை இழுத்துச்சென்றார். அங்கே என்னைத் திரும்பச் செய்து, காரின் பின் ஸீட்டிலிருந்த அந்த முதியவரிடம் என் முதுகுப்புறத்தைக் காட்டி ''அண்ணா, அண்ணா. இந்த அதிசயத்தைப் பாருங்கள்! அசல் நம்ம ராகுலன் மாதிரியே இல்லை!'' என்று அலறி ஆர்ப்பரித்தார்.

அந்த முதியவர் முகத்தில்தான் அந்த அம்மாளின் அந்தச் செய்கையின் இங்கிதக் குறைவை நான் முதன் முதலில் கண்டேன்.

''மன்னிக்க வேண்டும். ராகுலன் என் மருமான் - இந்த என் சகோதரியின் ஒரே பிள்ளை. உங்களுக்கும் அவனுக்கும் சாயலில் ஓர் அதிசய ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும்....''

அந்தம்மாள் இப்போது எங்கள் பேச்சில் குறுக்கிட்டு, ''இங்கிருந்து ஏழாவது மைலில் கோத்தகிரி ரோடிலேயே எங்கள் வீடு இருக்கிறது. நீங்கள் அவசியம் உடன் வந்து அங்குள்ள ராகுலனின் போட்டோவைப் பார்க்கத்தான் வேண்டும்'' என்று என் கையில் இருந்த தம் பிடியை இன்னும் இறுக்கினார்.

நான் ஒரு பத்திரிகை நிருபர். வெலிங்டனில் உள்ள ராணுவக் கல்லூரி பற்றிப் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுத அங்கு வந்திருந்தேன். அடுத்த நாள் நீலகிரி மெயிலில் சென்னை திரும்ப ரிசர்வேஷன் செய்துவிட்டுக் குன்னூர் ஸ்டேஷனிலிருந்து திரும்பும்போதுதான் மேற்சொன்ன சம்பவம் நடந்தது. நாளைக்குள் எனக்கு ஆகவேண்டிய வேலை ஒன்றும் இல்லை. ஆகையால் காரின் முன்புறம் ஏறிக் கொண்ட நான், ''என் ராகுலன் போட்டோ? அவரையே பார்க்க முடியாதா?'' என்றேன்.

கார் கோத்தகிரியின் சாலையில் விரைந்து கொண்டிருந்தது.

''ராகுலன் நம் ராணுவத்தில் ஒரு காப்டன். தற்சமயம் எல்லைப்புறத்தில் பணியாற்றி வருகிறான்...''

''அண்ணா நான்தான் சொல்வேன் என் ராகுலனைப்பற்றி. 1962 அக்டோபரில் சீனர்களால் நம் எல்லைக்கு ஆபத்து ஏற்பட்டது இல்லையா? அது முதலே அவன் அங்குதான் இருக்கிறான். உங்களிடம் ஒளிப்பானேன்? எனக்கு அவன் போவதில் விருப்பமே இல்லை. ஒரே பயம், திகில். அண்ணாவைத் தவிர எனக்கிருப்பதெல்லாம் அவன்தானே? நீபா போவதற்கு முன் ஹைதராபாத்திலிருந்து இங்கு வந்திருந்தான். என்னென்னவோ சொல்லிக் கெஞ்சினேன். 'போகாதேடா, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி இங்கே வெலிங்டனிலேயே தங்கப் பார்' என்று அழுதேன். ஆர்ப்பாட்டம் பண்ணினேன். கேட்டானா, புறப்பட்டே போய்விட்டான்.

''வீட்டுக்குப் போனவுடன் அவன் எழுதியிருக்கும் கடிதங்களைக் காட்டுகிறேன். ஏதோ பிக்னிக் போன இடத்திலிருந்து எழுதுகிறவன் போலல்லவா எழுதுகிறான்?''

வண்டியிலேயே அவை விதவிதமான விசித்திரமான கடிதங்களும் கூட.

''ஒரு கெட்ட கனவிலிருந்து விழித்துக் கொண்டவர்கள் போலத் தோற்றமளிக்கிறார்கள் இங்குள்ள எளிய மலைஜாதி மக்கள். சீன ஆக்கிரமிப்பாளரை இந்தக் கெட்ட கனவிலிருந்து விரட்ட இவர்கள் புரிந்துள்ள தொண்டுகளையும், வீரச் செயல்களையும் எப்படி விவரிப்பேன்?'' என்று ஒரு கடிதத்தில் எழுதியிருந்தான்.

இன்னொரு கடிதம்—



''கோத்தகிரியின் குளிரும் ஒரு குளிரா, அம்மா? ஏழெட்டுக் கம்பளிகள் போர்த்தியிருந்தும்கூட இங்கு குளிர் எலும்பையே ஊடுருவி விடுகிறது. ஆனால் குளிர், பனி இவற்றைக்கூட நாங்கள் பொருட்படுத்தவில்லை. இங்கு நிலவும் கற்பனைகூடப் பண்ண முடியாத பயங்கரமான அமைதிதான், எங்களைச் சமயத்தில் பைத்தியமாகவே அடித்து விடுகிறது. நமக்கு மிகவும் பழக்கமான நாய்களின் குரைப்பு, பட்சிகளின் இன்னிசை, கால்நடைகளின் மணியோசை, குழந்தைகளின் சிரிப்பு, இவைபோன்ற ஒலிகள் கூட ஏதோ ஒரு முற்பிறப்பின் கனவு போல் தோன்றுகின்றன இங்கே. இதயத்தின் அடிப்புத்தான் இங்கே நாங்கள் கேட்கும் இடைவிடாத இரக்கமற்ற ஒலி...''

வேறொரு கடிதத்தை ''என்னை மன்னித்து விடு அம்மா. நீயும் மாமாவும் நானில்லாமல் அங்கே படும் வேதனை எனக்குப் புரியாமல் இல்லை. ஆனால் உனக்குப் புரியும்படி நான் எப்படிச் சொல்லுவேன். எப்படியாவது உயிர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது கேவலம் விலங்குகளின் உணர்ச்சி இல்லையா? என்னால் அம்மாதிரி இருக்க முடியவில்லையே'' என்று முடித்திருந்தான்.

அங்கேதான் நான் அன்றிரவைப் போக்கினேன். தூங்கப் போகு முன் ராஜுலன் பிறந்தது, வளர்ந்தது, விளையாடியது, பள்ளிக்கூடம் போனதுபோன்ற விதம் விதமான தகவல்களை அந்தம்மாள் ஒன்றும் விடாமல் எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். கணப்பிற்கருகே ஈஸிசேரில் சாய்ந்திருந்த அவள் சகோதரன் நடுநடுவே 'உம்' போடுவதைத் தவிர வாய் திறக்கவில்லை. படுக்கையில் படுத்த பிறகும், நெடுநேரம் வரை தன் முப்பதே வயதில் அன்றிரவு நான் அங்கு கண்ட அத்தனை அன்பையும், சுகத்தையும், சுதந்திரத்தையும் தியாகம் செய்து போயிருந்த ராஜுலனை என் மனம் அறிய முயன்று கொண்டிருந்தது.

அடுத்த நாள் விடிந்ததும் ராஜுலனுக்கென்றே அந்தப் பங்களாவில் ஒதுக்கப்பட்டிருந்த அறையைக் காண அந்தம்மாள் என்னை அழைத்துச் சென்றாள். அங்கு நான் கண்ட ஒழுங்கு என்னைத் திக்குமுக்காடச் செய்தது. சாமான்கள் அவற்றுக்கான இடங்களில் பளிச்சென்று நன்கு துடைக்கப்பட்டு வைத்திருந்தன. கோட் ஸ்டாண்டில் சற்று முன்புதான் கழற்றப்பட்டவை போல் சில சட்டைகளும் பாண்டுகளும் தொங்கிக் கொண்டிருந்தன. படுக்கை சுற்றப்பட்டு ஒரு கம்பளியும், குளிப்டும் அதன் பேரில் மடித்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு மேசைமேல் பிரிக்கப்பட்ட சில புத்தகங்கள், டயரி, மைக்கூடு, பேனா. மைக்கூட்டில் முக்கால் பாகத்துக்கு மேல் மை இருந்தது. அந்த அறையின் சொந்தக்காரர் பல மாதங்களாக அங்கில்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லை. என் எண்ணத்தைத் தெரிந்து கொண்டவர் போல் அந்த மூதாட்டியார் பதில் சொன்னார்.

''இதெல்லாம் அவன் உடைமைகள்தான். அவன் இங்கிருந்து சென்ற தினம் அவை எங்கிருந்ததோ, எப்படி இருந்ததோ அப்படியே அவற்றைக் கூடியவரை வைத்திருக்கிறேன். அந்த டிரெஸர், சட்டை இரண்டுமே அவன் இங்கிருந்து கிளம்புவதற்குச் சற்று முன் கழற்றியவை. ஒவ்வொன்றையும் மாற்ற எனக்குத் துணிவில்லை. ராணுவ உத்தியோகம் பாருங்கள், திடீரென்று அவன் வீடு திரும்பினால்....''

பேசிக்கொண்டே அறையின் ஒரு மூலையிலிருந்த மேசையை நெருங்கினோம். மேசைக்குப் பின்புறத்தில் சுவரில் இயற்கை அளவில் பெரியது செய்யப்பட்ட அவனது போட்டோ தொங்கிக் கொண்டிருந்தது. ராணுவ உடையில் இருந்த அவன் எங்களை நோக்கிப் புன்னகை செய்துகொண்டிருந்தான். எங்களிடம் ஒரு சாயல் ஒற்றுமையும் இருந்ததாக எனக்கென்னவோ தோன்றவில்லை. அத்தனை அழகாக, கம்பீரமாக, மிடுக்காக அவன் காட்சி அளித்தான்.

அறையின் மூலையில் மிகப் பெரிய ஜன்னல் ஒன்றிருந்தது. அதிலிருந்து வெளியே நோக்கினால் தொலைவில் மேட்டுப்பாளையமும், கல்லாறிலிருந்து அதற்குச் செல்லும் இருப்புப் பாதையும், வானத்தில் செதுக்கினாற்போல் தோற்றமளித்துக் கொண்டிருந்தன.

''நீங்களே பாருங்கள், மலை, மரங்கள், செடி கொடிகள் இவற்றைத் தவிர கண்ணுக்கெட்டியவரை மனிதப் பூண்டையே காணோமே. இங்கேயே இப்படி இருந்தால் அங்கே நீபாவில் எப்படி இருக்கும்? மரம், செடி, கொடிகள் கூட இல்லையாம். வெறும் பனிக்கட்டிதானாம். இந்த வெறும் பனிப் பொட்டலுக்காகவா இத்தனை உயிர்த் தியாகம்? ஜகத்தில் அவரவர் நாட்டிலேயே அவரவர் வாழ இடமில்லையா, வகை இல்லையா? ஆக்கிரமிப்பாளர்களின் இந்த வெறியைப் பற்றி என்னவென்று சொல்வது?'' என்று அந்த அன்னை பெருமூச்செறிந்தாள்.

சாப்பிட்ட பின் அந்தம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு நானும் அந்த முதியவரும் குன்னூரில் நான் தங்கியிருந்த ஹோட்டலை நோக்கிக் காரில் போய்க் கொண்டிருந்தோம். சங்கோஜி போல் தோன்றிய அவரிடம் பேசுவதே கஷ்டமாக இருந்தது. ஆகையால் பெரும்பாலும் வழியை மௌனத்தில் கழித்தோம். சிம்ஸ் பார்க்குக் கருகில் கார் போய்க் கொண்டிருந்தபோது ஏதாவது பேசவேண்டும் என்ற எண்ணத்தில் ''ராகுலன் மீண்டும் வரும் சமயம் எனக்கு ஒரு கார்டு போடுங்கள். போட்டோவிலிருந்து எங்களிடையே என்னும் ஒரு சாயல் ஒற்றுமையையும் காண முடியவில்லை. நேரிலாவது வந்து பார்க்கிறேன்'' என்றேன்.

அவர் காரை நிறுத்தினார்.

''யார் சொன்னது உமக்கும் ராகுலனுக்கும் சாயல் ஒற்றுமை என்று? என் ராகுலன் ராஜா மாதிரியல்லவா இருப்பான்?'' என்றார் குரலில் பெருமை பொங்க.

அவ்வளவும் மீறித்தான் அந்த வார்த்தைகள் வந்திருக்க வேண்டும். இருந்தாலும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''அவன் வயதுள்ள யாரைக் கண்டாலும் என் சகோதரி இப்படித்தான் தன் மகனைக் கற்பனை செய்து கொள்கிறாள். பல சந்தர்ப்பங்களில் விஷயம் விபரீதமாகக் கூடப் போய் விடுகிறது. ஆனால் என் ராஜாவுக்கு ஈடு என் ராஜாவேதான்'' என்று பெருமூச்செறிந்தார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவரை உற்று நோக்கினேன்.

''அப்படியானால் அவர்கள் — உங்கள் சகோதரி இப்படி நடந்து கொள்ளக் காரணம்?'' என்றேன், வாய் குழறி.

''போரில் அவன் இறந்துபோன செய்தி வந்ததிலிருந்தே அவள் போக்கு இப்படி மாறிவிட்டது. செய்தி வந்த அந்த ஒரு நாள் மட்டும் அதிர்ச்சியில் என்னோடுகூடப் பேசவில்லை. அடுத்த நாள் முதல் அவள் இப்படித்தான் நடந்து கொள்கிறாள். அவன் இறந்ததையே மறந்து, திடீரென்று அவன் வீடு திரும்பினால் அவனுக்கு ஒரு குறையும் இருக்கக்கூடாது என்று ஏதேதோ செய்துகொண்டிருப்பாள்.''

''டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்?''

''அவர்கள் மட்டும் என்னத்தைச் சொல்லிவிடப் போகிறார்கள்? திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் சித்த சுவாதீனத்தை இழந்திருக்கிறாள். நாளடைவில் சரியாகலாம், சரியாகாமலும் போகலாம் என்கிறார்கள்.

''இத்தனை பெரிய கஷ்டத்திலும், நேற்று உங்களைத் தடுத்து நிறுத்தியது போல் எப்பொழுதாவது யாரையாவது ராகுலன் என்று எண்ணிக்கொண்டு வீட்டுக்கு அழைத்து வருவதைத் தவிர அவளால் வேறு ஒரு தொல்லையும் கிடையாது.''

காரைத் திருப்பி நான் இருந்த ஹோட்டலின் வாசலில் நிறுத்தினார். கடிகாரத்தைப் பார்த்தேன். ரயிலுக்கு இன்னும் ஒரு மணி நேர அவகாசம் இருந்தது. அவரிடம் என்ன சொல்லி விடைபெற்றுக் கொள்வது என்று தோன்றாமல் தத்தளித்தேன்.

''உண்மை தெரியாத நான் ஏதாவது தவறாக நடந்து கொண்டிருந்தால் நீங்கள் என்னை மன்னித்துவிட வேண்டும்'' என்றேன், குரல் தடுமாற.

''நான் சொல்ல வேண்டியதை நீங்கள் சொல்லலாமா?'' என்ற அவர் ''பல நாட்களுக்குப் பின் நேற்றும், இன்று காலையும் என் சகோதரி எத்தனையோ மகிழ்ச்சியுடன் இருக்கக் கண்டேன். அதற்காக என் நன்றி. ஏதோ உங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும் போலிருந்தது, சொல்லிவிட்டேன். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிக்கொண்டே காரைக் கிளப்பிக் கொண்டு மறைந்தார்.

ஹோட்டலின் போர்டிகோவிலேயே செயலற்று, நிலைவற்று அவர் மறைந்த வழியைப் பார்த்து நான் நின்று கொண்டிருந்தேன்.

ஓர் ஆக்கிரமிப்பாளனின் வெறிக்கு நாட்டின் இளம் காளைகள் மட்டுமா பலியாகிறார்கள்? எத்தனை இல்லங்களில் இப்படி எத்தனை அன்னைகளும் மனைவிகளும் பலியாகிறார்களோ என்ற எண்ணம் என்னை என்னவோ செய்தது.

உமாவின் கடிதத்தைப் படித்து முடித்ததும் பிச்சுமணி அதை மெல்ல நான்காக மடித்துத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான். அவனது மனத்திரையில் உமா மணக் கோலத்தோடு காத்து நிற்கும் காட்சியே வண்ண ஓவியமாகப் பதிந்திருந்தது.


திடீரென்று டாக்டர் ஜகந்நாதனைப் பற்றிய ஒரு சிந்தனை அவனுடைய மூளையில் பளிச்சிட்டது. உமா தன் கடிதத்தில் அந்த டாக்டரைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடவில்லை! ஒரு வேளை ஏதோ ஒரு சங்கடத்தினால்தான் உமா வேண்டுமென்றே அந்த டாக்டரின் விஷயத்தைப் பற்றி எதுவும் எழுதாமல் தவிர்த்திருக்கிறாளோ? அப்படியென்றால் அவர் மீது உமாவுக்கு—? அதை நினைத்ததும் பிச்சுமணியின் முகம் கறுத்தது. ஆனால் அடுத்த கணமே வேறோர் எண்ணத்தில் அவன் மனம் தெளிவடைந்து முகம் மலர்ந்தது. எல்லாவற்றையுமே வெளிப்படையாக எழுதியிருக்கும் உமா டாக்டரின் விஷயத்தை முக்கியமாகக் கருதாததால் தான் அதைப் பற்றி எதுவும் எழுதாமல் விட்டிருக்கிறாள். டாக்டரின் பிரச்னை தீர்ந்துபோய் விட்டது. இனி அவரைப் பற்றிப் பிச்சுமணி பயப்பட வேண்டியதில்லை. இப்போதுள்ள பிரச்னையெல்லாம் அவனுக்கும் உமாவுக்கும் இடையேயுள்ள — அதாவது அவர்களுடைய வயது வித்தியாசங்களுக்கு இடையேயுள்ள ஒரே கேள்விதான்! அதை நினைத்ததும் பிச்சுமணியின் முகத்தில் ஒருவித தன்னம்பிக்கையோடு புன்முறுவல் பூத்தது.

கன்னியாகுமரி ஓட்டலின் மேன்மாடியில் உள்ள வராந்தாவில் பிச்சுமணி வந்து நின்று தூரத்தில் முழங்கும் கடலின் அலையோசைகளைக் கேட்டபடி உமாவின் கடிதத்தில் உள்ள விஷயங்களைப் பற்றியெல்லாம் தீவிரமாகச் சிந்திக்கலானான்.

'உமாவுக்கு என்மீது அன்பு இருப்பதால்தான் என் கடிதத்துக்குப் பதில் எழுதியிருக்கிறாள்! ஆனால் என்னை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், தன் வாழ்க்கையில் இனிக் காதலுக்கோ கல்யாணத்துக்கோ இடமில்லையென்றும் எழுதியிருக்கிறாளே அதற்கு அவள் கூறும் காரணம் சரியில்லை. வயது வித்தியாசமும் பெரிதல்ல! வயதுக்கும் மனத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? காதல் என்பது வயதையும் உலக சம்பிரதாயங்களையும் மீறிப் பூர்வ ஜன்மாந்திர வாசனை போல் ஆத்மாவோடு பிணைந்து வருவது! என்னை விட வயதில் குறைந்த ஒருத்தியைத் தான் நான் காதலித்துக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று எழுதியிருக்கிறார்களே, அதை எழுத எப்படி மனம் வந்தது? உமாவைத் தவிர வேறு எந்தப் பெண்ணையுமே என் உள்ளம் நாடாது! எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் உமாவை அடையவே நான் துடிப்பேன்! இது உமாவுக்குத் தெரியாதா? அல்லது தெரிந்திருந்தும் வேறு போக்குக் காட்டுகிறாளா? ஆனால் மிஸ் உமா எவ்வளவு நல்லவள்! தன் மனம் திறந்து தன் வாழ்க்கை ரகசியங்களையெல்லாம் எவ்வளவு தெளிவாக எழுதியிருக்கிறாள்? உமாவுக்கு ஒரு கல்யாணம் நிச்சயமாகித் தாலி கட்டும் நேரத்தில் மாப்பிள்ளை வராததால் பாதியிலேயே கல்யாணம் நின்று விட்டதாம்! பாவம், அப்போது மணக் கோலத்தில் நின்றபடி உமாவின் உள்ளம் எவ்வளவு உடைந்து போயிருக்கும்? ஆனால் அதுவும் என் நன்மைக்குத்தான், எனக்காகத்தான் அந்தக் கல்யாணம் நடக்காதபடி பிள்ளையார் தடுத்தாட்கொண்டிருக்கிறார். ஒன்றை எதிர்பார்த்து விரக்தியடைந்திருக்கும் ஒரு பெண்ணுள்ளத்தை எளிதில் என்னால் வென்றடைந்து விட முடியும். அவள் வாழ்க்கைக்கு மறுமலர்ச்சியூட்ட என்

குங்கும மல்லிகை

அரு. ராமநாதன்



ளுல் முடியும்! அதற்கான வழியும் எனக்குத் தெரியும்! அந்த வழியில் கண்ணை மூடிக்கொண்டு இறங்கிவிடு வேன்! உமா எனக்கே உரிய வாழ்வின் கனி! ஆமாம், உமா எனக்கே எனக்குத் தான்! ஆனால் அது உமாவுக்குத் தெரி யுமா? உமாவின் அந்தராத்மாவுக்கு அது தெரிந்தேயிருக்கும்! இல்லையென் ருல் அதைச் சீக்கிரம் தெரியச் செய் வேன். உமா என்னை உள்ளூறக் காதலிக்கிறுளா? அது எப்படி இருந் தாலும் உமா என்னைக் காதலிக்கும் படி செய்து அதை உமாவின் வாயா லேயே சொல்ல வைக்க என்னுல் முடி யும்! நிச்சயம் அப்படியே செய்வேன்!"

இவ்வாறெல்லாம் சிந்திக்க பிச்சு மணிக்கு அளவில்லாத குதூகலம் உண்டாயிற்று. உமாவைப் பற்றிய உணர்வே அவன் நாடி நரம்புகளிலெல் லாம் நிறைந்து அவனுடைய உட லெங்கும் ஒரு பரவசக் கனலாகப் பாய்ந் தது! நானூறு மைல்களுக்கு அப்பா லுள்ள உமாவைத் தன் கண்ணெதிரே கண்டு கையால் எட்டிப் பிடித்து இழுத்து அவளுடைய மலர்க் கைகளுக்குள் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு ஆனந் தத்தால் விம்முவது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று.

''டேய், பிச்சுமணி!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே அவனுடைய தாத்தா வந்தார்.

பிச்சுமணி ஒரு கணம் திடுக்கிட்டான். பிறகு, 'நல்லவேளை; உமாவின் கடிதம் சட்டைப் பைக்குள் இருப்பது தாத்தா வுக்குத் தெரியாது' என்று நினைத்துக் கொண்டான்.

அவனுடைய உற்சாகம் தாத்தா வுக்குப் பிடிபடவில்லை. அவனுக்கு உமா வைப் பற்றிய ஏக்கம் இருந்திருந்தால் தீர்த்த யாத்திரையின் உற்சாகத்தில் உமாவை அவன் மறந்திருப்பானென்றே கிழவர் நம்பினார்.

''டேய், பையா! கடலில் சூரியாஸ்த மனம் பார்க்கப் போக வேண்டாமா? போய் முகம் கழுவி நீட்டாக டிரஸ் செய்துகொள்!'' என்று தாத்தா அவ சரப்படுத்தினார்.

குளியலறைக்குள் பிச்சுமணி புகுந்து முகம் கழுவிக் கொண்டு சந்தனச் சோப்பு வாசனை கமகமக்க மூண்டாப் பனியனோடு வந்து நின்றான். அவ னுடைய கம்பீரமான தோற்றத்தை மேஜர் ராமதுரை உற்றுப் பார்த்துப் பெருமையால் பூரித்தார். வயதால் பழுப்பேறிய அவரது விழிகள் ஜில் லென்று மின்னின. நம் பேரனுக்குத் தேவையான சயவை உருப்படிகளில் மிக வும் நல்லவையாக அவரே தேர்ந் தெடுத்துக் கொடுத்து அவனை உடுத்திக் கொள்ளச் செய்தார். ''டேய் பையா!



முகத்துக்குப் பௌடர் போட்டுக் கொள்ளடா!'' என்றும் ஒரு சிரிப்புடன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கட்டளையிட்டார். ஒரு தாய் தன் பெண்ணைப் பார்க்க மாப்பிள்ளை வரும்போது எப்படியெல்லாம் அந்தப் பெண்ணை அலங்கரித்துப் பார்க்க ஆசைப்படுவாளோ, அது போலவே மேஜர் ராமதுரையும் தம் பேரனை அலங்கரிப்பதில் விசேஷமான ஆவல் கொண்டார்.

''தாத்தா! எனக்குத் தேவையானதையெல்லாம் நானே செய்து கொள்கிறேன்! நீங்கள் பேசாமலிருங்கள்!'' என்று கண்டித்த பிச்சமணி அடுத்த கணமே எதையோ நினைத்துக் கொண்டு, ''தாத்தா! சூரியாஸ்தமனம் பார்ப்பதோடு கடை வீதியிலும் சில சாமான்கள் வாங்க வேண்டும்! பணம் கொடுங்கள்!'' என்று ஏதோ தன் கணக்குப்பிள்ளையிடம் கேட்பது போல் கேட்டான்.

''டேய்! என் பெரிய டிரங்குப் பெட்டியில் என் கோட்டுக்கு அடியில் ஒரு மணிபர்ஸ் இருக்கிறது. அதிலிருந்து நூறு ரூபாய் எடுத்துக்கொள்!'' என்றார் மேஜர் அதி உற்சாகத்தோடு.

ஒரு நூறு ரூபாய் சலவை நோட்டை எடுத்துக் கொண்டு பிச்சமணி வந்து நின்று, ''ம், தாத்தா! நாம் புறப்படலாம்!'' என்றான்.

''நான் வரவில்லை! என்னால் அதிக தூரம் நடக்க முடியாது! நீ சின்னப் பயல்; எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் குதித்துக் கொண்டு ஓடலாம்!''

''அப்போ நான் மட்டும் போகிறேன்.''

''நீ மட்டும் தனியாகப் போகக் கூடாது!''

''ஏன், நான் தனியாகப் போனால் என்ன வந்துவிடும்?''

''நீ விளையாட்டுக்காரப் பயல்! கடலில் எங்கேயாவது குதித்து விளையாட ஆரம்பித்து ஏதாவது ஆபத்தில் மாட்டிக்கொண்டு விடுவாய்!''

''இதென்ன தாத்தா சண்டித்தனம் பண்ணுகிறீர்கள்? நீங்களும் என்னோடு வரமாட்டீர்கள், நானும் தனியாகப் போகக் கூடாது என்றால், நான் கடற்கரைக்குப் போவதுதான் எப்படி? என் பின்னாலேயே காவலுக்கு ஒரு போலீஸ்காரனை அனுப்பப் போகிறீர்களா?''

''போலீஸ்காரன் எதற்கு? லலிதாவே உனக்குக் காவலாக வந்தால் போதும்!'' என்றார் மேஜர் ராமதுரை.

அதைக் கேட்டதும் பிச்சமணி திடுக்கிட்டான்.

அத்தியாயம் நாற்பத்திநான்கு

இளஞ் சிட்டுகள்

கன்னியாகுமரிக் கடலில் சூரியன் அஸ்தமனமாவதைப் பார்க்க வேண்டுமென்று பிச்சமணி எவ்வளவு ஆசைப்பட்டானோ அவ்வளவும் ஆத்திரமாக மாறியது. தனக்குக் காவலாக ஒரு பெண்ணைத் தாத்தா அனுப்ப நினைக்கிறார் என்றால் எந்த ஆண் மகனுக்குத் தான் கோபம் வராது?

''என்ன லலிதாவா? உங்கள் சிநேகிதர் மருதநாயகத்தின் பெண்ணா? அவளா எனக்குக் காவல்?'' என்று பிச்சமணி உதடுகள் படபடக்கக் கேட்டான்.

''ஆமடா பையா! நம் காப்டன் மருதநாயகம் அந்தக் காலத்தில் என்னோடு பட்டாளத்தில் சேவை செய்தவர். நம்முடைய ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர். பெரிய அசகாய சூரர்!'' என்றார் மேஜர் ராமதுரை.

''அதனால் அவருடைய பெண்ணும் மிலிட்டிரிச் சிப்பாய் மாதிரி இருப்பாள், எனக்குக் காவலாக என் பின்னாலேயே வருவாள் என்று நினைக்கிறீர்களோ?''

''உனக்குப் பின்னாலே இல்லேடா! உனக்கு முன்னாலே!''

''நான் கடலில் எங்காவது நீந்தப் போய் ஆபத்தில் மாட்டிக் கொண்டால் அவள் என்ன செய்வாளாம்?''

''நீ கடலில் கால் வைக்கவே அவள் விடமாட்டாள். அப்படி அவள் 'கேரண்டி' கொடுத்திருக்கிறாள்.''

''ஓஹோ! உங்கள் சிநேகிதர் பெண் நமக்கு வழிகாட்டியாக வந்திருக்கிறாளே என்று நினைத்துக் கொஞ்சம் இடம் கொடுத்தால் அவள் தலைக்கு மேலே ஏறப் பார்க்கிறாளே! ஓகோன்னாளாம்!''

''டேய்! அவளிடம் போய் நீ வாய் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொள்ளாதே! நீ ஒன்று சொன்னால் அவள் ஒன்பது சொல்வாள்! டேய், அவள் காலேஜிலே படிக்கிற பொண்ணுடா!''

''காலேஜிலே படிச்சால் என்ன? அவளுக்குக் கொம்பா முளைச்சிருக்கு?''

''டேய், வீணா அவளைச் சண்டைக்கு இழுக்காதே!'' என்றார் ராமதுரை.

அவர் சொன்னதைப் பார்த்தால் உடனே தம் பேரன் ஓடிப்போய் லலி தாவைச் சண்டைக்கு இழுக்க வேண்டு மென்று தூண்டுவது போலிருந்தது.

"தாத்தா! நான் கடற்கரைக்கே போகவில்லை. இங்கேயே இருக்கிறேன்!" என்றான் பிச்சமணி தலையைத் தொங் கப் போட்டுக் கொண்டே.

"போடா பயந்தாங்கொள்ளி! ஒரு பெண்ணுக்காகப் பயந்து கொண்டு கோட்டைக்குள்ளேயே ஒளிந்துகொண் டிருப்பவன் மனுஷனாடா!"

"நான் ஒன்றும் அந்தப் பெண் ணுக்காகப் பயப்படவில்லை!"

"பின்னே என்னடா?"

"எனக்கு வெளியே போகவே பிடிக்கவில்லை!"

"வெளியே போகாமல் ஹோட்டலுக் குள்ளேயே அடைந்து கிடக்க நீயுமென்ன கிழவனா? போடா, போ! கீழே உனக்காக அவர்கள் காத்துக் கொண்டிருக் கிறார்கள்!"

"அவர்கள் என்றால் யார்? இரண்டு பெண்களா?"

"மடப் பயல்! மடப் பயல்!" என்று மேஜர் ராமதுரை தமக்குள்ளே சிரித் துக்கொண்டு விட்டு, "டேய் பையா! உனக்காக லலிதாவும், அவள் அப்பா வும்தான் கீழே ரூமில் காத்துக்கொண் டிருப்பார்கள்! உன்னையும் அவர்க ளோடு அழைத்துக் கொண்டு போய்ப் பத்திரமாகத் திருப்பிக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறேன்!" என்று விளக்கினார்.

அன்றைய தினம் அவருடைய போக்கே பிச்சமணிக்குப் பிடிபட வில்லை. பெண்ணினத்தையே வெறுக் கும் தன் தாத்தா இப்போது மட்டும் ஒரு சின்னப் பெண்ணைப் பெரிது படுத்தித் தனக்குக் காவலாக ஏன் அனுப்புகிறார் என்று சிந்திக்கலானான்.

ஆனால் மேஜர் ராமதுரையைப் பொறுத்தவரையில் அவர் அதைத் திட்டமிட்டே செய்தார். அவர் பெண் வர்க்கத்தையே வெறுப்பவர், தம் பேரன் மீது பெண் வாடையே படாத படி வளர்க்க வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார் என்பதெல்லாம் உண்மைதான்! ஆனால் வாத்தியாரம்மா உமாவைப் பிச்சமணி சுற்றிக் கொண்டு திரிகிறான் என்பது தெரிந்ததும் பணக் காரப் பையனான தம் பேரனை அந்த வாத்தியாரம்மாதான் மாயவலை விரித்து இழுத்து அவனைத் தம்மிடமிருந்து அப கரித்துக் கொள்ள ஏதோ சூழ்ச்சி செய்கிறாள் என்று அவர் கலவரம் அடைந்தார். வாத்தியாரம்மாவின் மாய வலையிலிருந்து தம் பேரனை மீட் பது எப்படி என்றும் சில நாட்களாகவே தீவிரமாகச் சிந்திக்கலானார். உமாவின் மீது பிச்சமணி கொண்டிருப்பது மனப் பூர்வமான காதல்தான் என்று அவர் எண்ணிப் பார்க்கக் கூடத் தயாரா யில்லை. அது தம் பேரனின் முட் டாள்தனமான மனப் பிரமைதான், இளமையின் வெறும் பித்துத்தான் என்றே அவர் எண்ணினார். தம் பேரனை விட வயதில் மூத்தவளான வாத்தி யாரம்மாவின் மாய்மாலத் தந்திரங் களினால்தான் தம் பேரன் அப்படி மயங்கிப் போயிருக்கிறான் என்றும் அவர் வருந்தினார். தீர்த்த யாத்திரை என்ற பெயரில் தம் பேரனைச் சிறிது காலம் வெளியூருக்கு அழைத்துச்



ஒரு பெண் திடீ ரென்று காணாமற் போய் விட்டாள். ஒரு வாலிபன் அவளைக் கொன்று அந்த உடலை எங்கோ மறைத்து விட்டான் என்று அவன் மீது வழக்கு நடந்து கொண்டிருந்தது. அவன் சார்பில் வாதித்த வக்கீல்; விசாரணை நடந்து வந்த அறையின் கதவுப்பக்கம் கையை நீட்டிச் சொன்னார்:

"கொலை செய்யப்பட்டதாகக் கருதப் படும் அந்தப் பெண் யாருடனோ வெளி யில் சென்று விட்டாள் என்று கூறுகி றேன். அவள் இறக்கவில்லை. உயிருடன் இருக்கிறாள் என்று கூறுகிறேன். ஏன் இதோ அவள் இங்கே அறைக்குள் நுழைந்து வருகிறாள் என்று....."

வக்கீல் இப்படிக் கூறிய போது ஜூரர்கள் எல்லாரும் அறை வாசற் பக்கம் பார்த்தார்கள்.

வக்கீல் வெற்றிப் புன்னகையுடன் கூறினார்: "நீங்கள் கொலை செய்யப்பட் டதாகக் கருதப்பட்டவள் வரப் போகி றாள் என்று சந்தேகப்பட்டே அறை வாசற் பக்கம் பார்த்தீர்கள். உங்களுக்கு இது விஷயத்தில் சந்தேகம் தோன்றி விட்டிருப்பதனால் நீங்கள் இது விஷயத் தில் முடிவு சொல்வதற்கில்லை."

வக்கீல் இப்படிக் கூறி உட்கார்ந்த போது குற்றவாளி விடுதலை செய்யப் பட்டு விடுவான் என்று அங்கிருந்தவர்கள் நினைத்தனர். இல்லை. ஜூரர்கள் அவன் கொலை செய்திருப்பான் என்றே அபிப் பிராயம் தெரிவித்தார்கள்....எப்படி?

விடை: ஜூரர்களுள் ஒருவர் குற்றவாளி அறைவாசற் பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை என்பதைக் கவனித்து விட்டார்.

சென்றுவிட்டால் உமாவை அவன் மறந்துவிடுவான் என்று நினைந்து அவனைக் கன்னியாகுமரி முனை வரை அழைத்தும் வந்து விட்டார். பிச்சமணி உற்சாகமாகத் திரிவதைப் பார்க்கும்போது உமாவை அவன் மறந்திருப்பான் என்றும் தோன்றியது. ஆனால் அது மட்டும் போதாது! சென்னைக்குத் திரும்பிய பிறகும் உமாவை அவன் நினைக்காதபடி செய்யவேண்டும் அதற்கு வழி என்ன? இனிப் பெண் வாடையே படாதபடி பிச்சமணியை வைத்திருக்க முயல்வது மதியீனம் என்பது அவருக்குப் புரிந்து விட்டது. பிச்சமணியின் மனத்திலிருந்து உமாவைப் பூரணமாக வெளியேற்றிவிட வேண்டுமென்றும், முள்ளைக் கொண்டுதான் முள்ளை எடுக்க வேண்டும் என்ற பழமொழிப்படி, இன்னொரு பெண்ணைக் கொண்டுதான் அந்தக் காரியத்தைச் செய்தாக வேண்டும் என்று தீர்மானித்தார். அதாவது தீர்த்த யாத்திரை முடிந்து அவர்கள் சென்னைக்குத் திரும்பிப் போவதற்குள் பிச்சமணியின் மனத்தில் வேறொரு பெண்ணைப் புகுத்தி அந்தப் பெண் மீது பிச்சமணிக்குக் காதல் உற்பத்தியாகும்படி செய்துவிட வேண்டும். அந்தப் பெண்ணே தம் பேரனுக்கு வருங்கால மனைவியாகவும், தம் வீட்டில் விளக்கேற்றி வைக்கும் சௌபாக்கிய லட்சுமியாகவும், தம் வம்ச பரம்பரைக்கு வாரிசுகளை வழங்கும் தாயாகவும் விளங்கவேண்டும். இவைகளுக்கெல்லாம் காப்டன் மருதநாயகத்தின் பெண் லலிதாவே பொருத்தமானவள். அவருடைய ராஜ பரம்பரை, ஜாதி, அந்தஸ்து, பட்டாளத்தார் பெருமை அனைத்துக்கும் லலிதாவே இணையானவள். அவள் காலேஜில் படிக்கிற பெண் என்றாலும், அமைதியான நற்பண்புகளும், நல்ல தேகாரோக்கியமும், வாகுசையான உள்ளமும் ஒருங்கே வாய்ந்தவள். குடும்பப் பாங்கும் உள்ளவள். குடும்ப வாழ்க்கையில் அமைதியான போக்கையும், ஆரோக்கியமான குழந்தைச் செல்வங்களையும் அளிப்பாள். பிச்சமணி அசாதாரணமானவன்! அவனுடைய தாயான நாடகக்காரியின் சாகசங்களையும், அவனுடைய தகப்பனின் முட்டாள்தனமான முரட்டுப் பிடிவாதங்களையும் உரித்துக் கொண்டு பிறந்திருப்பவன்! அவனை லலிதாவைப் போன்ற ஒருத்தியால்தான் கட்டியாளவோ, அமைதியான வாழ்க்கையில் பிணைக்கவோ முடியும்! மேலும் அவள் பி. ஏ. படிக்கிறவளாகையால் தன் சாதுரியமான பேச்சின் மூலமே பிச்சமணிக்குப் போதிய கல்வியறிவூட்டி, அமைதியான வாழ்க்கையில் அவனைப் பிணைத்து வைக்க முடியும்! காப்டன் மருதநாயகத்தோடு கலந்து பேசியதில் அவர் தம் பெண்ணைப் பிச்சமணிக்குக் கல்யாணம் செய்து கொடுக்க மனப் பூர்வமாகச் சம்மதித்துவிட்டார். லலிதாவுக்கும் பிச்சமணியைக் கண்டதுமே ஒருவித லயிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், யாரும் கவனிக்காதபோது அவள் பிச்சமணியின் முகத்தைக் குறுகுறுவென்று பார்க்கிறாள்; அவனோடு சிரித்துப் பேசவும், அவனைச் சுற்றி வளைய வளைய வரவுமே உள்ளூற விரும்புகிறாள். சில சமயம் அவள் பிச்சமணியைப் பார்த்துவிட்டு நாணத்தோடு தலை குனிந்து கொள்கிறாள்; சில சமயங்களில் முகமெல்லாம் வியர்த்துக் கொட்ட, நெஞ்சு படபடக்கப் பெருமூச்சு விடுகிறாள். இதையெல்லாம் நன்றாக கவனித்துத் தீவிரமாக யோசித்துத்தான் திட்டம் போட்டார் மருதநாயகம்.

(தொடரும்)


சின்னத்தை படியுங்கள்
MICO
LICENCE BOSCH
FUEL INJECTION PUMP
NOZZLE HOLDER
சிக்கனத்தை சிந்தியுங்கள்!
ஒரிஜினல் மைகோ
பாகங்களை பொருத்துங்கள்
மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட்,
பெங்களூர்.

நீதிமன்ற—பாராளுமன்றப் போர்

துமிலன்

சிவன் உயர்ந்தவரா, மகாவிஷ்ணு உயர்ந்தவரா என்றெல்லாம் இன்றுகூடத் தீவிரமாக வாதம் செய்து வருபவர்கள் நாம். ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களடங்கிய சட்டமன்றம் உயர்ந்ததா, நீதிபதிகளடங்கிய நீதிமன்றம் உயர்ந்ததா என்பதைப் பற்றி இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் தகராறு நமக்கு அவ்வளவு புதுமையானதாகவோ; விந்தையானதாகவோ தோன்றாமலிருக்கக் கூடும். ஆனால், அப்படிப்பட்ட நாம்கூட மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்படும்படியான விளைவுகளைக் கொண்டிருக்கும் இத்தகைய தகராறு ஒன்று பிரிட்டனில் ஏற்பட்டது. அது நிகழ்ந்து கிட்டத்தட்ட ஒன்றே கால் நூற்றாண்டு ஆகிவிட்டது. போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவை பிரிட்டிஷ் உயர் நீதி மன்றமும், 'பார்லிமெண்டுகளின் தாய்' என்படும் பிரிட்டிஷ் பாராளுமன்றமும்.

ஸ்டாக்டேல் என்பவர் பிரிட்டனில் புகழ் பெற்ற ஒரு பிரசாரகர்த்தர். 'ஆண் பெண் துர்நடத்தைகளை ஒழிக்கும்' இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டவர். அவர் 'பிரஜா உற்பத்தி முறை' என்ற தலைப்புடன் ஒரு புத்தகம் வெளியிட்டிருந்தார். பிரிட்டிஷ் சிறைச்சாலை ஒன்றிலுள்ள கைதிகள் சிலர் அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்து அனுபவித்தனர்!

சிறைச்சாலைச் சோதனைக்கு வந்த சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் கண்ணில் அந்தப் புத்தகம் பட்டு விட்டது. அது சிறைக்குள் எப்படி வந்தது என்று அவர் ஆச்சரியப்பட்டார். அதைப் பற்றி விசாரணை செய்ய ஏற்பாடு செய்துவிட்டுப் பிறகு புத்தகத்தைக் கவனித்துப் படிக்கலானார். அவர் வருடந்தோறும் சிறைகளின் நிலைமையைப் பற்றி 'ஹௌஸ் ஆப் காமன்ஸ்' என்ற பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தாக வேண்டும். அந்த அறிக்கையில் அவர் 'ஸ்டாக்டேலின் புத்தகம் மிகவும் அருவருக்கத் தக்க விஷயங்களையும், ஆபாசமான படங்களையும் கொண்டது' என்று குறிப்பிட்டிருந்தார். பாராளுமன்றம், அந்த அறிக்கையை அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்தது.

நமது ராஜ்யங்களிலுள்ள சட்ட சபைகளின் நடவடிக்கைகள், அந்தந்த ராஜ்ய அரசாங்க அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டு அந்தந்த ராஜ்ய கெஜட்டுகளில் வெளியாகின்றன. டெல்லி சபைகளின் நடவடிக்கைகளும் அப்படித்தான் அரசாங்க அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டு கெஜட்டில் வெளியாகின்றன. பிரிட்டனில் அப்படி நடக்கவில்லை. ஹான்ஸர்ட் என்ற குடும்பத்தினர் நடத்தி வந்த அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு, 'ஹான்ஸர்ட்' என்ற பெயருடன் வெளியாயிற்று. பிறகு லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை அந்த வேலையை ஏற்றுக் கொண்டது. சென்ற நூற்பது வருட காலமாகத்தான் பிரிட்டிஷ் பாராளுமன்றமே சொந்தத்தில் அச்சிட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த நடவடிக்கைகள் கொண்ட பிரசுரத்துக்கு இன்னும் 'ஹான்ஸர்ட்' என்ற பெயர்தான்!

இப்படிப் புகழ் பெற்ற ஹான்ஸர்ட் காரியாலயம்தான் சிறை நிர்வாகம் சம்பந்தப்பட்ட அறிக்கையை அச்சிட்டு வெளியிட்டது.

அறிக்கையில் தமது புத்தகத்தைப் பற்றிக் கூறப்பட்டிருந்த அபிப்பிராயங்கள், தமது கௌரவத்தைப் பெரிதும் பாதிப்பதாகவும் தாம் ஒரு பிரசாரகர்த்தர் என்ற முறையில் இழுக்கு விளைவிப்பதாகவும் ஸ்டாக்டேல் கருதினார். அவர் பெரிய வம்புக்காரர். மான நஷ்ட வழக்குகள் தொடுப்பதென்பது அவரது குடும்பத்தோடு பிறந்தது. அவர் வழக்குத் தொடுக்க விரும்பினார்.

ஆனால், யார் மீது தொடுப்பது? பாராளுமன்றத்தின் மீதா? அல்லது அறிக்கையை எழுதிய சிறை அதிகாரி மீதா? இரண்டும் சரியானதாக அவருக்குத் தோன்றவில்லை. கடைசியில், அறிக்கை வெளியிட்டதில் தொடர்புள்ள, அதை அச்சடித்தவர்களான ஹான்ஸர்ட் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீது மான நஷ்ட வழக்குத் தொடுத்தார்.

பாராளுமன்றத்தின் உத்தரவுக்கிணங்கியே ஹான்ஸர்ட் குடும்பத்தார் அறிக்கையை அச்சிட்டதால், அவர்களை ஆதரிக்கும் பொறுப்பை அந்த மன்றமே ஏற்றுக்கொண்டது. அவர்கள் சார்பில், அட்டர்னி ஜெனரல் ஸர் ஜான் காம்பெல்லே ஆஜராகும்படி செய்தது.

புத்தகத்தைப் பற்றி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அபிப்பிராயங்கள் சரியானவை என்று ஜூரர்கள் அபிப்பிராயப்படவே, வழக்குத் தள்ளப்பட்டு விட்டது. ஆனால், வாதங்களின்போது அட்டர்னி ஜெனரல் ஒரு பிரச்னையைக் கிளப்பிவிட்டார்! பாராளுமன்றத்தில் விவாதம் நடக்கும்போது அங்கே எதைப் பற்றியும், எது வேண்டுமானாலும் பேச அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு. அந்த மன்றம் தான் இஷ்டப்பட்டதை அச்சிட்டு வெளியிடலாம். தவிர பாராளுமன்றம் சில விஷயங்களில் சட்டத்துக்குப் புறம்பானது. தனக்கு என்னென்ன உரிமைகள் உண்டென்று நிர்ணயிக்கும் உரிமையே அதற்கு உண்டு. அறிக்கை அதன் உத்தரவு மீது பிரசுரிக்கப்பட்டதால், நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்ற பேச்சே எழுவதற்கில்லை என்று பொருள்படக் கூறினார்.

வழக்கை விசாரித்த பிரதம நீதிபதி டென்மன் பிரபு இந்த அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. 'ஒரு தனிப்பட்ட நபர் மீது அவதூறான விஷயங்களைப் பிரசுரிக்கும்படி

தனது ஊழியர்களுக்கு உத்தரவிடும் உரிமை இந்த நாட்டில் யாருக்கும் கிடையாது' என்று தமது தீர்ப்பிலேயே கூறினர்.

இதிலிருந்து நீதிமன்றத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் போராட்டம் ஆரம்பித்தது.

ஸ்டாக்டேலுக்கு விரோதிகளான பல புத்தக விற்பனையாளர்கள், அவரது புத்தகங்களை ஆபாசமானவை என்றும், 'பிரஜா உற்பத்தி' என்பது மகா மோசமானதென்றும் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்து அரசாங்கத்துக்குக் கடிதங்கள் எழுதி அனுப்பினர்கள். பாராளுமன்றம் இந்தக் கடிதங்களையெல்லாம் சேர்த்துப் புத்தகமாக வெளியிட ஏற்பாடு செய்தது. இதை அச்சிட்டதும் ஹான்ஸர்ட் காரியாலயந்தான்.

ஸ்டாக்டேல் சும்மா இருப்பாரா? 5000 பவுன்கள் நஷ்ட ஈடு கோரி அதன் மீது மான நஷ்ட வழக்குத் தொடுத்தார்.

பாராளுமன்றம் யுத்த சந்நத்துடன் கிளம்பியது. அட்டர்னி ஜெனரல், ஸொலிஸிட்டர் ஜெனரல் முதலிய ஆறு பேர்களை ஹான்ஸர்ட் சார்பாக வழக்கு நடத்த அமர்த்தியது. அது அத்துடன் நிற்கவில்லை. ''பாராளுமன்றத்தின் உரிமைகள் என்ன என்று விவாதிக்கவோ நிர்ணயிக்கவோ செய்யும் வழக்குத் தொடுப்பவர்கள், வழக்கை விசாரிப்பவர்கள் எல்லோருமே தண்டனைக்குட்படக் கூடியவர்கள்'' என்ற முறையில் தீர்மானம் நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானம் தங்களைப் பயமுறுத்துவதாகுமென்று நீதிபதிகள் கருதினர்.

வழக்கு நடைபெற்றது. அட்டர்னி ஜெனரல் ஸர் ஜான் காம்பெல் மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல் வாதித்து, பாராளுமன்றத்தின் உரிமைகளை எடுத்துக் கூறினர். ஆனல் நீதிபதிகள் அசைந்து கொடுக்கவில்லை. பாராளுமன்றத்துக்கு அசாதாரணமான அதிகாரங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஹான்ஸர்ட் ஸ்டாக்டேலுக்கு 100 பவுன்கள் நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புக் கூறினர்கள். அந்தத் தொகையை ஹான்ஸர்ட் காரியாலயம் ஆட்சேபம் எதுவும் செய்யாமல் கொடுத்துவிட்டது.

விஷயம் இத்துடன் முடிந்து போயிருக்க வேண்டும். ஆனல் ஹான்ஸர்ட், 'கடிதங்கள்' அடங்கிய புத்தகத்தின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டது.

அது அப்படி ஏதாவது செய்ய வேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக்கொண்டிருந்தவர் போல, ஸ்டாக்டேல் இன்னொரு மான நஷ்ட வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கும் அவருக்குச் சாதகமாகவே முடிந்தது. ஹான்ஸர்ட், 600 பவுன்கள் மான நஷ்டத் தொகை கொடுக்க வேண்டுமென்று நீதிபதிகள் தீர்ப்புக் கூறினர்கள்.

இதிலிருந்து நீதிமன்றத்துக்கும் பாராளுமன்றத்துக்குமிடையே ஆரம்பித்த போராட்டம் தீவிரமாயிற்று. சிக்கலான, மிகவும் வேடிக்கையான சம்பவங்கள் நடைபெற்றன.

600 பவுன் மான நஷ்ட ஈடுத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்ற நீதி மன்ற உத்தரவு வந்தபோது, ஹான்ஸர்ட் அத்தொகையைக் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டது. அப்படிச் செய்யும்படி பாராளுமன்றம்தான் அதற்கு யோசனை கூறியிருந்தது.

ஆகவே, அந்தத் தொகையை வசூலிக்க நீதிமன்றம் சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்தது.

நடவடிக்கைகள் என்றால் ஹான்ஸர்ட் குடும்பத்தினருக்குச் சொந்தமான சாமான்களை ஜப்தி செய்வதுதான்.

பிரிட்டனில் இந்த ஜப்தி செய்யும் வேலையை 'ஷெரிப்' என்ற அதிகாரி கவனித்து வந்தார். மிடில்ஸெக்ஸ் என்ற ஜில்லாவைச் சேர்ந்த இரண்டு ஷெரிப்களின் தலையில் அந்தப் பொறுப்பு விழுந்தது.

நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி ஹான்ஸருக்குச் சொந்தமான சாமான்களை ஜப்தி செய்தால் அது பாராளுமன்றத்தை அவமதிப்பதாகும். 'டிகிரி'யை நிறைவேற்றவிட்டாலோ அது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும். அத்துடன் மேலதிகாரிகளின் உத்தரவுப்படி நடக்காத குற்றமுமாகும்.

ஷெரிப்களுக்கு இரண்டுக்குள் ஏதாவதொன்று செய்தாகவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, அவர்கள் அமீனுக்களை ஹான்ஸர்ட் காரியாலயத்துக்கு அனுப்பி நஷ்டஈட்டுத் தொகைக்குப் போதுமான சொத்துக்களை ஜப்தி செய்து வரச் செய்தனர். பிறகு அவற்றை ஏலம் போட்டதில் 600 பவுன்கள் கிடைத்தன.

இந்த அறுநூறு பவுன்களையும் ஹான்ஸர்டிடமே தந்துவிடும்படி பாராளுமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தின் உத்தரவுக்கிணங்க ஸார்ஜெண்ட் அட் ஆர்ம்ஸ் என்ற பாராளுமன்ற அதிகாரி இரண்டு ஷெரிப்களையும் சிறைப்படுத்தினர்.

சட்டத்தில் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' என்று ஒரு விதி உண்டு. இதன்படி விசாரணையின்றிக் கைது செய்யப்பட்டிருப்பவர்களையும் சிறையிலிருக்கப்பட்டிருப்பவர்களையும் நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன் ஆஜர் செய்விக்கும்படி வழக்குத் தொடுக்கலாம். ஷெரிப்கள் அதுபோன்று பாராளுமன்றத்தின் ஸார்ஜெண்ட் மீது ஹேபியஸ் கார்ப்பஸ் வழக்குத் தொடுத்தார்கள்.

நீதிமன்றம், ஷெரிப்கள் விஷயத்தில் இரக்கம் கொண்டிருந்தது. பாராளுமன்றத்துக்கு ஒரு பாடப்பினை கற்பிக்கத் துடித்துக் கொண்டிருந்தது. ஆகவே, நீதி மன்றம் அந்த மனுவை ஏற்று ஷெரிப்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்று ஸார்ஜெண்டுக்கு உத்தரவு பிறப்பிக்கும் என்றே எல்லோரும் எதிர்பார்த்திருந்தார்கள்.

ஆனல், நீதிமன்றம் இந்த மனுவை நிராகரித்துவிட்டது.

பாராளுமன்றத்தை அவமதிக்கும் ஒருவரைக் கைது செய்யச் செய்து சிறைப்படுத்தும் உரிமை பாராளுமன்றத்துக்கு உண்டு என்பதை பிரிட்டிஷ் நீதி மன்றம் முந்தைய வழக்கு ஒன்றில் ஒப்புக் கொண்டிருந்தது. ஆகவே, அது இப்போது தனது பழைய தீர்ப்புக்கு விரோதமாக நடந்து கொள்ள முடியாத சங்கடமான நிலைமையிலிருந்தது.

நீதிமன்றம் தனது ஊழியர்களான, தனது உத்தரவுப்படி நடந்து கொண்ட ஷெரிப்களுக்குச் சட்டப்படி உதவி செய்ய முடியாமலிருக்கலாம். ஆனால் தொந்தரவு விளைவிக்காதிருந்திருக்கலாமல்லவா? ஷெரிப்கள் தாங்கள் வசூலித்த 600 பவுன்களை ஸ்டாக்டேலிடம் கொடுக்காதது நீதிமன்றத்தை அவமதிப்பதாகுமென்று கூறி, அவர்களிருவரையும் கைது செய்ய உத்தரவிட்டது!


ஆனால், அவர்கள்தாம் ஏற்கனவே பாராளுமன்றம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையால் சிறையிலிருந்து கொண்டிருக்கிறார்களே!

ஸ்டாக்டேல், தமக்கு நஷ்டஈட்டுத் தொகை கொடுபடாததற்காக ஹான்ஸார்ட் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முயற்சி செய்தார். இதற்காக அவரும், அவரது வக்கீலும், வக்கீல் குமாஸ்தாக்களும் பாராளுமன்றத்தினால் சிறைப்படுத்தப்பட்டனர். தனது ஊழியரான ஹான்ஸார்ட் குடும்பத்தினர்மீது எடுத்துக் கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும் தன்னை அவமதிப்பதாகும் என்பது அதனது விசித்திர வாதமாகும்.


அது அத்துடன் நிற்கவில்லை. ஹான்ஸார்ட் மீது வேறு வழக்குகள் தொடரப்படாதிருப்பதற்காக அவசரம் அவசரமாக ஒரு மசோதா கொண்டு வந்து அதை நிறைவேற்றிக் கொண்டது. அதன்படி பாராளுமன்றத்தின் உத்தரவுக்கிணங்கப் பிரசுரிக்கப்படும் எது சம்பந்தமாகவும் மான நஷ்ட வழக்குத் தொடருவதற்கில்லை.

துரதிருஷ்டசாலிகளான இரண்டு ஷெரிப்களும் சிறையில் வாடினர். அவர்களிருவருக்கும் உடல் நலம் குன்றி உயிருக்கு ஆபத்து ஏற்படும் போலிருந்தபோதுதான் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். நீதிமன்றத்துக்கும் பாராளுமன்றத்துக்குமிடையே ஏற்பட்ட அதிகாரப் பலப் பரீட்சையில் இரண்டு நிரபராதிகள் ஆபத்திற்காளாக நேர்ந்தது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு இத்தகைய பிரச்னை இன்றுவரை அங்கே நிகழவில்லை.'




நீங்கள் வாங்குகிறீர்கள்....
ஆயுட்காலம் முழுவதும்
கவலையற்ற தையல்
ஆயுட்கால
ஸிங்கர்* சேவை
ஒவ்வொரு
மெர்ரிட்*
தையல் மெஷினுடனும்





ஸிமேக்
ஆர்ட்நிட்டர்
ஆடொமாடிக் கைநிட்டிங் மெஷின்கள்



மெர்ரிட்
டேபிள், ஸீலிங்க
மின் விசிறிகள்



மெர்ரிட்
மின்சார
இஸ்திரிப் பெட்டி

* ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட்மார்க்

SS. G. 9 TAM

தலைமை ஆசிரியர் ராமண்ணாவுக்கு வயிற்றைப் பற்றி எரிந்தது. பின் என்ன? ஒரு மணி நேரமாகத் தொண்டைத் தண்ணீர் வற்றும்படி கரடியாகக் கத்தியும், கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் படித்துப் படித்துக் கூறியும் ஓர் அக்ஷரம்கூட மூளையில் ஏற்றிக்கொள்ளாமல் நிர்மலனாக எதிரில் உட்கார்ந்திருக்கும் புத்திரசிகாமணி வேணுவைப் பார்க்கும்போது அவரது பெற்ற வயிறு பற்றி எரியாமல் 'கூல் ட்ரிங்க்' குடித்த மாதிரியாகவா இருக்கும்?

'இருக்கிற சீரிலைப் பார்த்தால் இந்த ஏழாம் வகுப்பை விட்டு நகர மாட்டான் போலிருக்கிறதே' என்று எண்ணும்போதே அவமானத்தால் அவர் தேகம் குன்றியது. ஊரில் உடனொத்த பிள்ளைகள் கூடை கூடையாக மார்க் வாங்கி மணி மணியாகப் பாஸ் செய்து அனாயாசமாக முன்னுக்கு வந்து கொண்டிருக்கும்போது தமக்கென்று ரத்தினமாய் இப்படியொரு பிள்ளை பிறந்திருப்பதை எண்ணி ஏங்காமலிருக்க முடியவில்லை அவரால்.

அவர் மனம் வைத்தால் வேணுவை எட்டாவது வகுப்புக்கு மாற்றி விடுவது ஒரு பெரிய காரியமல்ல! தலைமை ஆசிரியரின் மகன் என்ற ஒரே சலுகையின் முன் அவனது ஓர் இலக்க மார்க்குகளை நன்கு மூடி மறைத்துவிட அவரால் முடியும். ஆனால், நேர்மை என்ற ராஜபாட்டையிலேயே சென்று பழக்கப் பட்டிருந்தவராகையால் அவர் மூளையில் இந்தக் குறுக்குவழி யோசனையே உதிக்கவில்லை.



தகப்பன்சாமி

மங்களம் ஜெயராமன்.

பரீட்சை நெருங்க நெருங்க ராமண்ணாவின் கவலையும் அதிகரித்துக் கொண்டே வந்தது. பள்ளி நேரங்கள் தவிர மற்ற வேளைகளிலும் வீட்டில் வேணுவை இழுத்து உட்கார்த்திவைத்துத் தாமே பாடங்களைப் போதிக்கத் தொடங்கி இருந்தார். பொறுமையைப் பொதுவாக வைத்துக் கொண்டுதான் அவரும் பாடம் சொல்ல ஆரம்பிப்பார். ஆனால் வேணுவின் மட்டித்தனத்தின் முன் அவர் பொறுமை யெல்லாம் பஞ்சாகப் பறந்து அப்படியே அவன் மென்னியை முறித்துப் போட்டுவிடலாம் போன்றதொரு வெறி வந்து அவரை மிருகமாக்கிவிடும். அவ்வளவுதான் — பேயறைவது போல் அவனைப் பிய்த்து எறிந்துவிடுவார். ஏமாற்றத்தில் பிறந்த அவரது சீற்றத்தின் முன் வேணுவின் அபயக் குரல் சற்றும் எடுபடாது மங்கி மறைந்துவிடும்.

இப்படியாகத் தலைமை ஆசிரியர் ராமண்ணாவின் தினசரி அலுவல்களில் முக்கியமானதோர் இடம் பெற்றுவிட்டது இந்த நிகழ்ச்சி.

நாளை மறுநாள் பரீட்சை.

அன்று காலை முதல் வேணுவுக்குத் தந்தையை நிமிர்ந்து நோக்கவே அச்சமாக இருந்தது. அவர் முகத்தில் வெடித்த எள்ளும் கொள்ளும் அவனைப் பதுங்க வைத்தன.

''ஏ, வேணு! பாடப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வா, இப்படி!''

பலிபீடத்தை நெருங்கும் ஆடு போல் வேணு புத்தகங்களை அணைத்துக்கொண்டு தந்தையின் எதிரில் வந்தமர்ந்தான்.

''முதலில் இந்தக் கணக்கைப் போடு! 12 — சதம் வட்டி விகிதத்தில் ரூ. 4500க்கு ஒரு வருடம் ஒன்பது மாதங்களுக்கு வட்டி எவ்வளவு?''

நோட்டுப்புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு கையிலிருந்த பென்சிலின் உதவியால் சரியான விடையை வரவழைக்க முயன்று கொண்டிருந்தான் வேணு.

ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டன. வேணுவுக்கு வெற்றி கிடைக்கவில்லை. போராடிக் கொண்டிருந்தான்.

''ஹூம்! இன்னுமா போட்டாகவில்லை?'' உறுமினார் ராமண்ணா!

மெள்ளத் தலையைத் தூக்கிப் பரிதாப மாகத் தகப்பனாரைப் பார்த்தான் வேணு. அவர் பார்வையிலிருந்த உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் கூசின அவன் கண்கள்.

'வெடுக்'கென்று பறிக்கப்பட்டது அவன் கையிலிருந்த நோட்டுப் புத்தகம்.

வேணுவின் உள்ளத்தில் ஒட்டிக் கொண் டிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் அத னுடனேயே பிடுங்கப்பட்டு விட்டது.

ராமண்ணாவின் கண்கள் மகனின் கை வண்ணத்தில் வேகமாக ஓடின. கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்துக் கொலை செய் திருந்தான் வேணு அந்தக் கணக்கை! அவ் வளவுதான்! பொங்கி எழுந்து ருத்ரமூர்த்தி யாகிவிட்டார் தலைமை ஆசிரியர் ராமண்ணா!

தப, தபவென்று ஒரே சத்தம்! அதைத் தொடர்ந்து வேணுவின் அலறல்! கண் மூக்குத் தெரியாமல் போட்டு வாங்கு வாங் கென்று வாங்கித் தள்ளிவிட்டார் அவர் ஆத்திரம் தீர!

அந்த வேகத்திலேயே வயிற்றுக்குக் கூடச் சரியாகப் போட்டுக் கொள்ளாமல் டர்பீனை யும், அங்கவஸ் திரத்தையும் அள்ளிப் போட் டுக் கொண்டு பள்ளிக்கூடம் போய்ச்சேர்ந்து விட்டார் தலை மையாசிரியர்.



ஒருவர் முகத்திலும் விழிக்கப் பிடிக்கவில்லை அவருக்கு! நேராகத் தம் அறைக்குச் சென்று மின்விசிறியைச் சுழலவிட்டு விட்டு, நாற்காலி யில் சாய்ந்தவர்தான்! நாற்பது நிமிடங்களுக் குப் பின் அவரது பியூன் சாமிக்கண்ணு மெது வாக அந்த அறையின் ஸ்பிரிங் கதவைத் திறந்து கொண்டு மெல்ல எட்டிப் பார்க்கும் வரை அவர் இந்த உலகத்திலேயே இல்லை.

தலையைச் சொறிந்துகொண்டு எதிரில் நின்றான் சாமிக்கண்ணு.

''என்னடா, என்ன?''

''ஒண்ணுமில்லீங்க... ஒரு அஞ்சு ரூவா கைமாத்தாக் கேக்கலாமின்னு.... மொதத் தேதி சம்பளத்திலே 'கரெக்டா' கழிச்சுக் கிடுங்க.... அரிசி வாங்கப் பணமில்லே... இன்னும் ஒரு நாள் தள்ளியாகணும்...''

''போடா, போ! என்னாலே அதெல்லாம் ஒன்றும் இப்போது முடியாது; சும்மா தொந்தரவு பண்ணாதே! உங்களுக்கெல்லாம் ஒரு தடவை மனசு இரங்கி உதவி பண்ணி னால் பிறகு அதே வழக்கமாக மாதா மாதம் கேட்க ஆரம்பித்து விடுவீங்க!''

முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு திரும்பி விட்டான் சாமிக்கண்ணு.

ராமண்ணாவுக்குத் தெரியும் அவன் யோக்கியன் என்று. இதுநாள்வரை காலணா வாயைத் திறந்து கேட்டவனில்லை. அவனும் பத்து வருடங்களாக அவருடன் பழகி வருகிறான். இன்று என்ன முடையோ, பாவம் வெட்கத்தை விட் டுக் கேட்கிறான்; பேசாமல்பர்ஸைத் திறந்து கொடுத்தி ருக்கலாம். ஒரு கணம் நியாயம் அவர் மனத்துக்குப் பட்டாலும், மறு நிமிடமே அவன் மீது இனந் தெரி



யாத ஒரு பொருமை அவர் உள்ளத்தில் தோன்றி நியாயத்தைத் தலை குப்புறத் தள்ளிவிட்டுத் தாம் செய்ததே சரியென்று சாதித்தது.

'இந்தச் சாமிக்கண்ணுவின் பிள்ளை முத்து. வேணுவின் வகுப்பில்தான் படிக்கி றான். முத்து என்று சொன்னால் போதுமா? நல்முத்தல்லவா அவன்! எல்லாவற்றிலும் முதல் மார்க்கு! சாமிக்கண்ணுவின் மகன் முத்து என்றால் பள்ளியில் யாருக்கும் தெரியுமே — அப்படிப்பட்ட சூரப்புலி அவன்! நமக்கும் வந்து பிறந்திருக்கிறதே, தம்முடைய பெயரைக் கெடுக்க!'

நினைக்க நினைக்க நெஞ்சை அடைத் தது அவருக்கு!

அன்று இடைவேளை மணியடித்த பிறகும் கூட அவர் மனம் சமாதான மடையவில்லை. சிற்றுண்டிப் பொட்டலத்தைப் பிரித்து கண்

லையும் அவருக்கு நாட்டம் ஏற்படவில்லை. ஒதுக்கித் தள்ள முடியாத உணர்ச்சிக் குவியல்கள் நிறைந்த உள்ளத்தைச் சுமந்துசென்ற அவரது பாதங்கள் வழி நெடுகிலும் குவிந்திருந்த சருகுகளை ஒதுக்கிக்கொண்டு தம் போக்கில் சென்று கொண்டிருந்தன. 'சட்' டென்று அவரது நினைவோட்டம் தடைப்பட்டது. முதுக்குப்புறமான அந்த இடத்தில் நிம்மதியைத் தேடி வந்த அவரது செவிகளில் எதிர்பாராத விதமாகப் பேச்சுக் குரல் விழவே, அவர் நடை சற்றுப் பின்வாங்கியது. ஒரு நிமிஷம் நிதானித்த பிறகே அவருக்குப் புரிந்தது — தம் சிந்தனையின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த வேணுவும் முத்துவுமே மரத்தடியில் உட்கார்ந்து சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று!

அந்த இடத்தில் அவர்களைக் காண அவருக்குச் சற்று ஆச்சரியமாகவே இருந்தது. 'இவர்கள் இருவருக்கும் எந்த விதத்தில் சிநேகம் ஏற்பட்டிருக்க முடியும்?'



படிப்பினால் சிநேகம் ஏற்பட்டிருக்க முடியும் என்று எண்ணவோ இடமில்லை. முத்து முதல் மாணவன்; வேணுவோ கடை மாணவன். அந்தஸ்திலோ வேணு தலைமை ஆசிரியரின் மகன். முத்துவோ ப்யூன் சாமிக்கண்ணுவின் மகன். எந்தவிதத்திலும் பொருத்தமில்லையே என்று நினைத்துக் கொண்டார் தம் மனத்துக்குள்.

எனினும் அவர் உந்தித்தள்ள மறைவிருந்து கொண்டே அவர்களின் உரையாடலைக் கவனிக்க ஆரம்பித்தார்.

''ஏன்டா, வேணு! ஒரு வாய்கூட நீ சாப்பிடாமல் அவ்வளவும் எனக்கே கொடுத்திட்டயேடா! உங்க வீட்டிலே திட்ட மாட்டாங்களா? திட்டாமப் போனாலும் உன் வயிறு பசிக்காதாடா?''

''அட சரிதான்டா, என்னவோ பெரிய இது பண்ணிக்கிறே! காலமே பள்ளிக்கூடத்துக்குப் புறப்படுவதற்கு முன்னால், வயிறு முட்டத் தோசை சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன். மத்தியானம் ஒருவேளை சாப்பிடாமல் போனால் ஒன்னும் குடி முழுகிப் போய்விடாது! நான்தான் ஒரு மக்காச்சேடா! எப்படியும் நான் இதே வகுப்பிலே தானேடா இருக்கப் போறேன். நீ அப்படியா? காலையிலே வகுப்பில் வியாசம் எழுதும்போது உனக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிக் கையெல்லாம் நடுங்கினபோது, 'ஏன்டா உனக்கு உடம்புக்கு என்ன' ன்னு கேட்ட பிறகுதானே புரிஞ்சுது, உங்க வீட்டிலே இரண்டு நாட்களாக அடுப்பே புகையவில்லை, அரிசி வாங்கத் துட்டு இல்லை என்கிற விஷயம். அதுகூட நான் உனக்குப் பக்கத்திலே உட்கார்ந்திருந்ததனால் விஷயம் இவ்வளவு தூரம் வெளியே வந்தது. இல்லாதபோனால், நீயாவது வாயைத் திறந்து சொல்லுகிறதாவது! சரி சரி, நேரமாகுது! யாராவது வந்து நிற்கப் போறாங்க!''

முத்துவின் கண்கள் நன்றிப் பெருக்கால் நிறைந்து நின்றன. நண்பனின் அன்பளிப்பை அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்டு பசியாறினான் அந்த ஏழை. வேணுவின் மன நிறைவை, அவன் முத்துவைப் பார்த்த பார்வையே பறை சாற்றி விட்டது.

இந்த இன்பமான காட்சியைக் கண்ட ராமண்ணாவுக்கு உடல் புல்லரித்தது.

அது நடு உச்சிவேளை. வெயில் தகித்துக் கொண்டிருந்தது. ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் வியர்வை கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால் தலைமையாசிரியருக்கோ உச்சந் தலையில் ஐஸ்கட்டி வைத்தாற்போல் உள்ளம் குளிர்ந்திருந்தது.

'இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையுள்ள பிள்ளைகளின் அறிவை வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு ஒரு ஸ்தாபனத்தையே நடத்தி வரும் எனக்கு ஒரு சில நிமிடங்களில் இந்தப் புனிதமான செய்கையின் மூலம் அறிவின் அடிப்படையான மனிதத் தன்மையையே அல்லவா புகட்டி விட்டான் வேணு! ஆம்! பள்ளிப் படிப்பினால் மட்டும் அடைந்துவிட முடியாத ஒரு பெரிய லட்சியம் அது! வேணுவிடம் அது நிறைந்து கிடக்கும்போது அவனை ஒரு அவமானச் சின்னமாகக் கருதியது எவ்வளவு பெரிய தவறு?' — வந்த சுவடு தெரியாமல் தம் அறைக்குத் திரும்பிச் சென்ற தலைமை ஆசிரியர் ராமண்ணா செய்த முதல் வேலை சாமிக்கண்ணுவை அழைக்கக் 'காலிங் பெல்'லை அழுத்தியதுதான்!

பிலிப்ஸ்

தொடக்கத்தி
லிருந்தேயுள்ள

மில்க் ஆப்

மக்னீஷியா



குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற, மிகச் சிறந்த அமிலநாசினியும் பேதி மருந்தும் ஆகும்



கோடிக்கணக்கானவர்கள் இந்த நம்பகமான முறையில் சுகம் காணுகின்றனர்

தொடக்கத்திலிருந்தேயுள்ளதும் உண்மையானதுமான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷ்யா, உலகெங்கும் கோடிக்கணக்கானவர்கள் தெரிந்து உபயோகித்து வரும் ஒன்றாகும். மலச்சிக்கல் அஜீரணமுண்டாகும் கஷ்டங்கள் இவைகளிலிருந்து நிவாரணம்பெற மில்க் ஆப் மக்னீஷ்யாவைப் போல் வேறில்லை. குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற பேதி மருந்து! பிலிப்ஸ்!

உபயோகத்திற்காக ரஜிஸ்தர் செய்து தயாரிப்பவர்கள்
ஜேம்ஸ் கெமிகல் ஸ்டோர்ஸ் (மதராஸ்) பிரைவேட் லிட்.,

வரிப்பளுவின் வேதனை

[கல்கி 9-4-64 இதழில் தண்ணீர்ப் பாலும் தண்டனையும் என்ற கடித தலையங்கம் வெளியாகியிருக்கிறது. அதிலுள்ள கருத்தை ஸ்ரீமதி லலிதா பரமேசுவரனின் இந்தக் கடிதமும் பிரதிபலிப்பதைக் காண்கிறோம். —ஆசிரியர்]

வரிகள் ஏற ஏற விலைவாசிகள் — அதுவும் நகரிலிருந்து வெகு தொலைவில் 'என் ஏது' என்று கேட்காத இடங்களில் கூட இமயம் போல் வளர்ந்தோங்கியிருக்கிறது. ஆனால் பாமர மக்கள் — பால், நெய் போன்ற பண்டங்கள் விற்று ஜீவித்து வருபவர்கள் மட்டும் விலைகளை ஏற்ற முடிவதில்லை! பாவம்!

மூன்று ஆண்டுகள் முன்பு நாங்கள் இங்கு வந்தோம். இங்கிருந்து பத்து மைல் தொலைவிலிருந்து கால் நடையாக (வண்டி வைத்துக் கட்டாது. தனியார் நிலம் ஆதலால் பஸ் போக்குவரத்தும் கிடையாது.) பால், நெய், சில வேளைகளில் கறி காய்கள் கொண்டு வருவார்கள். நான் இங்கு வந்ததிலிருந்து இன்றுவரை கலப்படம் இல்லாத சுத்தமான நெய் சேர் (கானர் இரண்டு பவுண்டு) ஆறு ரூபாய் என்று வாங்கி வருகிறேன். வெயிற் காலத்தில், கூரவை குறைத்துவிடும். ஆனால் இங்குள்ளோர் பாலைச் சேர் அரை எட்டணா (அரைப் படி) வீதம்தான் வாங்குவார்கள்.

நெய்க்காவது விலை ஏற்றலாம். கவடு சூது அறியாத கிராம மக்கள் அதில் கலப்படம் செய்வதில்லை. இங்குள்ளோர் அதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். யாராவது துணிந்து விலை ஏற்றினால் அவர்களையும் தடுத்துவிடுவார்கள். எப்படியாவது பொருள் விற்போனால் போதும் என்று வந்த விலைக்குத் தள்ளிவிடுகிறார்கள். வரிப் பளுவினால் எல்லாம் விலை ஏறும்போது, வைக்கோல், கொள்ளு இவை மட்டும் ஏறாதா? அப்போது பால் நெய் இவைகளுக்கும் விலை ஏற்றினால் தானே இந்த ஏழைகளுக்குக் கட்டுபடியாகும்? அது செய்ய முடிவதில்லையே. இந்தச் சின்னஞ் சிறிய இடத்திலேயே அதிகார பலத்தினால் ஏழைகள் கசக்கிப் பிழியப்படும்போது பெரிய வட்டாரங்களில் எவ்வளவு சிரமப்படுகின்றனரோ?

அமெரிக்கா ஐசுவரியம் கொழிக்கும் நாடு என்பதை நாம் அறிவோம். பிரபல நாவலாசிரியர் எர்னஸ்ட் ஹெமிங்வே இறந்த பின்னர் ஓர் அரிய விஷயம் தெரிய வந்தது. அவர் ஏராளமான புத்தகங்கள் எழுதி வைத்திருந்தார். அவை யாவும் பிரசுரிக்கப்படவேயில்லையாம். அதற்கான காரணத்தையும் அவர் ஒரு கடிதத்தில் எழுதி வைத்திருந்தாராம். அந்தப் புத்தகங்கள் அவரது ''பாங்க் பாலன்ஸாம்''. அவைகளைப் பிரசுரித்தால் அவைகளின்மூலம் வரும் வருமானத்திலிருந்து கிட்டத்தட்ட 90 சத விகிதம் வருமான வரியாகப் போய் விடுமாம். அதற்காகவே அஞ்சி அவர் தமது புத்தகங்களைப் பிரசுரிக்க எத்தனையோ பிரசுரகர்த்தர்கள் அனுமதியும் இட்டவட்டமாக மறுத்து விட்டாராம்!

ஐசுவரியம் கொழிக்கும் நாட்டிலேயே இந்த நிலைமை! நம் நாடு ஏழை நாடு. வரிப் பளுவை ஏழை இந்தியாவால் தாங்க முடியுமா என்று யோசிக்கவேண்டியது அவசியம்.

ஜாகராகண்டு, ம.பி.

7-4-64 லலிதா பரமேசுவரன்

இதோ கருவி!

கல்கி 8-3-64 இதழில் 'நடப்பவைதான் நம்புங்கள்' என்ற பகுதியில் திரு ஜாலவதம் நூதனமானதும், நவீனமானதுமான இயந்திரங்கள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு இறுதியில் ''...என்னவெல்லாமோ கண்டு பிடிக்கிறார்களே... பால் தேக்கஷர் எலெக்ட்ரானிக் ப்ராஷ் உருவாக்கக்கூடாதோ?'' என்று கேட்டிருந்தார்.

அத்தகைய ஒரு கருவியை எங்களுடைய ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனியின் அமெரிக்கத் தலைமை ஸ்தாபனம் ஏற்கனவே தயாரித்து வருகிறது! இந்தக் கருவி இயங்கும் டெக்னிக்கைப் பற்றிய முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் எங்கள் கம்பெனியின் சென்னை, பங்களூர், பம்பாய், டில்லி, கல்கத்தா, ஆமதாபாத், லக்னோ கிளைக் காரியாலயங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

பம்பாய்,

3-4-64 வி. பி. ராய்

கிரிக்கெட்டும் கம்பனும்!

காரைக்குடியில் நடந்த கம்பன் விழாவில் நூற்றுக் கணக்கான தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் — இவ்வாண்டு.

இதனை வானொலி நிலையத்தார் ஒலிப்பதிவு செய்து அடுத்தடுத்த நாட்களில் ஒலிபரப்பினார்கள். ஒலிபரப்பிய வானொலி நிலையத்தார் பெரும் தமிழ் அறிஞர்களின் பேச்சுக்களை ஏன் இடையிடையே நிறுத்தினார்கள் என்று தெரியவில்லை! நேரம் ஆகிறது என்பதற்காக இருக்கலாம். இவ்வளவு அறிஞர்கள் கலந்துகொண்ட இந்த விழாவை வானொலி நிலையத்தார் நேரடியாகவே அஞ்சல் செய்திருக்கலாம். அதைச் செய்யவில்லை; ஒலிப்பதிவையாவது முழுதுமாகச் செய்திருக்கலாம்; அதையும் செய்யாமல் தொண்டையில் அம்பையா வைத்து விட்டார்கள்!

சில மாதங்களுக்கு முன் நடந்த கிரிக்கெட் பந்தயங்களை நாள் முழுவதும் அஞ்சல் செய்யவில்லையா? அந்தக் கிரிக்கெட்டை விட, இந்தக் கம்பன்விழா அப்படி என்ன மட்டம்?

வெளிநாட்டிலுள்ள தமிழர்களுக்குத் தமிழ் அறிஞர்தம் பேச்சைக் கேட்கும் வாய்ப்பு மிகமிகக் குறைவு. விசா, செலாவணி போன்ற கட்டுப்பாட்டால் தமிழர்கள் தமிழ் நாட்டுக்கு அடிக்கடி வர முடிவதில்லை. இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தமிழர்கள் (குறிப்பாக வெளிநாட்டுத் தமிழர்கள்) இழக்கக் காரணமாக இருந்தனர் வானொலி நிலையத்தார்.

புத்தளம் (இலங்கை)

31-3-64 புத்தளம் — ப. முருக

துக்கடா

டாக்டர் அல்பிரெட் எட்லர் என்பவர் புகழ்பெற்ற மனத் தத்துவ நிபுணர். ஒரு நாள் அவர் ஒரு கூட்டத்தில் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்தார்.

பேச்சுக்கிடையில், ''மனிதனின் முன்னை குறைகளே அவனைப் பெரும்பாலும் ஒரு முக்கியமான லட்சியத்தில் ஈடுபடச் செய்கிறது. உதாரணமாக, ஒருவன் பார்வையில் குறையுள்ளவனாயிருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவனுக்குச் சித்திரக் கலையில் நாட்டம் செல்லும் ... போல.....'' என்று தொடங்கினார்.

கூட்டத்தின் நடுவில் ஒருவர் எழுந்து, ''டாக்டர், எட்லர்! ஒரு சிறு சந்தேகம். அப்படியானால் மூளைக் குறையுள்ளவர்கள்தான் பெரும்பாலும் மனத் தத்துவத்தில் நாட்டம் கொள்ளுகிறார்கள் என்று சொல்லலாமா?'' என்று கேட்டார். கூட்டத்திலிடையே 'கலகல' ஒலி எழுந்திருந்தால் அது மக்களின் ரசிகத் தன்மைக் குறைவுக்குக் காரணமாகாதே ?

* * *

பல்லாங்குழி நம் வீட்டுப் பெண்மணிகளுக்குத் தண்ணீர் பட்டபாடு. காலா என்ற பெயரில் அமெரிக்காவில் இதைப் பிரபலப்படுத்தி வில்லியம் சாம்பியன் என்பவர் நல்ல பெயர் தட்டிக் கொண்டு போனதுடன் நிறையப் பணமும் சம்பாதித்து வருகிறார். இதை ஆப்பிரிக்காவிலும், ஏழாயிரம் வருஷங்களுக்கு முன்னால் ஸைபேரியாவிலும் ஆடி வந்தார்கள் என்று கண்டுபிடித்துக் கூறியவர், இதனால் குழந்தைகளுக்குக் கணக்குப் போட வரும் என்றும் எடுத்துக் காட்டத் தவறவில்லை. ரூ. 22½ முதல் ரூ. 125 வரை விலையுள்ள பல்லாங்குழிகளை 24 டிஸைன்களில் தயாரித்து விற்கிறார் வில்லியம்!

* * *

''பத்திரமான வேலையில் ஒரு பத்து நிமிஷம் கண்ணயரலாம் என்றால் நேரம் கிடைக்க மாட்டேனென்கிறது'' என்று வீட்டிலுள்ள பெண்மணிகள் குறைப்பட்டுக் கொள்வது சகஜம். பின்லாண்டிலோ போய்மை வில்கிரோ என்பவர் பதினாறு நாட்களும் பத்து மணி நேரமும் தூங்காமலே இருந்தாராம். அவருக்கு எப்படி இருந்திருக்கும்? விழிப்புடன் இருப்பதில் உலக சாம்பியன் இவர்தான்!

* * *

நியாய ஸ்தலத்தில் ஒரு குழந்தை சாட்சியம் சொல்லிக் கொண்டிருந்தது. நீதிபதி நடுவில் குறுக்கிட்டு, ''உனக்கு யாராவது ஏதாவது சொல்லிக் கொடுத்தார்களா, அம்மா?'' என்று கேட்டார்.

''ஆமாம்!'' என்றது குழந்தை.

''யுவர் ஆனர்! நான் படித்துப் படித்துச் சொன்னேன், இந்தக் குழந்தைக்கு யாரோ சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் என்று! இப்பொழுது இந்தக் குழந்தையே அதை ஒப்புக் கொள்கிறது. பார்த்தீர்களா?'' என்றார் எதிர்க் கட்சி வக்கீல்.

எதிர்க் கட்சி வக்கீலைப் பேசாமல் இருக்கச் சொல்லி விட்டு, ''யார் அம்மா சொல்லிக் கொடுத்தார்கள்? என்ன அம்மா சொல்லிக் கொடுத்தார்கள்?'' என்று நீதிபதி நயமாகக் கேட்டார்.

''என் அப்பா சொல்லிக் கொடுத்தார்.''

''பார்த்தீர்களா?'' என்று ஆரம்பித்தார் எதிர்க் கட்சி வக்கீல்.

அவரை மீண்டும் அடக்கி விட்டு, ''என்ன சொல்லிக் கொடுத்தார்? பயப்படாமல் சொல்லு!'' என்றார் நீதிபதி.

''கோர்ட்டில் எதிர்க் கட்சி வக்கீல்கள் குறுக்கிட்டுக் குறுக்கிட்டுத் தொந்தரவு தருவார்கள். இருந்தாலும் நீ பயப்படாமல் நடந்ததைச் சொல்லு. உண்மைக்கு எப்பொழுதும் வெற்றி நிச்சயம் என்று என் அப்பா சொல்லிக் கொடுத்தார்!'' என்றது குழந்தை.

* * *

பதினெட்டங்குல விட்டமுள்ள பிளாஸ்டிக் பலூன் ஒன்று இருக்கிறது. பலூனை வாயினால் ஊதிக் கொள்வது போல், இதையும் காற்றடைத்துப் பருக்கச் செய்யலாம். அப்போது பார்த்தால் இது தேசப் படங்களுடன் கூடிய உருண்டையான உலகமாகக் காட்சி தரும். இதன் விலை என்ன தெரியுமா? ரூபாய் நூறு மட்டும்!

* * *

சர்ச்சிலுக்கு எண்பதாவது பிறந்த தின விழா அன்று அவரைப் படம் பிடிக்கப் பல புகைப்படக்காரர்கள் வந்தார்கள். அவர்களில் ஒருவர் புன்முறுவலுடன், ''தங்களுக்கு நூறாவது பிறந்த தின விழாவன்றும் நான் புகைப்படம் எடுக்க வருவேன் என்று நம்புகிறேன்!'' என்றார்.

சர்ச்சில் அவரை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். ''ஏன் கூடாது? சாதாரணமாக, உன் உடல் நிலை நன்றாகத்தான் இருக்கிறது. அதற்குள் ஏதும் விபரீதம் நேர்ந்து விடும் என்று தோன்றவில்லை!'' என்று ஒரு போடு போட்டார்.

* * *

இது வரை நான் குறைந்த கூலியில் வர்ணம் அடித்து வந்தேன் என்பது உண்மையே. இனியும் அம்மாதிரி முடியும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், நான் விரைவிலேயே திருமணம் செய்து கொள்வதாக இருக்கிறேன். எனது இந்தச் சலுகையைப் பெற விரும்பும் நேயர்கள் விரைவில் முந்துக!



- விசித்திர விளம்பரம்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.


நம்பிக்கையோடு தேர்ந்தெடுங்கள்
INDIA SUPER
இந்தியா சூப்பர்
மிகச் சிறந்த நவீன கார் டயர்
இந்தியா டயர் அண்ட் ரப்பர் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.,

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon